# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை:9 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 24 சனிக்கிழமை (06-05-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:49


# ஈழத் தமிழரைப் பாதிக்காத வகையில் எந்த முடிவையும் இந்தியா எடுக்கலாம்!

## வாஜ்பாயுடனான பேச்சில் கருணாநிதி பச்சைக்கொடி

புதுடில்லி,மே6

**"இலங்கை விவகாரத்தில், இந்தியாவின் தேசிய நலனைக் கருத்தில் கொண்டு - அதேசமயம் ஈழத் தமிழர்களைப் பாதிக்காத வகையில் - பொருத்தமான எந்த நடவடிக்கையையும் இந்திய மத்திய அரசு எடுக்கலாம். இது விடயத்தில் மத்திய அரசின் கைகளைக் கட்டிப்போட நாம் விரும்பவில்லை."**

**- இவ்வாறு இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடனான தமது சந்திப்பை அடுத்து நேற்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி அறிவித்தார்.**

"இலங்கைக்கு எந்த வகையிலும் இந்தியா உதவக்கூடாது" என்று நேற்றைக்கு முன்னர் வரை கூறிவந்த கருணாநிதி வாஜ்பாயுடனான நேற்றைய சந்திப்பை அடுத்து தமது நிலைப்பாட்டைப் பெரிதும் மாற்றிக் கொண்டுவிட்டார் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

இந்தச் சந்திப்பில் தி.மு.கவைச் சேர்ந்தவரான வர்த்தக அமைச்சர் முரசொலிமாறன், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங், பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி ஆகியோரும் பங்குபற்றினர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இராணுவ உதவி பாகிஸ்தானும் வழங்கமாட்டாது

இலங்கைக்கு பாகிஸ்தான் இராணுவ உதவி எதனையும் வழங்காது என்று அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் சிக்கியுள்ள படையினரை மீட்க உதவும்படி இலங்கை அரசு கோரிக்கை விடுத்திருந்தது என்றும் -

இராணுவ ரீதியான உதவி எதனையும் வழங்கத் தாம் தயாரில்லை என்றும் -

மனிதாபிமான உதவிகளை வழங்கத்தயாராக இருப்பதாக அந்த நாட்டுக்குத் தகவல் அனுப்பியுள்ளதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார் என ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

அதே சமயம் -

இலங்கை அரசு விடுத்துள்ள கோரிக்கையை இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாடுகள் ஏற்றுள்ளதாக அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இலங்கை விடுத்துள்ள கோரிக்கைகள் தொடர்பாக ஆராய ரஷ்யா ஒரு குழுவை கொழும்புக்கு அனுப்பவிருக்கிறது. (உ-க-3)

## உத்தேசத் தீர்வுத்திட்டம் தொடர்பான அரசு - ஐ.தே.க. பேச்சில் முன்னேற்றம்?

தீர்வுத்திட்டம் தொடர்பாகப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஐ.தே.க. தூதுக்குழுக்களுக்கிடையில் அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது -

1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அரசு முன்வைத்த அரசமைப்பின் நகல் திட்டத்தின் 9ஆவது அத்தியாயத்தில் சகல அம்சங்கள் குறித்தும் பொது இணக்கப்பாடு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்தமதம், அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும், மொழி, பிரஜாவுரிமை, அரசின் கொள்கை அடிப்படைகளும் அடிப்படைக் கடமைகளும், பிராந்தியசபைகளை நிறுவுதல், ஆளுநர்களை நியமித்தலும் அவர்களின் அதிகாரங்களும், பிராந்திய சபை அமைச்சர்கள், முதலமைச்சர்கள், நீதி நிர்வாக நடவடிக்கைகளுக்கான அமைச்சர்கள், நீதித்துறையில் சுதந்திரம், உயர் நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம், பிராந்திய நீதிமன்றம் ஆகிய விடயங்களிலேயே இணக்கம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க.குழு பங்குபற்றியது.

(உ-3-4)

## இஸ்ரேலுடன் உறவு: அமெரிக்கா மகிழ்ச்சி!

கொழும்பு,மே6

இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவது என்ற இலங்கை அரசாங்கத்தின் முடிவை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்கள அதிகாரியான றிச்சர்ட் பௌஷ இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் -

"இஸ்ரேலுடன் நெருங்கிய ஒத்துழைப்பை மேற்கொள்ளும் இலங்கையின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா பெரிதும் ஊக்கம் அளிக்கும்.

"1970ஆம் ஆண்டு முற்பகுதியில் இடைநிறுத்தப்பட்ட இரு நாடுகளின் உறவுகளைப் புதுப்பிப்பதற்கான நோக்கங்கள் குறித்து அவ்விருநாடுகளும் ஆராய்ந்து கொள்ளும்" - என்றார்.

இலங்கையின் முடிவை வரவேற்றுள்ள முதலாவது நாடு அமெரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலியக் குழு இலங்கை வருகிறது!

கொழும்பு,மே6

இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவது என்ற இலங்கை அரசின் அறிவிப்பை அடுத்து-

அங்கிருந்து உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று ஓரிரு தினங்களில் இலங்கை வரவிருக்கின்றது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தமது நாடு அளிக்க வேண்டிய பங்கு குறித்து இந்தக் குழு இங்கு விவாதிக்கும் என்று கூறப்பட்டது.

ராஜதந்திர உறவை மீண்டும் ஏற்படுத்தும் இலங்கை அரசாங்கத்தின் கடிதம் கிடைத்ததும் இஸ்ரேலின் பிரதமர் மகிழ்வடைந்தார் என்றும்-

எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய இலங்கையும் ஒரு குழுவை இஸ்ரேலுக்கு அனுப்பவிருக்கின்றது என்றும்-

இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் டேவிட் லெவி கூறினார்.

(உ-க-3)

## கிளாலியில் புலிகள் மீது தாக்குதல்கள் தீவிரம்!

கொழும்பு,மே6

கிளாலியில் தாம் நடத்தும் பலத்த தாக்குதல்கள் காரணமாக விடுதலைப்புலிகள் தெற்கே பின்வாங்குவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று கொழும்பில் அறிவித்தன.

கிளாலியில் படையினரைப் பின்தள்ளுவதற்கு புலிகள் எடுத்த பல்வேறு முயற்சிகள் முறியடிக்கப்பட்டன என்றும் - படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தியுள்ளனர் என்றும்-

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(உ-க-7)

### பணம் மீளளிப்பு

குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமானம் மூலம் செல்ல பயணச்சீட்டுப் பெற்றவர்களுக்கான மீளளிப்புக் கொடுப்பனவுப் பணி மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை நண்பகல் 11மணிக்குப் பின்னர் இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்றும், நாளையும் இந்தப் பணி இடம்பெறாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

### 15 மாணவர் இடைநிறுத்தம்

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 'ராகிங்' சம்பவங்கள் தொடர்பாக 15 மாணவர்கள் கல்லூரி நிர்வாகத்தினால் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை கல்லூரியின் பதிவாளர் செல்வி பொன்னம்பலம் உறுதி செய்துள்ளார். (உ-3-4)

### சடலம் ஒப்படைப்பு

மீசாலைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரின் சடலத்தை சாவகச்சேரிப் பொலீஸார் நேற்று மாலை யாழ்.வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இந்தச்சடலம் அடையாளம் காண்பதற்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(உ-3-5-15-31-139)

## ஐ.தே.கவின் எம்.பிக்கள் நேற்று அமைதி ஊர்வலம்

பொலீஸாரின் தடைகளை மீறி ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு சுதந்திர சதுக்கம் பகுதியில் அமைதியான ஊர்வலம் ஒன்றை நேற்றுக்காலை நடத்தினர்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசு அறிவித்துள்ள சட்டவிதிகளைக் கண்டித்தே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

சுதந்திர சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்காக சுதந்திர சதுக்க வீதிக்கு 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்றனர்.

அங்கு வீதித் தடைகளைப் போட்டிருந்த பொலீஸார் அவர்களை சதுக்கத்துக்குள் செல்லவிடாது தடுத்தனர்.

தடையை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலீஸார் எச்சரித்தனர்.

அந்தத் தடைகளைத் தாண்டி அமைதியாக ஊர்வலமாகச் சென்ற அவர்கள் அங்கு டி.எஸ்.சேனநாயக்கா சிலைக்கு முன்பாகக் கூடி உரையாற்றிய பின்னர் நண்பகலில் கலைந்து சென்றனர்.

(உ-3-7)

## அசிட்டினால் முகம் சிதைக்கப்பட்ட இளம் பெண்ணின் சடலம் கோண்டாவில் மயானத்தில்!

மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் சுமார் 30வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருவரின் சடலம் உரப்பை ஒன்றுக்குள் போடப்பட்ட நிலையில் கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி மயானப்பகுதியில் இருந்து நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

தலை மட்டும் வெளியே தெரியக் கூடிய வகையில் உரப்பைக்குள் போடப்பட்டிருந்த அந்தச் சடலத்தில் அடி காயங்கள் காணப்பட்டன. முகம் அசிட் வீசப்பட்டு சிதைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சடலத்தை பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு நேரில் பார்வையிட்டார். அவரின் உத்தரவின் பேரில் கோப்பாய் பொலீஸார் சடலத்தை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

(உ-3-5-10-15-103-139)

## மிலேனிய ஆண்டில் அகவை ஒன்று



செல்வன்

## கமலநாதன் பானுஜென்

கொழும்புத்துறையைச் சேர்ந்த
கமலநாதன் – சந்திரமலர் தம்பதிகளின்
அருஞ்செல்வப் புதல்வன்

**செல்வன் க. பானுஜென்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (06-05-2000) சனிக்கிழமை அவரது அத்தையின் இல்லத்தில் வெகு விமரிசையாக் கொண்டாடுகிறார்.

பானுஜெனை அவரது அப்பா, அம்மா, அம்மம்மா, அத்தைமார், மாமாமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், இத்தாலியில் இருக்கும் குட்டி அன்ரி, சித்தப்பா குடும்பத்தினர், அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார், அத்தான்மார் அனைவரும் கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார், நல்லைக் கந்தன், ஆது முத்துமாரி அம்மன், ஆந்திரான் முருகன் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

இல. 58, பிரப்பங்குளம் லேன்,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**ஆதித்தன்**
(அத்தான்)

## முதலாம் மாதநினைவுகளில்



அமரர்

**திருமதி கனகம்மா பொன்னம்பலம்**

(தாவடி அமரர் பரமு வைத்தியரின் மனைவி)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 07-04-1912 | 04-04-2000 |

தாவடியூரில் 04-04-2000 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள்.**

Dr. பொ.இராமநாதன்,
கனகதாரா,
தாவடிச் சந்தி,
கொக்குவில்.

(76038)

### நாளை

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ் சுகவாழ்வு நிறுவனம் நடத்தும் சிறுவர் கழக உள விளையாட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுகவாழ்வு நிறுவனச் செயலாளர் தலைமையில் இடம்பெறும்.

(ஜ-185)

## ராஜா

யாழ்ப்பாணம்.
4ஆவது வெற்றி வாரமாக
*அஜித். ஷாலினி*
நடிப்பில்

**அமர்க்களம்**

காட்சிகள்
10.30, 2.00, 5.00

(C/11604)

## நாகம்ஸ்

சுன்னாகம்.
*விஜய். ஷாலினி.*
நடித்த

**கண்ணுக்குள் நிலவு**

(ரீலஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)

(75981)

## லிபேட்டி

அச்சுவேலி.
இன்று மட்டும்
பார்த்திபன், கௌசல்யா
பிரபுதேவா
நடிப்பில்

**ஜேம்ஸ் பாண்ட்**

(புதிய வெளியீடு)
காட்சிகள் :10.30, 2.30
T.P- 070-212223
- 070-212678
FAX No. 0094 - 70212223

(75999)

## கணக்கீடு

திரு. பாலவாசன்
**A/L 2002**
தனி வியாபார
முடிவுக்கணக்கு
Sat., Sun. 7-8 a.m
**ஆரம்பம்:**
07-05-2K Sun

**விக்னா**
**கல்வி நிறுவனம்**

(76031)

## NAVARAJAN INSTITUTE
### சித்தன்கேணி

| O/L DAY CLASS 2ஆம் பிரிவு | A/L 2002/2001 |
|---|---|
| கணிதம் | பொருளியல |
| நவராஜன் | ஞானேஸ்வரன் |
| விஞ்ஞானம் | கணக்கீடு |
| சற்குணராசா | தவா |
| சமூகக்கல்வி | வணிகக்கல்வி |
| திருக்குமார் | சத்தியதாசன் |
| தமிழ் | பொதுவிவேகம் |
| ஆர்த்திகன் | S.நவா |
| ஆங்கிலம | தமிழ் |
| செபரட்னம் | ஆர்த்திகன் |
| சமயம் | இ.நாகரீகம் |
| K.தரன் | K.தரன் |
| வர்த்தகம் | புவியியல் |
| T.குமார் | ஞானேஸ்வரன் |
| விவசாயம் | நாடகம் |
| K.சீலன். | சந்திரன் |

**5 ஆம் திகதி ஆரம்பமாகிவிட்டன.**

*O/L DAY, EVENING CLASS*

கணித வகுப்பு கிழமையில் 9.00 மணி நேரம் நடைபெறுகின்றன.

(76037)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கோசலாதேவி ஸ்ரீகணேசா

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகக் கொண்டவருமான காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஸ்ரீகணேசா அவர்களின் அன்பு மனைவி திருமதி கோசலாதேவி ஸ்ரீகணேசா அவர்கள் 03-05-2000அன்று கொழும்பில் இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - அன்னபூரணம் தம்பதிகளின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான சட்டத்தரணி இரத்தினசிங்கம் யோகம்மா தம்பதிகளின் மருமகளும் சிவகுமார், இரத்தினகுமார், யோககுமாரி, தனேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தகௌரி, பாமதி, ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மு.சிவபாக்கியம், செ.சாரதாதேவி, சீ.சண்முகலிங்கம், காலஞ்சென்றவர்களான சீ.குகதாசன், கு.புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.05.2000) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர் யாவர்க்கும் அறியத் தருகிறோம்.

402, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(76041)

தகவல்:
சீ.சண்முகலிங்கம்
(சகோதரன்)

### திருமதி முருகையா இலட்சுமியம்மா

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட (முன்னாள் நிர்வாகஉத்தியோகத்தர் இலங்கை மின்சாரசபை கொழும்பு) குழந்தைவேலு முருகையாவின் அன்புமனைவி முருகையா இலட்சுமியம்மா நேற்று (05-05-2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-05-2000) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மஞ்சத்தடி,
இணுவில்.

(76043)

தகவல்
நா.அருளானந்தம்
(மருமகன்)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளைத் தலைமையகம்

அகில உலக செஞ்சிலுவைத் தினத்திற்காக 02-05-2000 அன்று நடைபெற்ற மாணவர்களுக்கான செஞ்சிலுவைச் சங்க பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் பரிசில் பெறும் மாணவர்களது விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மு. விவேகானந்தன்- | வீரசிங்கம் மகாவித்தியாலயம் சாவகச்சேரி | - 1 ஆம் பரிசு |
| 2. | ம. மயூரனி - | இந்துக்கல்லூரி சாவகச்சேரி | - 2 ஆம் பரிசு |
| 3. | த. பிரபாகரன் - | விக்டோறியா கல்லூரி சுழிபுரம் | - 3 ஆம் பரிசு |

ஆறுதல் பரிசு:

| | | | |
|---|---|---|---|
| 1. | பே. துஷ்யந்தன் | இந்துக்கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 2. | த. நிவேதா | இந்துக்கல்லூரி | சாவகச்சேரி |
| 3. | க. அஜந்தன் | " | " |
| 4. | நா. துஷானி | " | " |
| 5. | ந. கலைவாணி | " | " |
| 6. | தி. கௌவேணி | " | " |
| 7. | த. பிரியங்கன் | பரியோவான் கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 8. | இ. சுதாகரன் | வீரசிங்கம் மகாவித்தியாலயம் | சாவகச்சேரி |

*மேற்படி மாணவர்களுக்கான பரிசில்கள் 08-05-2000 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு இருபாலை – யாழ் – பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள இ. செ. சி. சங்க ஆரம்ப சுகாதார கேட்போர் கூடத்தில் பிரதமவிருந்தினர் அவர்களால் வழங்கப்படும்.*

* பரிசில் பெறும் மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம் *

73, கண்டிவீதி யாழ்ப்பாணம்

(C/12050)

செயலாளர்
செ.சி.சங்கம்



வலி.கிழக்கு பிரதேச சபையும் பிரதேச சபைக்கு உட்பட்ட சன சமூக நிலையங்களும் பொதுஸ்தாபனங்களும் இணைந்து நடத்திய மேதினக்கூட்டம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர். பூ.குணசிங்கம் உரையாற்றுவதையும் பேச்சாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்:- வலி.கிழக்கு, செய்தியாளர்.)*

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1937 - 05 - 18



உதிர்வு 1994 - 04 - 14

## அமரர் மாணிக்கம் கந்தசாமி

(ஆசிரியர் - யா/உயரப்புலம் மெ. மி. த. க. வித்தியாலயம்)

திதி: 06-04-2000

நீர் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஆறு
ஓடி மறைந்தாலும்
எம் உயிர்கள் இருக்கும்வரை
உள்ளத்தில் நிலைத்திருப்பீர்!

என்றும் உங்கள் நினைவில்
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

திருவேரகம்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(76026)

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 - 08 - 1936



விண்ணில் 18 - 05 - 1999

அனலையூர்

## ஸ்ரீமதி மங்கையர்க்கரசி தியாகராசா

திதி: 06-05-2000

**பிரகாசமான பிரமாதி வருடம் வைகாசித் திங்கள்**
**ஒளிமயமான திருதியை நன்னாளம் விளங்கு புகழ்**
**அனலை சேர் தியாகராசா மங்கையர்க்கரசி அம்மையார்**
**சிவகதியடைந்த தினம்.**

**எம்மையெல்லாம் வழி நடத்திய அம்மாவை**
**இனி எப்பிறப்பில் தான் காண்போம்!**

*கண்கண்ட தெய்வமான பாசமிகு அம்மாவின்*
*ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல கணேஸ்வரப்*
*பெருமானை பணிந்து வணங்கி வேண்டுகிறோம்.*

***கணவர், பிள்ளைகள்,***
***மருமகள், பேரன்.***

தகவல்:-
இராசமூர்த்தி தியாகராஜா,
வாழ்வகம்,
மானிப்பாய்.

(76025)



கொக்குவில் மனோன்மணி பாலர் பாடசாலை சிறுவர் பூங்கா அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் செ.செல்வரட்ணம் பூங்காவை வைபவரீதியாக திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

*(படம்:- கொக்குவில் செய்தியாளர்)*

## ரவை மா விநியோகம்

குருநகர்,மே6

நல்லூர்ப் பகுதியிலுள்ள யாழ். ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு யாழ். ப.நோ.கூ. சங்கத்தினால் விற்பனைக்காக ரவை மா வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ ரவை மா 26 ரூபா வீதம் இக் கிளைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. (ஐ-51)

## விவரங்கள் பதிவு

வலி.தென்மேற்கு,மே6.

நவாலி வடக்கு (ஜே-134), நவாலி கிழக்கு (ஜே-135) பகுதிகளில் உள்ள வேலையற்ற இளைஞர் யுவதிகளின் விவரங்கள் இன்றும் நாளையும் சோமசுந்தரப்புலவர் வீதியில் உள்ள சமுர்த்தி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட உள்ளன.

ஜீ.ஜீ.ஈ. சாதாரணம், ஜீ.சீ.ஈ. உயர்தரம் சித்தியடைந்தோரும் வேலையற்ற பட்டதாரிகளும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் மற்றும் பட்டச் சான்றிதழ்களுடன் பதிவினை மேற்கொள்ளுமாறு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் செல்வராஜா சதீஸ் கேட்டுள்ளார்.

இதேவேளை -

கணவனை இழந்த அனைத்து பெண்களின் விவரங்களும் பதியப்பட இருப்பதனால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நவாலி வடக்கு, நவாலி கிழக்கு, பகுதியைச் சேர்ந்த விதவைகள் நவாலி வடக்கு சமுர்த்தி காரியாலயத்திற்கு ஆவணங்களுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-185)

## பத்தாவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,மே6

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவிழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள கில்னர் மண்டபத்தில் நடைபெறும்.

கழகத் தலைவர் செந்தில்குமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மேற்படி நிறுவனத் தலைவர் வே.மகேந்திரசிங்கம், நல்லூர் பிரதேச உதவிச் செயலர் சி.வேல்முருகோன்பிள்ளை, உடுவில் பிரதேச செயலர், ஆ.மகாலிங்கம், நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் ரி.சற்குணராஜா, யாழ் மாநகரசபை ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம், றூட் அமைப்பின் தலைவர் சே.செல்வகுமார், றூட் அமைப்பின் முன்னாள் தலைவர் க.சண்முகநாதன், கிறீஸ்தவக் கழகத் தலைவர் அன்ரன் லீனகே, நவீல்ட் பாடசாலை பழைய மாணவர் சங்கத் தலைவர் கா.துரைராஜா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவர். தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும். (ஐ-க-8)

## பண்ணிசைப் போட்டி

கொழும்புத்துறை,மே6

இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்திருநெறிய தமிழ் மறை கழகத்தால் நடத்தப்படும் பண்ணிசைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரியில்இடம்பெறவிருக்கின்றது. (இ-30)

## மணிக்கோபுர கும்பாபிஷேகம்

அரியாலை,மே6

கொழும்புத்துறைமேற்கு விநாயகர் ஆலயத்துக்கு புதிதாக அமைக்கப்பட்ட மணிக்கோபுரத்துக்கான கும்பாபிஷேக வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். (ஐ-17)

## கைதிகள் தப்பியோட்டம்

கொழும்பு,மே6

கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்கள் மொறட்டுவை பொலீஸ் நிலையத்தில் இருந்து கடந்த முதலாம் திகதி தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அன்றைய தினம் பொலீஸ் நிலையத்தில் காவல் கடமையில் இருந்த இரண்டு பொலீஸார் இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள்.

அன்றைய தினம் பொலீஸ் நிலையக் காவலரணின் இரும்புக் கம்பிகளை உடைத்துக்கொண்டு கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாகவும் -

அன்றைய தினம் காவல் கடமையில் இருந்த பொலீஸார் இருவரும் அச்சமயம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

## தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் இறுதி வருட வணிகத்துறை மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபம் III இல் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் - கௌரவிருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் வணிக பீடாதிபதி எம். நடராசசுந்தரம் வணிகத் துறைத் தலைவர் க.தேவராஜா ஆகியோரும் கலந்து கொள்வர். (க)

# பெண்கள் ஓய்வுபெறும் வயதை 50 ஆகக் குறைக்க சிபாரிசு

யாழ்ப்பாணம்,மே6

பெண் ஊழியர்கள் 50 வயதில் சேயைிலிருந்து ஓய்வுபெறும் வகையில் மாற்றங்களைச் செய்யத் தேவையான சிபார்சுகளைப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப் போவதாக மகளிர் விவகார அமைச்சர் ஹேமா ரட்ணாயக்கா தெரிவித்துள்ளார்.

பெண் ஊழியர் ஒருவர் தற்போது சேவையில் இருந்து ஓய்வு பெறும் வயது 55ஆக உள்ளது. இதனால் பெண்கள் தமது குடும்பத்தின் கடமைகளைச் செய்யமுடியாத நிலை ஏற்படுகின்றது என்றும்-

அதனாலேயே பெண்கள் 50 வயதில் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுப் பூரண ஓய்வூதிய சம்பளம் பெறும் வகையில் மாற்றம் கொண்டு வரப் பொதுநிர்வாக அமைச்சிடம் சிபார்சு செய்யப்போவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ-9)


**SOUTH ASIAN ARTS & CULTURAL CENTRE**

**தென் ஆசியக் கலைகள் மற்றும் கலாச்சார நிலையம்**

சமுதாய நலம் செழிக்க தன்னை முழுமையாக
அர்ப்பணித்த பேராசிரியர் அ.துரைராசா வழியில்
மீண்டும் ஒரு துணைவேந்தர்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை BA(Hons) PhD



(துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
(பிரதம ஆலோசகர் தென் ஆசியக் கலைகள் மற்றும் கலாச்சார நிலையம்)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க வளர்ச்சியில் ஒரு பொற்காலம் ஏற்படச் செய்ததுடன் உலக அரங்கிலும் வாகைசூடி, ஆயிரம் சொற்களுக்கும் சிக்காத ஒரு மந்திரப் புன்னகை முகத்துடன் இரண்டாவது தடவையும் துணைவேந்தராக பணிசெய்ய வந்த வேந்தே!

தங்கள் பணிசிறக்க உளமார வாழ்த்துகின்றோம்



ந.யோகராஜன் S.L.T.E.S.
பணிப்பாளர்
தென் ஆசியக் கலைகள் மற்றும்
கலாச்சார நிலையம்

# சின்னஞ்சிறு விளம்பரம்


## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (75940)

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (75933)

நியாய விலையில் சகல நிறைகளிலும் புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 54/2, சந்தனமாதா முன் ஒழுங்கை, கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். அல்லது 217/A, ஆஸ்பத்திரி வீதி, (முலவைச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (75968)

புறொயிலர் இறைச்சிக்கோழி, விறாத்துக் குஞ்சுகள் விற்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தினமும் தேவையான அளவுகளில் பெற்றிட தொடர்புகளுக்கு லக்கி, மதவடி ஒழுங்கை திருநெல்வேலி. (75996)

## பிறிமா புறோயிலர்

பிறிமா இன புறொயிலர் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறுகளில் சுத்தம் செய்தும் பாதிக்கோழியும் பெற்றுக் கொள்ளலாம். காலை 7-12 மணிவரை தொடர்பு V. S. 227, பிறவுண் வீதி, (கலட்டிச்சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (75877)

## விற்பனைக்கு

குறோட்டன், செவ்வரத்தை, சைப்பிரஸ், பாம்ஸ் என்பனவும் மலிவுவிலையில் சாடிகளும் விற்பனைக்குண்டு. S.பாக்கியநாதன் 152/2, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (75964)

## உடன் விற்பனைக்கு

ஒருகைப்பாவிப்பில் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும். சிங்கர் R-80 குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு ம. மல்லிகா கூழாவடி தபால் கந்தோருக்கு அண்மையில், ஆனைக்கோட்டை. (75915)

## தவறிவிட்டது

கந்தரப்படி வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சபாபதி ஆகிய எனது விசேட அ. அட்டை (இல.091 817119) நுணாவிலுக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் 24-04-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி விலாசத்திற்கோ அல்லது சாவகச்சேரி நவீன சந்தையிலுள்ள விமலன் நிறுவனத்திலோ ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (75954)

## இறைச்சிக்கோழிகள் விற்பனை

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை. நட்டப்பனையிலுவை ஜெட்பு 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) முத்திரைச் சந்தியடி, நல்லூர். (75951)

## MATHS, ENGLISH

O/L Credit, Distinction பெறுபேறுடைய ஆறவுபு அறிவிலன்தவ மும் Paper Class வரை தரிதமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, பின்புறம் திருநெல்வேலி. (75945)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1962 இல் பிறந்த லக்கினத்தில் செவ்வாய்க் குற்றமுடைய, அச்சுவினி 3 ஆம் பாதமுடைய பட்டதாரி, ஆசிரிய ஆலோசகருக்க் கிளிநொச்சியில் கடமை புரியும் மணமகனுக்கு கிளிநொச்சியில் சென்று வசிக்கக்கூடிய தகுதியுடைய உத்தியோக மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு விளம்பர இலக்கம் - 1054 பே/பா உதயன். (75969)

## ENGLISH / SINHALA

சிகல தரங்களுக்கும் விசேட வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறுகின்றன. பாடசாலை செல்லாதவர்கள் காலை 9.00 முதல் வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொள்ளலாம். T. Sagathevan B. A. London 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம். T.P 3520. (75907)

## ஒலி நாடா

வலி. தென்மேற்கு, மே 6

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் தொடர்பாக 'சந்நிதி வசந்தம் !!' என்ற ஒலி நாடா இசைக்கலைஞர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஜ-185)

## நேர்முகப்பரீட்சை அழைப்பு கடிதம் தாமதம்

வடமராட்சி, மே 6

உணவுத் திணைக்களத்தில் சிற்றூழியர் தரம் III க்கான (காரியாலய காரிய சேவகர்) நேர்முகப் பரீட்சையின் அழைப்புக் கடிதங்கள் நேர்முகப் பரீட்சைக்குப் பின்னரே உரியவர்களை வந்தடைந்துள்ளது.

உணவு ஆணையாளரால் நேர்முகப்பரீட்சைக்கென சிங்களத்தில் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் நேர்முகப்பரீட்சைக்குரிய தினம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் நேர்முகப்பரீட்சைத் திகதிக்குப் பின்னர் - ஒருவாரம் கழித்தே - யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு இக்கடிதங்கள் கிடைத்தன.

இதனால் விண்ணப்பதாரிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

(ஜ-173)

## றேடியன்ற் கல்வி நிறுவனம்

கச்சேரி கிழக்கு வீதி, சுண்டுக்குளி.

**A/L 2002**

ஆரம்பம்: 07-05-2000 ஞாயிறு 8.00 a.m.


| | |
|---|---|
| தமிழ் | - A. மீரா |
| அளவையியல் | - K.T.மோகன் |
| இந்துநாகரிகம் | - P. ஜோதீஸ்வரன் |
| | M. செல்வா |
| கிறிஸ்தவம் | - A. மல்லிகா |
| நாடகமும் அரங்கியலும் | - S. சுந்தா |
| பொதுவினா | - T. தவசேகர் |
| புவியியல் | - M. இக்னேசியஸ் |
| பிரத்தியேக கணக்கீடு | - S. கொலின்ஸ் |

* தரம் 6 இலிருந்து O/L வரை வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறுகின்றன.

(75928)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 - 01 - 1914



மறைவு 30 - 04 - 1996

அமரர் **அருணாசலம் கந்தையா**

(முன்னாள் பத்திரிகை ஏஜெண்ட்)

திதி: 06-05-2000 திரயோதசி

நான்காண்டு சென்றதையா ஆறவில்லை எம் இதயம். வாயார ஐயாவென்று அழைத்திடவே நீங்களில்லை. ஆறவில்லை எம் இதயம். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

க. இராசதுரை
கிராம அலுவலர்,
சிவன் ஒழுங்கை,
ஆவரங்கால்.

(75971)

## ஓராண்டதனில் நெஞ்சில் நீங்காத நினைவலைகள்

தாயின் மடியில் 1921 - 01 - 02



காலன் பிடியில் 1999 - 04 - 19

அமரர்

**குழந்தைவேலு சர்வலோகலட்சுமி**

திதி:- 2000-05-06

பெற்றெடுத்து ஆளாக்கி நற்றமிழை நமக்கூட்டி
உற்றதுணையாயிருந்தீர் இப்பற்றுலகைவிட்டு - இறை
கொற்றவனின் கழல்களை நீயேற்றியது ஏன் அம்மா?
கற்றவன் வந்தும்மைக் கூட்பிட்டழைத்தவேளை
ஏற்றவன் பின்னால் - எமைவிட்டுச் சென்றதேனோ?
தேசம் பல கடந்து வாசம் செய்த வேளை
மோசம் போனதேனோ?
நேற்றிருந்தமாதிரியாய் நெஞ்சம் நினைக்கிறதே
ஓராண்டானாலும் தீராண்ட கண்ணில்
நின்னுருவம் நிறையுதம்மா
ஆயிரம் ஆண்டானாலும் ஓயாதும் நினைவலைகள்
தாயுமை மறந்திடோம் - நீரெமக்காய் அமைத்திட்ட
சீர்வழியில் வாழ்ந்திடுவோம்
நின்னாத்ம சாந்திக்காய் நித்தமும் தொழுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

159/3,நல்லைலஷ்மி அவணியு,
கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(75961)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

அன்னை மடியில் 29 - 04 - 1934



ஆண்டவன் அடியில் 08 - 04 - 2000

அமரர்

**செல்லக்கதிரமலை குணசேகரம்**

(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் - இலங்கை துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனம் கொழும்பு)

08-04-2000 சனிக்கிழமை அன்று இறைவனடி எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இறுதிக்கிரியை ஏற்பாடுகளில் உதவிகள் வழங்கிய நண்பர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு ஆறுதலும் உதவிகளும் நல்கியவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 08-05-2000 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
கற்கோவளம்,
பருத்தித்துறை.

**மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.**

(C/1988)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 12 - 03 - 1949



இறைவன் அடியில் 18 - 04 - 1999

அமரர்

**தர்மலிங்கம் விவேகானந்தன்**

**(கண்ணா)**

(தலைமைக்காரியாலய கூட்டுறவுச் சங்க பரிசோதகர் - வவுனியா)

திதி: 06-05-2000

நடந்து வந்த பாதையிலே
தடம் பதித்து வந்தாய்.
கடந்த கால நினைவலைகள்
எமை வருத்த மறைந்தாய்.

*இறைஞ்சுகின்றோம் இறைபதத்தை*
*ஆத்ம சாந்திக்காக...*
*ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!*

**அன்னாரின் குடும்பத்தினர்**

இல. 7, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(75966)

# யுத்த நிலைமை பிரகடனத்துக்கு மகா சங்கத்தினர் பேராதரவு

கொழும்பு,மே6

நாடு முழுவதிலும் யுத்த நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருப்பதை பௌத்த மகா சங்கத்தினர் வரவேற்றுள்ளனர்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய உருகம ஸ்ரீ புத்தரசித்த ரட்ணபால தேரர் யுத்த நிலைமை பிரகடனம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் படையினர் பல்வேறு சிரமங்களின் மத்தியில் போராடுகின்றனர். படையினருக்கு வெற்றி கிடைக்க பொதுமக்கள் அனைவரும் இறைவழிபாட்டில் ஈடுபட வேண்டும் - என்றார்.

யுத்த நிலைமையை இல்லாமல் செய்வதற்காக தேவை ஏற்படின் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்வதில் தவறு இல்லை. அயல் நாடான இந்தியாவை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். (இ-7-4)

வவுனியா "ராகிங்"

## சிரேஷ்ட மாணவர்கள் இருவர் இடைநிறுத்தம்

வவுனியா,மே6

புகுமுக மாணவர்களை நிர்வாணமாக மைதானத்தில் ஓடவிட்டு "ராகிங்" கொடூரத்துக்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பாக வவுனியா தேசிய கல்விக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டு சிரேஷ்ட மாணவர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மேற்படி கல்விக் கல்லூரியில் இருந்து பயிற்சிக்காக பாடசாலைகளுக்கு வரும் ஆசிரிய மாணவர்களுக்கு தத்தமது பாடசாலைகளில் இடமளிப்பது இல்லையென தீர்மானித்துள்ளனர் என வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (இ-7)

# UNIVERSITY OF JAFFNA

SRI LANKA

## VACANCY

### POST OF REGISTRAR

Applications will be received by me for the post of Registrar, University of Jaffna, Sri Lanka, from suitable candidates on or before 31st July 2000. Applications should be made in the prescribed form and be sent under registered cover to the Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka, Thirunelvely, Jaffna. Application forms can be obtained from the Office of the Assistant Registrar/Establishments, of this University on a payment of Rs. 20/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's Counter of this University.

Those who wish to obtain forms by post are requested to send a Money Order/Postal Order for Rs. 20/- per form drawn in favour of the Bursar, University of Jaffna, Srilanka together with a self-addressed stamped envelope, 23X10 c.m in size to reach the Assistant Registrar/Establishments on or before 15 th June 2000.

**Salary Scale:**

(A-01) Rs. 23,600 - 8X550-28,000/- p.m.

Those who will be appointed permanently will be pleaced on an appropriate step of the above salary scale.

Those who will be appointed on secondment/contract will be paid a fixed monthly Salary of Rs. 23,600/-

(In addition, the allowances approved by the University Grants Commission will also be paid).

**Qualifications:**

1. A. Graduate who possess es a PhD or Masters Degree with research in administration or Management or other relevant field with not less than twelve (12) years administrative experience.

OR

B. A Graduate with a masters degree by examination or Diploma in Administration or Management with not less than fourteen (14) years administrative experience.

Internal applicants who are eligible in terms of UGC circular No: 657 may also apply in response to this advertisement.

Note: 'Administrative Experience' means, experience gained in a post in the Srilanka administrative service or in a comparable or a higher post after obtaining a degree from a recognised University. The term 'Administrative experience' also means that the experience gained in general administration or overall management of an organization and that experience gained in a specialized field such as finance, Engineering or other Technical field by itself is inadequate for this purpose.

Age: Not more than 45 years

(This age limit shall however not apply to those in the University system, Government Departments, State Corporations and Statutory Bodies).

Those who are in Public Service/Corporation/Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/Corporations/Boards. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

- VICE CHANCELLOR

(C/12038)

## அகதிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

இராமேஸ்வரம்,மே5

இலங்கையில் இருந்து கடந்த 10 நாள்களில் 150 இலங்கைத் தமிழர்கள் மண்டபம் முகாமுக்கு வந்து சேர்ந்துள்ளனர் என்று இராமநாதபுரம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சேசஷாயி தெரிவித்தார்.

இலங்கையில் யுத்தம் தீவிரமடைந்துள்ளதாலேயே அவர்கள் வந்துள்ளனர் என்று அவர் கூறினார். (இ-3)

## விமானங்கள் வாங்க முடிவு

கொழும்பு,மே6

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் படையினரின் தேவைகளுக்குப் பயன்படுத்தவென ஒரு தொகுதி பயணிகள் விமானங்களையும், சரக்கு விமானங்களையும் இலங்கை அரசாங்கம் விரைவில் கொள்வனவு செய்யும் என செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

கடந்த வாரம் நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை,மே6

தற்போதைய யுத்த சூழ்நிலையினால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்த கலந்துரையாடலில் சகல இந்து இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகளையும், இந்து சமய நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளும்படி பேரவையின் தலைவர் கேட்டுள்ளார். (இ-4-30)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,மே6

யாழ். மாவட்ட பட்டதாரி ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு பட்டதாரி ஆசிரியர் சேவையில் பாதிப்புற்ற சகலரும் தமது ஆவணங்களுடன் சமூகம் தரும்படி சங்கத்தின் செயலாளர் வே.கெ.தனபாலன் கேட்டுள்ளார். (இ-4-30)

## நோயாளர் கப்பல் சேவை

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரி தெரிவித்தார்.

எதிர்வரும் 16ஆம், 23ஆம், 26ஆம் திகதிகளிலும் காங்கேசனில் இருந்து இந்தச் சேவை இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## மெய்வன்மைப் போட்டி

தீவக வலய கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்று காலை 9.00 மணி முதல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

கட்டணம் செலுத்தாத

# 35 பாடசாலைகளுக்கு மின்சாரம் துண்டிப்பு

கொழும்பு,மே6

நிலுவையாக இருந்த மின் கட்டணத்தைச் செலுத்தத் தவறிய அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களைச் சேர்ந்த 35 பாடசாலைகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 25 லட்சம் ரூபா வரையிலான நிலுவை செலுத்தப்படாதிருந்ததாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் -

எனினும் அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலை விடுதிகளுக்கான மின் விநியோகத்தை தற்காலிகமாக வழங்கியுள்ளதாகவும் -

இலங்கை மின்சார சபை பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு தலைமை அலுவலகத்தின் உத்தரவின் பேரிலேயே இந்த மின்துண்டிப்பு இடம்பெற்றதாகவும் -

கட்டணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் வைத்தியசாலைகளுக்கான மின்விநியோகத்தையும் துண்டிக்குமாறு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## மேதினப் பேரணிகள்

பாரிஸ்,மே6

புலம்பெயர்ந்து சுவிஸ், பிரான்ஸ் மற்றும் ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் மேதினத்தன்று தத்தமது நாடுகளில் மேதினப் பேரணிகளை நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-க-7)

## நீங்கா நினைவில் 4அவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 - 01 - 1948



உதிர்வு 20 - 04 - 1996

### அமரர் கதிரவேலு பரமலிங்கம்

(முன்னாள் கார் புறோக்கர்)

**திதி: 06-05-2000**

நாடு போற்ற அன்பை நம்மீது நீர் இறைத்து
கூடி வலம் வந்தீரே கூறாமல் சென்றுவிட்டீர்
பாடுபட்ட பயனை நீர் பலரிடம் காணுமுன்னே
கூடுவிட்டு நீர் விரைந்து கூடியதேன் சொர்க்கத்தில்
பாடுபட்டோம் உம் வாழ்வு பக்குவமாய் நிலைக்குமென்று
நீடுவாழ உம் நெஞ்சம் நினைக்கவில்லை தோற்றுவிட்டோம்
வீடு விளங்க நீர் வீற்றிருந்த அந்நினைவு
விட்டகலாதென்றும் வீடு பெற வேண்டுகின்றோம்.

துயருடன் நினைவுகூரும்
மனைவி. பிள்ளைகள்.

*முத்துமாரி அம்மன் கோயிலடி,*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*

(C/12041)

## நீங்கா நினைவலைகள்

### ஓராண்டு நீங்கா நினைவு



**திருமதி ஜெயமதி றோய்**

இவ்வுலகில் 22-04-1958 — விண்ணுலகில் 05-05-1999

எம்மை மறந்து
உந்தன் முடிவைத் தேடியதால்
எமை இழந்து நாம் தவிக்க
இன்றுடன் ஓராண்டாகின்றது.
நினைவழியா உன்
நினைவுகள்
எங்கள் உள்ளத்தை நிறைத்து
நிற்க
கலங்கரை விளக்கே உனைக்
காணாமல் கண்களிரண்டும்
கண்ணீராய் கரைந்திடுதே.

*உன் பிரிவால் துயருறும்*
*அன்புக் கணவன்,*
*பிள்ளைகள், தாய்,*
*சகோதரிகள், உற்றார்,*
*உறவினர்கள்.*

### 53ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி றெஜீனா அந்தோனிப்பிள்ளை**

இவ்வுலகில் 07-03-1932 — விண்ணுலகில் 15-03-2000

சிரித்த முகம் கொண்டவளே
அன்பின் இலக்கணமாய்
பண்பின் உறைவிடமாய்
வாழ் முழுவதும்
குலவிளக்காய்
எமக்காகவே வாழ்ந்த
அன்புத் தாயே!
எங்களைவிட்டுப் பிரிந்து
ஐம்பத்து மூன்று நாள்கள்
கழிந்ததுவோ
ஆனாலும் உங்களை விட்டு
எம் துயர் நீங்கவில்லை.

*உம்பிரிவால் துயருறும்*
*பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,*
*உற்றார், உறவினர்.*

(C/12020)

# இடம்பெயர்ந்தோருக்கு மருத்துவமாணவர் உதவி

யாழ்ப்பாணம்,மேர்6

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் மூன்று கட்டங்களாக உலர்உணவு, உடுபுடைவைகள் என்பனவற்றை வழங்கியுள்ளனர்.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட பொருள்களே இவர்களால் எடுத்துச் செல்லப்பட்டு நலன்புரி நிலையங்களுக்கு வழங்கப்பட்டன.

இதற்காக மனிதாபிமான அடிப்படையில் உதவி வழங்கிய மக்களுக்கும் இதன்போது சேவையாற்றிய மாணவர்களுக்கும் நன்றி தெரிவித்து மருத்துவ மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (இ-4)

## தமிழக மீனவர் கொலை:

# அரசின் நடவடிக்கை குறித்து எதிரணியினர் குற்றச்சாட்டு

சென்னை,மே6

இலங்கைக கடற்படையால தமிழக மீனவர்கள் சுடப்பட்டது குறித்து தமிழ்நாடு சட்டசபையில் தி.மு.க. அரசு மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.

இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து இத்தகைய அத்துமீறல்களில் ஈடுபடுவதாகவும், இதனைத் தடுத்து நிறுத்த மாநில அரசு தவறிவிட்டதாகவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதற்கு முதல்வர் கருணாநிதி பதிலளிக்கையில்,இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசின் கொள்கையை மாநில அரசும் கடைப்பிடிக்கும் என்றும், இந்திய - இலங்கை உறவு பாதிக்கப்படாத வகையில் மீனவர் கொலைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளதாக வும் தெரிவித்தார்.

1993 ஆம ஆண்டின பின் 80க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக் கடற்படை கொன்றுள்ளது. இது மிகவும் வேதனையானது என்றும் கருணாநிதி கூறினார்.

இந்தியக் கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் பலியானதுடன் ஒருவர் காயமடைந்தது தெரிந்ததே. (இ-ஒ)

# குண்டுவெடிப்பில் இளைஞர் பலி! தாய் உட்பட நால்வர் காயம்!!

## மட்டு. கல்லடியில் சம்பவம்

மட்டக்களப்பு கல்லடியில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்;·நால்வர் காயமடைந்தனர்.

தமிழ்க்குழு ஒன்றின் முன்னாள் உறுப்பினரான இவர் தனது வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தின்போது பிரஸ்தாப இளைஞர் சதீஸ்வரன்(வயது18) என்பவரது தாயார் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

ஜெய்சா(வயது7), அரியமலர் (வயது36), தேவிகா(வயது23), நந்தினி(வயது38) ஆகியோரே காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவரிடமிருந்த குண்டு வெடித்ததா அல்லது குண்டு வீசப்பட்டதா என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-8-9)


*மோட்டார் சைக்கிள் கடத்திச் செல்லப்பட்டுள்ளது*

**கண்டவர்கள்...**

E. No - V 90T - 223724 C. No-V 90T - 223724

உடைய மேற் ஜெமகா இன சிவப்பு நிற மோட்டார்சைக்கிள் ஒன்று திருநெல்வேலி சிவன்கோவில் பின் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் இருந்து 04-05-2000 அன்று கடத்தப்பட்டுவிட்டது. தயவுசெய்து அடையாளம் கண்டு கொண்டவர்கள் உடன் திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள தவரூபன் (ரூபன்) கடைக்கு அறியத்தரவும். (76028)



**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**

VADDUKODDAI

**1. Application Packages**
(Morning / Evening) Fees: 1,000/= each

* MS Word
* MS Excel
* MS Access
* Power Point
* Visual Basic

Duration: 3 Months

**2. Australian Computer Society**
(Fundamentals of Information Technology 1&2
Duration: 4 Months Fees: 2,000/=

***Courses Commence 8 th May 2000***

* Students Prepairing For National Certificate Computer Application (N.C.C.A)
Computer Exam will be Coached, Fees: 1,500/=

**Please Register by 10 th May 2000**
**Collect Application Forms JCIT, Vaddukoddai.**

Director,
Jaffna College Institute of Technology, (C/12047)


# அரியாலையை மையமாகக் கொண்டு பிரதேச செயலர் பிரிவை அமைக்குக!

## அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே6

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளின் சில பகுதிகளை இணைத்து அரியாலையை மையமாக வைத்து ஒரு புதிய பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்று அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக யாழ்.பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து பாஷையூர், சுண்டுக்குளி தென்கிழக்கு, நல்லூர் தென்கிழக்கு, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளையும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து அரியாலை, அரியாலை கிழக்கு, பூம்புகார் பகுதிகளையும் உள்ளடக்கி அரியாலையில் இந்த புதிய பிரதேச செயலர் பிரிவை அமைக்க முடியும்.

மேற்கூறப்பட்ட பிரதேசத்துள் 20 - 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இயங்குகின்றன. சுமார் 10 ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட 30ஆயிரம் மக்கள் இந்தப் பிரதேசத்தில் வாழ்கின்றனர். ஆகவே மக்களின் நன்மை கருதி இப்புதிய பிரதேச செயலாளர் பிரிவை உருவாக்கிச் செயற்படுத்துவதில் சம்பந்தப்பட்ட அரச நிர்வாகிகள் கவனம் செலுத்தவேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-17)

## சிவநாயகத்தின் நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம்,மே6.

ஈழத்தின் மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளரும் அரசியல் விமர்சகருமான அமரர் எஸ்.டி.சிவநாயகத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் பகுதியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ். இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு செங்கைஆழியான் தலைமை வகிப்பர். (ஐ-111)

## புதுமுக மாணவர் வரவேற்பு வைபவம்

வலி.தென்மேற்கு,மே6

யாழ். திறந்த பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு திறந்த பல்கலைக்கழக மண்டபத்தில் பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

சிறுவணிக முகாமைத்துவம் மற்றும் டிப்ளோமா எந்திரவியலில் பதிவினை மேற்கொண்ட புதிய மாணவர்களுக்கே வரவேற்பு வைபவம் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.வரதராசா, பொறியியலாளர் எஸ்.தங்கத்துரை மற்றும் விரிவுரையாளர்கள் உரையாற்றுவர். (ஐ-135)

## பருத்தித்துறை துறைமுகம் வெறிச்சோடியது.

பருத்தித்துறை துறைமுகத்தில் கடந்த மூன்று தினங்களாக கப்பல்கள் ஏதுமின்றி துறைமுகப் பகுதி வெறிச்சோடியுள்ளது.

இறுதியாக 'மெக்ஸ்ஹண்டி' என்ற கப்பல் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு கடந்த ஞாயிறு மாலை பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது.

உருளைக்கிழங்கு மற்றும் நிவாரணப் பொருள்களுடன் 'குமண' கப்பலும், ஒரு தொகுதி சிமெந்துடன் 'போல்கொட' என்ற புதிய கப்பலும் கடந்த புதனன்று இங்கு வரும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவ்விரு கப்பல்களும் இன்னமும் வந்து சேரவில்லை. (ஐ-123)

## வவுனியாவில் நீதிமன்றம் அமைப்பு

வவுனியாவில் 3 கோடி ரூபா செலவில் மாவட்ட நீதிமன்றம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கட்டட நிர்மாணங்களுக்கான நிதி நீதியமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்தும் வடமாகாணத்தில் பூரணத்துவம் கொண்ட நீதிமன்றமாக இது விளங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்ற ஊழியர்களுக்கென 3 கோடி 70 லட்சம் ரூபா செலவில் புதிதாகக் கட்டப்பட்ட விடுதியும் பிரதம நீதியரசரினால் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-9)

## வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்த

# 710 மாணவர்கள் வேறு பாடசாலைகளில்

வடமராட்சி,மே6

வடமராட்சி கிழக்கிலிருந்து 710 மாணவர்களும் 71 ஆசிரியர்களும் இடம்பெயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மாணவர்கள் பலரும் பருத்தித்துறை, கரவெட்டி கோட்டப் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 71 ஆசிரியர்களில் ஆறு பேர் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளிலும், ஒருவர் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை ஒன்றிலும் இணைக்கப் பட்டுள்ளனர். ஏனையோர் வடமராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பருத்தித்துறை, கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

# தடகள விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,மே6

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.குகேந்திரன் பிரதம விருந்தினராகவும், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் சிறப்பு விருந்தினராகவும் கோப்பாய் பிரதேச செயலர் க.தேீஸ்வரன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி, யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.சண்முகநாதன், யாழ்.கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் சோ.விசுவலிங்கம், யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ஏ.எப்.ஜே.ரூபசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-8-180)

## மாணவர்களின் சீருடைத்துணி

தென்மராட்சி,மே06.

பளை மத்திய கல்லூரி மாணவர்கள் தமது இலவச சீருடைத் துணி தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை ஆகியவற்றை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இயங்கும் பளைக்கோட்ட அலுவலகத்தில் அலுவல நேரத்தில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம் என பிரஸ்தாப கல்லூரி அதிபர் கே. குணபாலசிங்கம் அறிவித்துள்ளார். (இ-3)



தும்பளை பரிலூர்த்து மாத ஆலயத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு அண்மையில் பால் வழங்கப்பட்டது. பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா பால் வழங்குவதை படத்தில் காணலாம். (ஐ)



மந்திகை மருத்துவமனையில் தண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், பருத்தித்துறை 524 ஆவது பிரிகேட் பிரிவினர் நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை அண்மையில் அன்பளிப்புச் செய்தனர். அந்த வைபவத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி, டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் உரையாற்றுகின்றார். அருகில் இராணுவ உயரதிகாரிகளும் காணப்படுகின்றார்கள். *(படம் - நெல்லியடி செய்தியாளர் இ.கிருபாகரசூரியன்)*

# அதிரடி அரங்கு

இன்று வரும், நாளை வரும் என நீண்டகாலமாக இழுபறிப்பட்டு வந்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி ஒருவாறு இவ்வாரம் முதல் கோப்பாய் ஆசிரிய கலாசாலை வளாகத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

தொலைத் தொடர்பு வசதிகளுமின்றி, அரசநிதி மற்றும் பொருள் உதவிகள் வந்து சேர் வதற்கான வாய்ப்புகள் குறைப்பட்ட போதிலும், குறிப்பிட்ட திகதி யில், தப்பவிடாது கல்லூரியை இயக்கத் தொடங்கிவிட வேண்டும் என்று விடாப்பிடியாக நின்று, கோப்பாயப் பகுதிப் பிரமுகர்கள் மற்றும் கல்வி ஆர்வலர்களைக் கொண்டு, பொது அமைப்புகள், பொதுமக்களின் உதவியை நிதி மற்றும் பொருள்களாகத் திரட்டி, கல்லூரியைக் குறிப்பிட்ட திகதியில் ஆரம்பித்து வைத்த பீடாதிபதி தி.கமலநாதன் பாராட்டுக்குரியவர். இன்னுமொரு விடயத்துக்காகவும் அவரைப் பாராட் டியே ஆகவேண்டும்.

தனது உயிர் போனாலும் கூட யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரியில் 'ராகிங்' கேவலம் இடம்பெறத் தான் அனுமதிக்கப் போவதில்லை என்று ஆரம்ப விழா மேடையில் வைத்தே பகிரங்கமாக சூளுரைத்திருக்கின்றார் அவர்.

நல்ல - முன்மாதிரியான - ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் தலைவர்களுக்கு இப்படித்தான் நடக்கவேண்டும் என்று வழிகாட்டுகின்ற - ஓர் அறிவிப்பு இது. இந்த அறிவிப்பை அவர் நடைமுறைப்படுத்திக் காட்டுவார் என்றால் யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் அவரைப் பெரிதும் பாராட்டும்.

வவுனியா தேசியக் கல்விக் கல்லூரியில் அநாகரிகமான 'ராக்கிங்' இடம்பெறுவதாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கையில் -

கோப்பாய் ஆசிரிய கலாசாலை வளவில் இயங்குகின்ற தேசியக் கல்வியியல் கல்லூரி மாணவர்கள் இதுவிடயத்தில் கலாசாலையின் சிரேஷ்ட மாணவர்களின் தொல்லைகளுக்கு ஆளாகலாம் என்ற சந்தேகம் நிலவிய நேரத்தில் -

பீடாதிபதியின் அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. தமது சூழுரையின்படி பீடாதிபதி நடப்பாரா என்பதற்குக் காலம் பதில் சொல்லும்.

* * *

சைவ ஆலயங்களில் தேர், கும்பாபிஷேகம் போன்ற முக்கிய உற்சவங்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பலாலி சேவை ஊடாக நேரடி அஞ்சல் செய்வதில் ஊழல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கும் வகையில் கடந்த 22 ஆம் திகதி இப்பத்தியில் வெளியான தகவல் குறித்து ஆசிரியர் காரை எம்.பி.அருளானந்தம் விளக்கமளிக்க முன்வந்துள்ளார்.

தானும் தனக்கு உதவியாக பாலசுப்பிரமணியம் என்பவரும் சேவை மனப்பான்மையோடு வர்ணனையாளர்களாக இந்நிகழ்வுகளில் பங்கு பற்றியதாகக் குறிப்பிடும் அவர், இவ்வாறு ஒன்பது கோயில்களில் இருந்து சுமார் ஐம்பதாயிரம் ரூபா ஒலிபரப்புச் சேவையினருக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டதை ஒப்புக்கொள்கின்றார். இந்நிதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் சட்டபூர்வமாக அறவிடப்பட்டது என்று தான் கருதியதாகவும் அவர் கூறுகின்றார்.

உண்மையின் ஒரு பகுதி இப்போது அம்பலத்துக்கு வந்துவிட்டது. விழுந்துள்ள தொப்பி தங்கள் தலைக்குரியதா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்துவது இப்போது பலாலி சேவையினர் பக்கம் உள்ளது. உண்மையை எழுத்தில் தெரிவித்தால் நல்லது. இல்லையேல் ஐம்பதினாயிரம் ரூபாவை (இப்போதைக்கு வெளியில் தெரிய வந்த கணக்கு இதுதான்) சுருட்டிய பொறுப்பு அவர்களைத்தான் சாரும்.

* * *

சந்திகள், பொது இடங்களில் கூடும் இளைஞர் குழுக்கள் அவ்வப்பகுதி மக்களுக்கு - குறிப்பாக இளம்பெண்களுக்கு - கொடுக்கும் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன. இது குறித்து இப்பத்தியில் பல தடவைகள் பிரஸ்தாபித்துமாயிற்று.

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் ஒரு பகுதியில் இப்படி தினசரி அதிகரித்து வந்த தொல்லையைத் தாங்க முடியாத அப்பகுதி பொது மக்கள் கடந்த செவ்வாயன்று பிற்பகல் ஒன்று திரண்டு, அங்கு கூடும் இளைஞர் கும்பலை நையப்புடைத்து பாடம் புகட்டியதாகத் தெரிகின்றது. பின்னர் சில பெரியவர்கள் தலையிட்டு இளைஞர் குழுவை அனுப்பி வைத்தனர்.

பல இடங்களிலும் இத்தகைய அட்டகாசக் கும்பல்களுக்கு எதிராகப் பொதுமக்கள் திரள வேண்டிய கட்டாய நிலை உருவாகி வருவதாக 'ஊர்சுற்றி' ஒருவர் கூறுகின்றார்.

* * *

யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவன் எழுதிய கடிதத்தின் சாராம்சம் இது:-

*ஐயா! 'ராக்கிங்' கேவலம் குறித்து அதிரடி அரங்கிலும், ஏனைய பகுதிகளிலும் நீங்களும் பல தகவல்களை அம்பலப்படுத்துகின்றீர்கள். ஆனால் விளைவு என்ன? எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? நினைக்க மனவேதனையாக இருக்கின்றது.*

*பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முறையிட்டும் எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.*

*நிரம்ப நீதிபேசும் - உரிமை கேட்கும் - மாணவர் ஒன்றியம் இந்தக் கேவலத்துக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்க முன்வந்தது? யாரின் காதில் பூச்சுற்ற முனைகிறார்கள் இந்தப் பொறுப்புள்ள (ஆ)சாமிகள்!*

*வன்னியில் பகிடிவதை செய்ததற்காக அங்குள்ள நிர்வாகத்தினால் தண்டிக்கப்பட்டவர்கள், இங்கு திரும்பியதும் பகிடிவதைக்கு ஆளான மாணவனுக்குக் குடையால் குத்தினர். இது குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பத்திரிகைகளுக்கு செய்தி வழங்கிய நிர்வாகி இது விடயத்தில் இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன?*

*இதேபோன்று மாணவியான அருட் சகோதரி ஒருவர் துன்புறுத்தப்பட்டபோது அது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தார்கள். என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?*

*கிரிக்கெட் வீரர் ஒருவர் 'ராகிங்' செய்யப்பட்ட போதும் 'ராகிங்' செய்தவருக்குச் சாதகமாக - அவருக்கு பரீட்சை இருப்பதால் அதைக் குழப்பாமல் அது முடியும் வரை பொறுத்திருந்து அதன் பின் - நடவடிக்கை எடுப்பதாக ஒரு பொறுப்பாளர் தெரிவித்திருந்தார் என்று கூறப்படுகின்றது. அவர் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தார் என்பதைப் பகிரங்கப்படுத்துவாரா?*

*ராகிங்கிற்கு எதிராக கிளர்ந்தெழுந்த மாணவர்களை சமூகத்தில் ஒதுக்கி வைப்பதற்கு துணைபோவதைத் தவிர இது விடயத்தில் இந்த நிர்வாகிகள் இதுவரை செய்தது என்ன?*

*சம்பந்தப்பட்டோர் இன்றும் 'ரூம் ராகிங்' வரை மும்முரமாக இருக்கின்றார்களே!*

*'ராகிங்' ஒரு கிரிமினல் குற்றமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்ட பின்னரும் உரிய நடவடிக்கை எடுக்க - திராணியற்ற - கையாலாகாத்தனமாக இருக்கும் இந்த நிர்வாகிகள் பதவிக் கதிரைக்குப் பாரமானவர்கள் தவிர வேறில்லை.*

இப்படி காரசாரமாக தமது வேதனையைத் கொட்டி எழுதியிருக்கின்றார் ராகிங் எதிர்ப்பாளரான (Anti - Ragger) அவர்.

யாரேனும் பதில் சொல்ல முன்வருவார்களா?

**- மின்னல் -**


## ஸ்ரீ செல்வா திரையில்

ஸ்ரான்லி றோட்

தினசரி 10.30, 2.30 (ப.நே)

விஜயகாந்த், தேவயாணி நடித்த

## வல்லரசு

(CD பிரதி புதிய வெளியீடு)

(76048)



## புனித யூதாததேயு திருவிழா

இளவாலை

இன்று (06 – 05 – 2000) சனி மாலை 6.00 மணிக்கு

**திருச்செபமாலை திருப்பலி நற்கருணை ஆராதனையும்**

நாளை (07 – 05 – 2000) ஞாயிறு காலை 7.00 மணிக்கு,

*யாழ். ஆயர் பேரருட்*

*திரு. தோமஸ் சவுந்தரநாயகம்*

**அவர்களால் திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.**

*பங்குத் தந்தையும்*

*ஆலய மக்களும்*

(76035)



உ

கணபதி துணை

## வேலணை மேற்கு பெரியபுலம்

## மகாகணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோயில்

# வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2000

*ஐங்கரன் அடியார்களே!*

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் சித்திரை மாதம் 25ஆம் நாள் (07-05-2000) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் இவ்வருட மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

| | |
|---|---|
| 1. கொடியேற்றம் | - 07-05-2000 ஞாயிறு முற்பகல் 11.30 |
| 2. வேட்டைத்திருவிழா | - 14-05-2000 ஞாயிறு பிற்பகல் 2.00 |
| 3. சப்பரத்திருவிழா | - 15-05-2000 திங்கள் மாலை 5.30 |
| 4. தேர்த்திருவிழா | - 16-05-2000 செவ்வாய் பகல் 11.00 |
| 5. தீர்த்தத் திருவிழா | - 17-05-2000 புதன் காலை 10.30 |

உற்சவ காலங்களில் அடியார்கள் அனைவரும் வருகை தந்து இறைவன் பணியில் பங்கு கொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோயில்,*
*வேலணை மேற்கு,*
*வேலணை-08.*

(76047)

*இறைவன் பணியில்*
***- பரிபாலன சபை -***



# MICRO-Win

Computer Training Centre

*# 337, Kasthuriar Road, Jaffna.*

Tel :021-2472, 3078, 2827 Fax: 0041+[21] 2472

e-mail : jci@sltnet.lk , krish@visual.lk

விசேட சலுகையாக ரூபா 3000/- கட்டணத்தோடு கீழ்க்காணும் பயிற்சி நெறிகளில் மூன்றை தெரிவு செய்து 3–4 மாதகாலப்பகுதியில் கற்றுக்கொள்வதற்கு *Micro-win* கணனிப்பயிற்சி நிறுவனத்தில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கின்றனர்

| | |
|---|---|
| Computer Hardware | Assembling and Repairing |
| Type Setting | [ 3 Courses included ] |
| 3D/FX | Computer Graphics and Video animation |
| Corel Draw | Computer Graphics |
| Adobe Pagemaker | Desktop Publishing |
| MS-Access | Database & Programming |
| MS-Word | Desktop Publishing |
| Corel Photopaint | Computer Graphics & [ Photo Editing ] |
| MS-P.IT | Computer Graphics & [ Photo Editing ] |
| U C 3D | Computer Graphics & Video Animation |
| Adobe Photo Shop | Computer Graphics & [ Photo Editing ] |
| MGI | Computer Graphics & [ Photo Editing ] |

குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

06–05–2000 தொடக்கம் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களை கீழ்க்காணும் முகவரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

JCI Computer Centre, No.109, Kandy Road, Jaffna.
Aarani Communication, No.337, Kasthuriar Road, Jaffna

## 3 Courses on One Payment

நவீன – கணனி உலகிற்கு சிறந்த வழிகாட்டி - Micro-Win

(C 12049)

# கண்ணீர் அஞ்சலி

பளை உதவி அரசாங்க அதிபர்

திரு.சு.புத்திசிகாமணி அவர்களின் தந்தையார்

## வயிரமுத்து சுப்பிரமணியம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் கலந்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சி.பாலசுந்தரம்*
*கிராம உத்தியோகத்தர், பளை.*

(76053)



உ
சிவமயம்

## திருமண வரவேற்பு விருந்துபசார வைபவ அழைப்பு

அன்புடையீர்!

மங்களமிகு சித்திரை மாதம் 24ஆம் திகதி இன்று(06-05-2000) சனிக்கிழமை உடுவில் கணேச வாசத்தில் திருமணம் புரியும்

எமது ஜேஷ்ட புத்திரன்

**ஸ்ரீகாந்தசர்மா~சுபாங்கினி** தம்பதிகளின்

வரவேற்பு விருந்துபசார வைபவம் 07-05-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்தில் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மங்கள நிகழ்வுகளாக

காலை 10 மணி முதல் நாதஸ்வர மங்கள இசை
மாலை 2 மணிக்கு கானாமிர்த இசை

*சங்கீத பூஷணம் பிரம்மஸ்ரீ க. இராமநாதன் அவர்கள்*

*ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானம் சுன்னாகம்.*

தங்கள் நல்வரவை நாடும்
*சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் சாந்தி தம்பதிகள்*

(C/12052)



# BITSMANS

கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

பிரிவு II அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

**பிரிவு III O/L DAY CLASS**

(எமது வழமையான 'SUPER GRADE' ஆசிரியர் குழு)
ஆரம்பம்: 08-05-2000 திங்கள் காலை 8.00 மணி.

(76034)



# நீங்கா நினைவில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 09 - 1934



உதிர்வு 18 - 04 - 1999

## திருமதி சின்னாச்சி ஆறுமுகம்

திதி: 06-05-2000

*உதிர்ந்த உறவுகளைத் தேடி*
*கணவர், மகள், பேர்த்தி*
*நீங்களும் சென்றுவிட்டீர்கள் அம்மா!*
*ஆண்டுகள் எத்தனை சென்றாலும்*
*உங்கள் நினைவுகள் என்றும் மாறாது!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வட்டக்குளத்தடி,
கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் வாடும்,
*குடும்பத்தினர்.*

(C/12053)



Institute of Informatics Studies (IIS)
Jaffna, Sri Lanka
T.P No:- 021 2831 E-mail: iis@sltnet.lk

# NCCA வகுப்புகள்

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
வாரஇறுதிவகுப்புகள் : 14-05-2000 } 10.00am.
வாரநாள்வகுப்புகள் : 16-05-2000 }

- National Certificate in Computer Application பரீட்சைக்குரிய Basic Level, Intermediate Level ஆகிய இரண்டு பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம்.
- ஏராளமான மாணவர்கள் மேற்படி பரீட்சைக்கு ஆர்வத்துடன் விண்ணப்பித்திருப்பதால் மாணவர்களின் வசதி கருதி மிகக் குறைந்த கட்டணத்தில் பயிற்சியை மேற்கொள்ளும் வசதி.
- NCCA பரீட்சைக்கு எந்த நிலையத்தில் விண்ணப்பித்திருந்தாலும் அவர்களும் எமது நிறுவனத்தில் நடத்தப்பட இருக்கும் பயிற்சியில் இணைந்து கொள்ளலாம்.
- மேற்படி பயிற்சி நெறி வடமராட்சி மாணவர்களின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை நிறுவனத்திலும் நடத்தப்படும்.

மாணவர்கள் தமது பதிவை 7-5-2000 முதல் மேற்கொள்ளலாம்

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

இயக்குனர்
IIS


# ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள்

பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருள்களைப் பதுக்கவேண்டாம் என்று ஒலிபெருக்கி மூலம் படையினர் வேண்டுகோள் விடுத்தனர்.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்களில் இணுவில், மருதனார்மடம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்குச் சென்ற படையினர் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

"எரிபொருள் வகைகள் தாராளமாக உள்ளன. எக்காரணம் கொண்டும் அவற்றைப் பதுக்கவேண்டாம். பதுக்குபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்." என்றும் அந் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் நேற்றுப் பிற்பகல் திருநெல்வேலிப் பகுதியில் சோதனை நடத்திய படையினர் தனியார் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த எரிபொருள்களை அவற்றின் விலையை விசாரித்துவிட்டு அவற்றைத் தமது வாகனங் களில் ஏற்றிச் சென்றனர்.

# ஈழத்தமிழரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்கள் ஒரு மணி நேரம் நீடித்தன.

அதன் பின்னர் கருணாநிதி - "வடக்கு இலங்கையில் ஏற்பட்டுள்ள போர்நெருக்கடிகளை அடுத்து இலங்கை அரசு உதவி கோரியிருக்கின்ற விவகாரத்தில் சுயேச்சையான முடிவு எடுக்கவிடாது மத்திய அரசின் கைகளைக் கட்டிப்போட நாம் விரும்பவில்லை. என்றாலும் கூட கடந்தகால கசப்பான அனுபவங்களை அரசு மறந்து விடக்கூடாது.

"இலங்கைத் தமிழர் விவகாரம் தமிழகத்துக்குள் நுழைவதை நாம் விரும்பவில்லை" - என்று கூறினார்.

"இந்திய இராணுவம் இலங்கையில் நேரடியாகத் தலையிடுவதைத் தவிர்க்கவேண்டும்" - என்று இந்தச் சந்திப்பில் கருணாநிதி வலியுறுத்தியதாகக் கூறப்படுகின்றது.

சந்திப்பை அடுத்து கருணாநிதி நேற்றே சென்னை திரும்பினார்.

(உ-3-4-7)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

விஜயகாந்த், தேவயானியின்

*வல்லரசு*

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.

(C/12056)



## புலமைப் பரிசில் திட்டத்தின் மே மாத பிரிவுகள் ஆரம்பம்

வார இறுதி: 14-05-2K } 10.00மணி
வார நாள்: 16-05-2K }

✦ புலமைப்பரிசில்திட்டம் 2000இல் தெரிவுசெய்யப்பட்டு மே மாதம் தமது பயிற்சி நெறிகளை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் 07-05-2000 (ஞாயிறு) தொடக்கம் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

✦ புதிதாக இணைய விரும்பும் மாணவர்களும் தமது பதிவுகளை 07-05-2000 ஞாயிறு தொடக்கம் மேற்கொள்ளலாம்.

இயக்குநர்
IIS

100,மணிக்கூட்டு, வீதி,
யாழ்ப்பாணம்.

(C/12054)



ஓடிவரும் மழலைகளை அள்ளி அணைத்து கல்வி புகட்டுகிறது

# SUBRA(14)

சித்தன்கேணி

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க

தரம் 3,4,5
புதிய பிரிவு

07. 05. 2000 ஞாயிறு

(75924)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி பொன்னுராஜா

(ஓய்வுபெற்ற முன்னாள் Superintendent சிமெந்துக் கூட்டுத்தாபன)

அம்பனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டிய முன்னைய வசிப்பிடமாகவும் தற்போது நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னுராஜா 04-05-2000 வியாழன் இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமணி - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சமரக்கொடி (மாஸ்ரர்), காலஞ்சென்ற சொர்ணக்கொடி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தனலட்சுமியின் அன்பு மாமனாரும் வித்ஜா, சோபிதா, மதுரிகா, நிருஜா(வேம்படி மகளிர் கல்லூரி-மாணவிகள்), சுவர்ணதாஸ், சுவர்ண (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் தங்கப்பொன்னு, காலஞ்சென்றவர்களான சொர்ணம், அப்புத்துரை மற்றும் பொன்னுத்துரை(லண்டன்), பொன்னம்மா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சோமசுந்தரம், இரட்ணசிங்கம்(சின்ன அண்ணை - கிளிநொச்சி), சிவசுப்பிரமணியம்(பட்டு-ஹொலண்ட்) காலஞ்சென்ற சிவஅருள் நாதன்(வேவி), தவமணிதேவி (கனடா), மல்லிகாதேவி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06-05-2000) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

958/19, தலையாழி,
நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்
பொ.சமரக்கொடி(மாஸ்ரர்)
(மகன்)

(76042)

## வெண்டரசர் செல்லப்பா-கைலாசபிள்ளை

அளவெட்டி கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் நீதிமன்ற ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வெண்டரசர் செல்லப்பா கைலாசபிள்ளை அவர்கள் 04-05-2000 ஆம் திகதி வியாழக்கிழமை புத்தளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெண்டரசர் செல்லப்பா-செல்லாச்சி தம்பதிகளின் இரண்டாவது புத்திரனும்,சிவம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் கந்தையா - நாகம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும்,காலஞ்சென்ற அருணாசலம்(பிரதம தபாலதிபர்) காலஞ்சென்ற இராமநாதன்(கூட்டுறவுப்பரிசோதகர்), திருமதி சிவசோதி விசாலாட்சி, Dr.தனபாலசிங்கம், திருமதி கணேஸ்வரன் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,ஜலஜா (கனடா),வனஜாB.A (ஆசிரியை-புத்தளம் பாத்திமாக் கல்லூரி), அம்புஜா (புத்தளம்), வசீதரன் (கனடா),வாகீஸ்வரன் - B.Com. (Hons. SriLanka - லண்டன்),கிரிஜா-B.A(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சந்திரபாலன், ஸ்ரீமகான், புஸ்பமாலா, சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், மயில்வாகனம் (மல்லாகம்) இராசதுரை (மலேசியா) காலஞ்சென்ற நடராசா, திருமதி இராசரட்ணம் சோதி, பொன்னையா(சரசாலை), தர்மலிங்கம் (கொழும்பு), விஸ்வலிங்கம்(மட்டக்களப்பு) சிவலிங்கம் (யாழ்ப்பாணம்),திருமதி தனபாலசிங்கம் சிவனேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனரும், பிரணவி, சங்கவி, சாம்பவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் No.6,UC.Quarters,Pulles Rd, புத்தளத்தில் இன்று (06-05-2000) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இல500,கே.கே.எஸ் றோட்,
தட்டாதெருச் சந்தி அருகில்,
யாழ்ப்பாணம்.

தகவல்
க.சிவலிங்கம்(மைத்துனர்)
(ஜோய் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்)
சி.வசந்தகுமாரன்(மருமகன்)
(Commercial Bank)
சி.உதயகுமார்(மருமகன்)
(தொலைத்தொடர்பு திணைக்களம்)

(76051)

## திருமதி கந்தையா நாகம்மா

காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையா (ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி, மலேசியா) அவர்களின் அன்பு மனைவி திருமதி கந்தையா நாகம்மா அவர்கள் 05-05-2000 அன்று காலமானார்.

அன்னார் அன்னலட்சுமி, கைலாயர்(மஸ்கன் கம்பனி), தவலட்சுமி, ஜெயலட்சுமி, விஸ்வநாதன்(M.P.C.S சுன்னாகம்), வைத்தியநாதன் (சுவிஸ்) நாகநாதன், காலஞ்சென்ற யோகலட்சுமி(இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சேனாதிராசா (அதிபர், சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்),சோமசேகரம் (ஓய்வுபெற்ற அதிபர்), நடேசபாதஇருதயன்(ஓய்வுபெற்ற லிகிதர், M.P.C.S சங்கானை), திருமதி சர்வாம்பிகை, திருமதி இந்துமதி, திருமதி தனலட்சுமி, திருமதி பாஸ்கரதேவி ஆகியோரின் மாமியாரும் திருமதி யசோதரா நந்தகுமார் (ஆசிரியை, பரியோவான் கல்லூரி,யாழ்ப்பாணம்) திருமதி சுபத்திரா சுரேஸ்குமார்(கனடா), சித்திரா, ஜானகி, ஸ்கந்தகுமார், தபேசன், ஜிறானு, கஜேந்தினி, நந்தகோபன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-05-2000) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

தகவல்
க.விஸ்வநாதன்
(மகன்)

(76050)

## வயிரமுத்து சுப்பிரமணியம்

உடுத்துறையைச் சேர்ந்த வயிரமுத்து சுப்பிரமணியம் 02-05-2000 செவ்வாய்க்கிழமை அன்று பரந்தனில் காலமானார்.

அன்னார் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கிருஷ்ணசாமி, காலஞ்சென்ற யோகரத்தினம், புத்திசிகாமணி, காலஞ்சென்ற அன்னபூமணி, ஜெயந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பரமேஸ்வரி, சாமிநாதன், எலிசபெத் ஜெயசோதி, இரத்தினசிங்கம், வதிகலா, ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷெண்ஜீவ், அன்றூ, பிரவீன், ஜெத்ரோ (பரியோவான் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04-05-2000) வியாழக்கிழமையன்று பரந்தனில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

923,புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
சு.புத்திசிகாமணி(மகன்)
(உதவி அரசாங்க அதிபர்,பளை)
எலிசபெத் ஜெயசோதி(மருமகள்)
(ஆசிரியை,கொழும்புத்துறை இ.ம.வி)

(76052)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06-05-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சுடரொளி

# சஞ்சீவி

சஞ்சீவி 06-05-2000

32 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து யாழ்குடாநாட்டில் மிக்ஷர், பகோடா, முறுக்கு போன்றவற்றை திறம்படத் தயாரித்து வழங்குவதில் இன்றைய முன்னோடிகளான மல்லிகா மிக்ஷர் தொழிலக உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு விற்பனை முகவர்களும் நடமாடும் விற்பனைப் பிரதிநிதிகளும் ஆர்வத்துடன் விற்பனை செய்ய விரும்புவோரும் நேரில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும். கொள்வனவுத் தொகைக்கேற்ப சிறப்பு விலைத் தள்ளுபடி வழங்கப்படும்.

**மல்லிகா மிக்ஷர் மாளிகை**

கூழாவடி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் (75916)

## கருத்துக் கலசம்

மயூரா

## அன்பு செய்யுங்கள்

**அன்பைப் பெருக்கி எனது**
**ஆருயிரைக் காக்க வந்த**
**இன்பப் பெருக்கே**
**இறையே பராபரமே!**

**- தாயுமானவர்.**

அன்பைப் பெருக்கினாலே ஆருயிரைக் காக்கலாம். அதாவது இறைவன் மீதுள்ள அன்பைப் பெருக்கினால் மனிதன் தனது உயிரைக் (மீண்டும் பிறவாது) காக்கும் வாய்ப்பு அதிகமாகும். நாம் இறைவன் மீது அன்பு வைத்தால் அவன் எம்மீது அருள் பொழிவான். அந்த அருள் அளவிலா இன்பம் தரவல்லது.

இறைவன் அன்பே வடிவானவன். அன்பே சிவமாய் அமர்ந்திருப்பதால் அன்பும், சிவமும் வெவ்வேறல்ல என்று திருமந்திரம் தந்த திருமூலர் சொன்னார். அன்பும் சிவமும் வெவ்வேறு என்று கருதுவோர் அறிவிலாரே என்பது அவரது கருத்து.

எல்லாச் சமயங்களுமே அன்பைப் போதிக்கின்றன. மனிதன் ஒருவன் அடுத்தவன் மீதும் ஏனைய ஜீவ ராசிகள் மீதும் செலுத்தும் அன்பு. இறைவன் மீது செலுத்தும் அன்புக்குச் சமமானது. அந்த அன்புக்குப் பதிலாக இறைவனின் அன்பு - அருள் - எங்களுக்குக் கிடைக்கும் என்று உணர்வது அவசியம்.

மனிதப் பண்புகளில் பெரியவற்றுள் எல்லாம் பெரியது அன்பே. அதனாலேயே பேரன்பு என்கிறோம். மண்ணுலகில் மட்டுமன்றி விண்ணுலகிலும் அன்புக்கு நிகரானது வேறில்லை என்பர் ஆன்மீகவாதிகள். அன்புக்கு இத்தகைய மாண்பு ஏது?

மனதுக்குக் கசப்பாய் உள்ளதை இனிதாக்குவது அன்பே. அது போன்றே மனதில் ஏற்படும் சலனத்தை, தடுமாற்றத்தை நேராக்கி அமைதிதரவல்லதும் அன்பே. துன்பத்தைத் தாங்கவல்ல பலத்தையும் அன்பு தரும். ஒரு கருமத்தைச் செய்யக்கூடிய துணிவைக்கூட அது தரும். உள்ளம் ஒழுங்குபடுத்தப்பட்டால் மட்டுமே, சீரான நெறிமுறைக்கு ஆளானதால் மட்டுமே அன்பு சுரக்கும்.

உள்ளம் தூய்மையாக இருந்தால் அன்பு பிறக்கும். அன்பு செய்வது ஒரு சாராருக்கு மட்டுந்தான் சாத்தியம் என்றோ ஏனையோரால் இயலாது என்றோ கருதக்கூடாது. உள்ளத்தை நேராக்கினால் உண்மையான அன்பு பிறக்கும். அவ்வாறு செய்ய இயலாதவர் தாமும் அன்பு காட்டுவோராகப் போலியாக நடிப்பர்.

உண்மையான அன்பு உள்ளவன் தன்னிடம் உள்ளவற்றைப் பிறருக்குக் கொடுக்கத் தயங்கமாட்டான். போலியாக அன்பு காட்டுபவன் அவ்வாறு செய்வதில்லை. பிறரிடமிருந்து தான் எதனைப் பெறலாம் என்று சிந்திப்பதே அவனது இயல்பாகி விடும்.

எங்களது பிரதேசத்தில், நாம் வாழும் சூழலில், அடுத்தவர்களின் அன்பும் ஆதரவும் தேவைப்படுவோர் அநேகர். அவர்களுக்குக் காட்டும் அன்பை இறைவன்மீது வைக்கும் அன்பாகக் கருதிச் செயற்படும் மனப் பயிற்சி செய்வோமாக; அந்த மனப் பயிற்சி என்பது மனதினைத் தூய்மையாக்குவது ஆகும்.

அன்பு மனிதனுக்குரிய பெரும் சொத்து. அந்த அன்பைப் பேண வேண்டியது ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்புமாகும். அன்புடையார் எல்லாருக்கும் உரியர் என்ற உயரிய உண்மையை உணர்வோமாக!

# ஏது கவிதை?

ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம், நாட்டியம், நாடகம் என்பன கவின் கலைகள் அல்லது அழகுக் கலைகள் எனப்படும். இவற்றுள் இலக்கியம் செய்யுள், உரைநடை என இருவகைப்படும். சொற்களோடு இயைந்து வரும் அளவொத்த ஒலிநயம் உடையது செய்யுள். அவ்வாறன்றி மக்கள் பேசும் ஒழுங்கில் வாக்கியங்களாக எழுதப்படுவது உரைநடை. செய்யுள் வடிவில் படைக்கப்படுவனவற்றில், விழுமிய உணர்ச்சி மிக்கு விளங்குமாயின் அவை *பாட்டு* அல்லது *கவிதை* எனப்படும்.

உரைநடையாக அமைவனவற்றிலும் உணர்ச்சி புலப்படுவதுண்டு. ஆயினும் ஒலிநயத்தின் தூண்டுதலால் பாட்டில் உணர்ச்சி கிளர்ந்து எழும் அளவுக்கு உரைநடையில் அது வெளியாவதில்லை. இதனால் செய்யுள் வடிவே கவிதைக்கு ஏற்றது என்பது பெறப்படும்.

கவின் கலைகளின் பொதுவான இயல்பு என்ன? ஒருவர்துய்த்த ஓர் உணர்ச்சியைப் பிறரும் துய்க்குமாறு தூண்டும் மன வெளிப்பாடே *கலை* எனப்படும். உணர்ந்ததை உணர்ந்த அளவும், அழகும் குன்றாமல் உணர்த்துவது இது. இப்பொது இயல்பு கவிதைக்கும் பொருந்தும். கவிஞன் படைப்பு, அவன் துய்த்தவற்றின் வெளிப்பாடே. அவன் மட்டில் அது கற்பனையாகவும் இருக்கலாம்.

### கவிதையின் சிறப்பு

மொழி கவிதைக்கு உயிர்நாடி. மொழித்திறம் - சொல்லாட்சி, பொருளாட்சி ஆகியன இல்லாதோர் சிறந்த கவிஞராதல் இயலாது. இவ்வாறே, தக்க பயிற்சியும், புலமையும் இல்லாதோர் கவிதையைச் சுவைத்தலும், எடை போடுதலும் இயலாது. இசைநுட்பத்தை உணராமலே ஒருவன் அதன் இனிமையில் மயங்கி நிற்றல் கூடும். அடவு, முத்திரை, பாவம் முதலியன பற்றிய அறிவின்றியே நாட்டியமாடுபவரின் ஆடலில் உளம் ஒன்றிப் போதல் கூடும். ஆனால் கவிதைக் கலையில் ஈடுபடுவோர்க்கு மொழிப்புலமையும் கவிதையை நயக்கும் பயிற்சியும் இன்றியமையாதவை.

கவிஞன் தன் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு ஒரு மொழியிலுள்ள சொற்களே உறுதுணையாகின்றன. ஆயினும் வெறும் சொல்லடுக்கினால் மட்டும் உணர்ச்சிகளைக் கிளறி விடுதல் இயலாது. சொற்கள் இயைந்து செல்கையில் பொருள் விளக்கம் பெறுவது போலவே, ஓர் ஒலிநயமும் தோன்றும்போதே உணர்ச்சியூட்டப்படுகிறது. பெரும்பாலோர் இன்று செய்வது போல ஒருபாட்டை மனத்துள் படித்தாலும் அதன் ஒலிநயம் அகச் செவியில்படுதல் வேண்டும். ஆகவே ஒலிநயம் கவிதையின் உடன்பிறவி என்பது வெளிப்படை.

எடுத்துக்கொண்ட ஒரு பொருளைப் பலவாறு உணர்த்தலாம். உணர்த்தும் கருவியாகக் கவிதையைக் கொள்ளும் போது, உணர்த்தப்படும் பொருளைக் காட்டிலும் உணர்த்தும் முறையே முதன்மை பெறுகிறது.

இவை அனைத்தையும் ஒன்றாக நோக்கும் போது, கவிதையின் முக்கிய இயல்புகள் தெளிவாகின்றன. இவை இயைந்து பயன் விளைவிக்குமாற்றை இனிக் காண்போம்.

அயலூரில் திருவிழா; அதனைக் காண விரும்பிய ஓர் இளைஞனுக்கு அவனது காதலியின் எண்ணம் குறுக்கிடுகிறது. காதலியை அணுகிய காளை "வா போவோம்" என்று அழைக்கிறான். அவள் தயங்குகிறாள். "என்குட்டியல்லவே வாய் திறந்து 'ஆம்' என்று சொல்லு. முட்டாசு, தேன்குழல்.. எல்லாம் வாங்கித் தருகிறேன்...!"

'முட்டாயி தேங்குழலு – குட்டி
முறுக்கு லட்டு பூந்தி, வடை
தட்டாமல் வாங்கித்தாரேன் – குட்டி
தங்கமே நீ வாய் திறந்தால்..' (நாட்டுப்பாடல்)

மேலே சொல்ல முயன்றும் சொல்ல முடியாது போய்விட்ட பல நுண்ணுணர்வுகள் இந்த நான்கு சிறு அடிகளுள் ஒழிந்திருக்கும் சிறப்பைக் காண்க. காளையின் உள்ளத்தில் கொப்பளிக்கும் காதல் உணர்வு 'குட்டி', 'தங்கம்' என்ற இரு சொற்களில் கரைபுரண்டு ஓடுவதைக் காண்கின்றோமல்லவா? கவிதையை நெஞ்சுள் நிறுத்தி அசைபோடினும் அதன் அளவொத்த ஒலிநயம் உள்ளத்தை ஈர்த்து உணர்ச்சியைக் கிளறுகிறதல்லவா? இது ஒரு நாட்டுப்பாடல். ஆயினும் கவிதைக்குரிய இயல்புகள் அனைத்தும் இங்கு இணைந்துள்ளன. கவிஞன் பெற்ற உணர்வு கவிதையைத் துய்ப்பவனிடத்தும் விரைவில் பிறக்கிறது.

பகவான் சத்திய சாயி பாபாவின் அன்னை ஈஸ்வரம்மாவின் நினைவு தினம் இன்றாகும்

**அதனை ஒட்டி**

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)

{இலங்கையின் ஸ்ரீ சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வியின் (தமிழ்) தேசிய ஆலோசகர்}

வரைந்த விசேட கட்டுரை - IVஆம் பக்கத்தில்

**பகுதி I**

மிக எளிய சொற்களால் ஆயது இப்பாடல். இருந்தும் உள்ளத்தை ஈர்க்கும் அளவுக்கு கவிதைத் தன்மை மிக்கதாகக் காணப்படுகிறது. பொருளாழம், அழகு என்பன இணைய கவிதையின் கூறுகள் நன்கு பொருந்தப் படைக்கப்படும் கவிதைகள் எத்துணைச் சிறப்புடையனவாக இருக்கும்?

போர்க்களத்தில் இந்திரசித்து மாண்டு போகிறான். ஒரே மகன்; இளவரசன்; அவன் மாண்ட செய்தி மண்டோதரியின் நெஞ்சைக் கசக்கிப் பிழிகிறது. சொல்லில் வடிக்க முடியாப் பெருந்துயர் அவள் உள்ளத்தைக் கவ்விப் பிடித்துள்ளது. புலவர் குழந்தையின் கைவண்ணத்தில் இத் துயர உணர்ச்சி பொங்கியெழுவதைக் காண்க.

'தனியா யலர்ந்த மலர்வா யெழுந்து
தகவே கசிந்த தெளிதேன்
கனிபா லிணைந்து படவே யுயர்ந்து
கலை தா விவந்த தமிழர்
அலை போ லுவந்து முடிசூட விந்த
அரசா ளவந்த மகனே!
இனியா ரைநம்பி யுயிர்வாழ் வதுந்த
னியலோ டமைந்த வெளியேன்.

(இராவண காவியம், கையறு நிலைப்படலம் - 48)

இங்கும் எளிய சொற்களே எடுத்து ஆளப்பட்டுள்ளன. ஆனால் அவை உணர்ச்சியைத் தூண்டவல்ல பொருள் ஆழம் உடையவை. துன்ப உணர்வை மிகுதியாகக் கிளறவல்ல மென்மையான ஒலி நயம் பாடல் முழுவதிலும் ஒரே சீராக அமைந்துள்ளது. இந்த ஒலி நயம் சீர்பெற அமைவதற்கு ஏற்ற ஒரு யாப்பு வடிவத்தையும் கவிஞன் தேர்ந்தெடுத்துள்ளான்.

### கவிதையின் கூறுகள்

கவிதைக்கு உயிர் அளித்து, உரமூட்டுவன மூன்று. அவை வடிவம், பொருள், உணர்த்து முறை என்பன.

### வடிவம்

எடுத்துக் கொண்ட பொருளின் தன்மைக்கு தக அதனை பிறன் உணருமாறு செய்ய மிகச் சிறந்தது என கவிஞன் கருதும் உத்தியே வடிவம் எனப்படும்.

**- கங்காதரன் -**

தக்க உணர்ச்சியைக் கிளறி பொருளை உணர்த்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சிக்கு ஏற்றதாக இந்த வடிவமைப்பு இருத்தல் வேண்டும். கவிஞன் சொல்ல விரும்பும் பாங்கில் சொன்னால்தான் கவிதை சிறப்படையும் என்ற நிலைப்பாட்டிற்கு அமைவாக இருப்பதும் இந்த வடிவமே. உள்அடக்கத்திற்கு ஏற்ப வடிவம் மட்டுமன்றி உணர்த்தும் முறையும் மாறும். புலவர் குழந்தை காட்டும் அதே காட்சியைக் கம்பனும் காட்டுகிறான். காணுங்கள்.

மைந்தவோ எனும் மாமகனே எனும்
எந்தையோ எனும் என்னுயிரே எனும்
கூந்தினேன் உனை நானுளனே எனும்
வெந்தபுண் ணிடை வேல் பட்ட வெம்மையாள்

(இராமாயணம் - போர்க்காண்டம்)

இந்தப்பாடலில் ஒலிநயம் மிகச்சிறந்து விளங்குகிறது. சொற்களே அழுதுபுரண்டு ஓவென்று அரற்றுவது போன்ற ஒரு தோற்றம் மிக விரைவில் ஏற்பட்டு விடுகின்றது. 'வெந்த புண்ணிடை வேல்பட்ட வெம்மை எத்தகையது? அத்தகையது இராவணனது துன்பம் என்கிறார் கவிஞர். இப்பாடலில் ஒலிநயம் விரைவாகவே உணர்வைத் தூண்டுகிறது. இதற்கு ஏற்ப தேர்ந்தெடுத்த யாப்பு வடிவமே இங்கு உணர்ச்சி கிளர்ந்தெழுவதற்கு அடிப்படை. இதனாலேயே உணர்ச்சிக்குத் தக 'சொற்கள் துடிக்கும் தோற்றம் ஏற்படுகின்றது.

### பொருள்

இதனை *உள்ளடக்கம், கரு* எனவும் குறிப்பிடுவர். கவிதையில் எடுத்து ஆளப்படும் பொருளே இது. கீழ்த்தரமான கருத்தையும், கவிதை தன்னளவில் அழகுறச் சொல்லுதல்கூடும். ஆனால் வாழ்க்கைச்சிறப்புக்கு உறுதுணையான உண்மைகளை, விழுமியங்களை வலியுறுத்துவதாகவே கவிதை அமைதல் வேண்டும். இதற்கு மாறாகத் தனியாளின் அல்லது ஒருகுழுவின் நலன்பேணும் பரப்புரைக் கருவியாக கவிதை பயன்படுத்தப்படுமாயின் அது வாழாது. பரப்புரை, விளம்பரம் என்பன அடிப்படையில் பொய்மீது எழுப்பப்படுவன. உண்மை இவ்வாறு இருப்பினும் சமவுடைக் கொள்கையைப் பின்பற்றுவோர், இலக்கியம் ஒரு பரப்புரைக் கருவியே எனச் சொல்லாடுவர். ஆயினும் ஏன்? உண்மையின் தேடலேகலை. இதனை நுனித்து உணர்க.

### உணர்த்து முறை

மக்கள் எய்தும் உணர்ச்சிகள் எட்டு என்பர்
நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப

(தொல்காப்பியம்: பொருள்-மெய்ப்பாட்டியல்)


இந்த எட்டு உணர்ச்சிகளும் சூழ்நிலைக்கு ஏற்ப தனித்தோ, கலந்தோ வெளிப்படும். தான் பெற்ற உணர்வை தக்க புறத்தூண்டலால் சுவைஞனிடத்தும் தோன்றுமாறு செய்வதே கவிஞனின் பணி. ஏற்ற ஓசை அமைதியைத் தேர்ந்தெடுத்து விரும்பிய உணர்வைத் தூண்டலாம். இத்துறையில் முழுவெற்றிபெற வேண்டுமாயின் ஒலிநயத்தோடு கற்பனை, பொருட்தெளிவு என்பனவும் இணைந்து செல்லுதல் வேண்டும். இந்த உண்மை பற்றியே அகவிச் சொல்லுதற்கு ஆசிரியப்பாவையும், துள்ளல் உணர்வைத்தூண்ட கலிப்பாவையும், தூங்கல் ஓசையைப் புலப்படுத்த வஞ்சிப்பாவையும், கேள்விக்கு பதில் இறுப்பதுபோல் கூற வெண்பாவையும் எடுத்தாளுக என யாப்பு இலக்கணம் கூறும். இதன் உட்பொருள் என்ன? தக்க ஒலி நயத்தின் துணை கொண்டு விரும்பிய உணர்ச்சியைத் தூண்ட முடியும் என்பதே. உணர்ச்சி கிளர்தல் கவிதையின் உயிர்ப்பு ஆகும். ஆதலே ஒலிநயம் அற்றவை கவிதையாதல் இயலாது என்பது வெளிப்படை.

உணர்த்து முறையின் துடிப்புள்ள கூறாக அமைவது கற்பனை. பிறர்பெற்ற பட்டறிவைத் தான் எய்தியது போன்ற ஒரு மனநிலையே இது. தான் படைக்க விரும்பும் புத்துலகத்தைத் தன்நெஞ்சத்திரையில் படரவிட்டு அகக்கண்முலம் காணும் ஒரு மனப்புக்குவம். இவ்வாறு படைத்த கற்பனையைப் பிறரும் துய்க்குமாறு செய்வது கவிஞனது பணி. இந்தப் பணியில் அவன் வெற்றி பெறுவதற்கு உவமை, உருவகம் முதலான அணிகளை எடுத்தாளுவான். இவை தக்கவாறு இயைந்து செல்லும்போது கவிஞனது அகத்தில் பிறந்த எண்ணப்படலங்கள் சுவைஞனிடத்தும் பிறக்கின்றன. இவை இரண்டும் இணை நிலையையே இந்நாட்டுப்புலவர் *படிமம்* என்பர். அதாவது சொல்ல வேண்டியதை விளக்கமாகவும், உணர்வு ஒன்றிய நிலையில் விரும்பத்தக்கதாகவும் சொல்ல உதவுவதே படிமம் என்க. இதனைப் படைக்கும் முயற்சியே கற்பனை. ஆகவே கவிஞனுக்கு கற்பனை இன்றியமையாதது. அவன் கையில் அது மிக ஆற்றலுள்ள கவியாகின்றது. படிமம், ஒலிநயம், சொல்லமைதி என்பன உணர்த்து முறையின் முக்கிய கூறுகளாக உள்ளமை காணத்தக்கது.

### கவிதை - ஒரு வரையறை

கவிஞனிடத்துத் தோன்றிய உணர்வு சுவைஞனிடத்து பிறத்தல் வேண்டும். கவிதையின் வடிவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை என்பன இதற்கு உதவுகின்றன. உணர்ச்சி கிளர்வதற்கு ஓசை துணை நிற்கின்றது. தேவைப்படும் ஒலி நயத்திற்கு ஏற்ப வடிவம் மாறும். உணர்த்து முறை சிறக்க வளமான கற்பனை அதனோடு அமைதல் வேண்டும். இவை அனைத்திற்கும்

(XV ஆம் பக்கம் பார்க்க)



# யாழ்ப்பாணத்தில் போர் உக்கிரமானால் மக்களைக் காக்கும் பொறுப்பு யாருக்கு?

1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முதற்தடவையாக இலங்கை வெளிநாட்டு இராணுவ உதவியை நாடியது. பதவியில் உள்ள அரசாங்கத்தையும் நாட்டின் இறைமையையும் காப்பதற்காக எனத் தெரிவித்து வெளிநாட்டு இராணுவ உதவி கேட்டார் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா.

சேகுவேரா இயக்கம் என்று அழைக்கப்பட்ட ஜாதிக விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) அமைப்பினரின் ஆயுதப்போராட்டத்தை ஒடுக்குவதற்காகவே அன்றைய அரசு வெளிநாடுகளிடம் இராணுவ உதவி கோரியது. இந்தியா ஹெலிகொப்டர் மற்றும் ஆயுத உதவிகளை உடன் வழங்கி இலங்கை இராணுவம் ஜே.வி.பியின் போராட்டத்தை நசுக்குவதற்குப் பேருதவி புரிந்தது. பாகிஸ்தானின் சிறிய அளவிலான உதவியும் இருந்தது.

## சர்வதேச சமூகத்தின் அழுத்தமே போரைத் தவிர்க்க உதவும்

இருபத்தொன்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவம் வெறும் சம்பிரதாயத்துக்கான - வைபவங்களில் கலந்து கொண்டு மரியாதை அணிவகுப்பு நடத்தும் - பெயருக்கான - இராணுவமாகவே இருந்தது. போதிய ஆயுத வசதிகளோ, தளபாட வசதிகளோ ஆளணியினரோ இல்லாத ஒரு படையாகவே அது செயற்பட்டது.

அதனால் ஜே.வி.பியினரின் ஆயுதக் கிளர்ச்சியை அடக்க முடியாமற் போயிற்று. போக்குவரத்து உட்பட்ட அத்தியாவசிய சேவைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் அளவுக்கும், நாட்டின் பல பொலீஸ் நிலையங்களையும் இராணுவ முகாம்களையும் கைப்பற்றும் அளவுக்கும் ஜே.வி.பியினர் அப்போது பலம் வாய்ந்தவர்களாக இருந்தனர். அரசாங்க நிர்வாகத்தையும் மக்களுக்குரிய சேவைகளையும் நிறுத்தும் அளவுக்கும் அவர்களின் ஆயுதக்கிளர்ச்சி வேகமடைந்திருந்தது.

நிலைமை கட்டுக்கடங்காமல், அரசாங்கத்துக்கு ஆபத்து வரப்போகிறது என்பதனை உணர்ந்த அரசாங்கம் இந்தியாவிடமும் பாகிஸ்தானிடமும் அவசர அவசரமாக உதவி கோரியது. இந்தியாவின் பேருதவியால் சிறிமாவோவின் அரசாங்கம் தப்பிப் பிழைத்து ஜே.வி.பியின் ஆயுதப்போராட்டமும் ஒடுக்கப்பட்டது.

சரியாகப் பதினாறு வருடங்களின் பின்னர் இந்திய இராணுவம் அமைதிகாப்பதற்கெனக் கூறிக்கொண்டு நாட்டின் வடக்கு - கிழக்கிற்கு வந்தமை இரண்டாவது கதை. முந்தியதைவிட முற்றிலும் வித்தியாசமான பின்னணியில் இந்திய இராணுவம் இங்கு வந்து சேர்ந்தது.

1987 மே மாதத்தில் இலங்கை இராணுவம் நடத்திய வடமராட்சி "ஒப்பரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கைகளையும் அப்போதைய ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசு வடபகுதித் தமிழர் மீது விதித்த உணவுத்தடையும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கு வழி கோலியது எனலாம்.

இந்தியாவின் இராணுவ வல்லமைக்குப் பயந்து, இலங்கையின் அரசியல் தலைவர்களில் "பெரிய நரி" என்று வர்ணிக்கப்பட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே அடி பணிந்தார் எனலாம். இந்தியாவின் தலையீட்டினால் இனப்பிரச்சினைக்கு தீர்வாக மாகாண சபைகள் திட்டம் உருவாக்கப்பட்டது.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அமுல் செய்வதனை உறுதி செய்வதற்காகவே இந்திய இராணுவம் அமைதிப்படையாக இலங்கைக்கு வந்தது. எனினும் இலங்கையில் இந்தியாவின் இராணுவத் தலையீடாகவே அது நோக்கப்பட்டது.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த நோக்கம் ஒன்றாகவும் நடந்து முடிந்த கதை வேறாகவும் அமைந்தது. இந்திய இராணுவத்தின் வருகையும் அதன் வெளியேற்றமும் தனியான கதை. அது ஒரு வகையில் கறைபடிந்த கதையுமாகும். அதனை இங்கே விவரிக்கின் விரியும்.

இப்போது மீண்டும் இந்திய இராணுவத்தின் உதவி குறித்துப் பரபரப்பான செய்திகள் கடந்த மூன்று, நான்கு தினங்களாக வெளிவந்து கொண்டிருந்தன. ஆனையிறவு இராணுவத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டதன் விளைவு இதுவாகும்.

ஆனையிறவைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகளின் அடுத்த இலக்கு யாழ்ப்பாணமே என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகிவிட்டது. ஆனையிறவைத் தொடர்ந்து பளை, கிளாலி என்று அவர்கள் முன்னேறிவரும் வேகமும், அரசாங்கப் படைகள் நேரத்துக்கு ஏற்றவாறு தந்திரோபாயமாகத் தமது நிலைகளையும், முன்னரங்குகளையும் மாற்றிக் கொள்வதும் -

இன்னும் சில நாள்களில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை வந்தடைவர் என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. அவ்வாறு நடைபெறாமல் தடுத்துவிட வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம்.

அந்த நோக்கத்தை அடைவதற்கான செயற்பாடு விரைவாகவும், வேகமாகவும் நடைபெற்றாகவேண்டும். அதனை இலங்கை இராணுவத்தினால் தனித்துச் செய்ய முடியாது. இன்னொரு நாட்டு இராணுவத்தின் உதவி தேவை. ஆகையால் அயல் நாடான இந்தியாவிடம் அந்த உதவியைக் கேட்பதில் தப்பில்லை என்று இந்த நாட்டு அரசாங்கம் நினைத்திருக்கிறது.

29 வருடங்களுக்கு முந்திய கையறு நிலையிலோ அல்லது 13 வருடங்களுக்கு முந்திய வளம் குறைந்த நிலையிலோ இலங்கை அரச படைகள் இல்லை. ஆளணி, ஆயுதங்கள், தளபாடங்கள், தொழில்நுட்ப அறிவு, பயிற்சி என்பன தாராளமாக நிரம்பி வழியும் நிலை இப்போது. எனினும் விடுதலைப் புலிகளின் இப்போதைய பலத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியுமா என்ற சந்தேகநிலை ஏற்பட்டதாலேயே வெளிநாட்டு உதவி பெறுவது குறித்த சிந்தனை அரசுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

இந்தியாவிடம் இராணுவ உதவியைக் கோரும் சாத்தியங்கள் உண்டு என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் இலங்கைக்கு இராணுவ உதவி எதனையும் செய்வதில்லை என்று இந்திய அமைச்சரவையின் பாதுகாப்புக் குழு புதன் கிழமை செய்த முடிவு இது விடயத்தில் ஒரு முற்றுப்புள்ளியை வைத்தது. இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் இந்த முடிவை வெளிப்படையாக அறிவித்திருந்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து படைகளை வெளியேற்றும் எண்ணம் ஏதும் இல்லை என்று கடந்த புதன்கிழமை நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி அறிவித்திருந்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் உக்கிரமான முறையில் தொடருமென்றும் கூறினார்.

அந்த அறிவிப்பின் தொடராக நாட்டைப் போர்க்காலச் சூழ்நிலையில் வைத்திருப்பதற்கு வகை செய்யும் விசேட வர்த்தமானி அறிவித்தல் புதன்கிழமை நள்ளிரவு விடுக்கப்பட்டது. பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 40 ஆவது

**உள்ளும் புறமும்**

**குறுமுனி**

அத்தியாயத்துக்கு அமைய போர்க்காலச் சூழ்நிலைச் சட்ட விதிகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த விதிகளின் பிரகாரம் ஜனாதிபதி நியமிக்கும் தகுதிவாய்ந்த அதிகாரிகள் தேவைக்கேற்றவாறு சொத்துக்களைச் சுவீகரிக்கவும், பாதுகாப்புக் கருதிப் பல தடைகளை விதிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. அத்தோடு குறிப்பிட்ட சட்ட விதிகளுக்கு முரணாகச் செயற்படுவோரைக் கைது செய்யவும், தடுத்துவைக்கவும் பொலீஸாருக்கும், படை அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் சமாதானப் பேச்சுக்களுக்கான சந்தர்ப்பம் முற்றாக மூடப்பட்டுவிடும் என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

இரு பக்கங்களிலும் இருந்தும் போர் உக்கிர

### யாழ்.செயலக உணவுப்பொருள் கையிருப்பு விவரம் (24-04-2000)

| உணவுப் பொருள் | ஒருமாத தேவை மெ.தொன் | தற்போதைய கையிருப்பு மெ.தொன் |
|---|---|---|
| அரிசி | 3,750 | 13,310.7 |
| சீனி | 1,000 | 1,945.8 |
| பருப்பு | 225 | —— |
| பால்மா | 200 | 170.7 |
| மா | | 3,042 |

மடையும் போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் நாலரை லட்சம் மக்களுமே மிகப் பெரியளவில் பாதிக்கப்படுவர். அவர்களின் பாதுகாப்பும் நாளாந்த வாழ்க்கையும் பெரிதும் பாதிப்புறும் என்பதில் சந்தேகமில்லை.

போர் பெரிய அளவில் மூளும் பட்சத்தில் மக்கள் பாதிக்கப்படாதிருப்பதைப் பார்த்துக் கொள்வது சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகவே இருக்கப்போகிறது. யாழ்ப்பாணப் போர் பெரும் மனிதஅழிவை உருவாக்கும்என்று ஏற்கனவே பலரும் எச்சரித்திருந்தனர்.

அத்தகைய ஒரு நிலை ஏற்படாதிருக்க சர்வதேச சமூகமும், மனிதாபிமானமும், மனிதநேயம் மிக்கவர்களும் விரைந்து செயற்பட வேண்டிய தேவை உருவாகியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு இல்லை என்று தெரிந்து கொண்டும் அரசியல் தீர்வு காண்பதற்கான பாதையை மூடி வைப்பது நல்லதல்ல. அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சியைத் தொடங்குமாறு அழுத்தம் போடக்கூடிய சக்தி இன்றைய சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தினருக்கே உண்டு. ஏற்கனவே சமாதான முயற்சிக்கு காலடி எடுத்து வைத்துள்ள நோர்வே இது விடயத்தில் தனது உடனடிக் கவனத்தைச் செலுத்த வேண்டும். அயலில் உள்ள இந்தியாவுக்கும் குடிமக்கள் அழிவைத்தடுப்பதற்கு மனிதாபிமான ரீதியில் செயற்படும் பொறுப்புமுண்டு.

யாழ்ப்பாணத்தில் பெரிய அளவிலான போர் நடைபெறாமல் தவிர்ப்பதனை - குடிமக்கள் இழப்புண்டாகாமல் தவிர்ப்பதனை -

## பொருள்களுக்குச் செயற்கைத் தட்டுப்பாடு; அந்தரித்துத் திரிகிறார்கள் பயணிகள்

இலக்காகக் கொண்டு செயற்படுவதில் தாமதம் காட்டலாகாது. எல்லாத் தரப்புகளும் உடன் கவனம் செலுத்த வேண்டிய விடயமாகும் இது.

யாழ். குடாவின் தற்போதைய நிலைவரம் நிச்சயமற்றதாக இருக்கிறது - தினமும் நிலைவரங்கள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இந்நிலையில் உணவு மற்றும் அத்தியாவசியப் பாவனைப்பொருள்களின் விலைகளும் நாளும் பொழுதும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன.

யாழ்.குடாநாடு முழுவதுக்கும் பல மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் அரச செயலகக் களஞ்சியங்களிலும், தனியார் துறையினிடமும் கையிருப்பில் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

பொருள்கள் கையிருப்பில் இருந்த போதிலும் அவை சந்தைக்கு விடப்படாமையினால் பொருள்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

இதேவேளை கப்பல்கள் மூலம் கொழும்பிலிருந்து பொருள்களை வரவழைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இங்கே பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட நியாயமில்லை. ஆனால் ஒரு செயற்கைத் தட்டுப்பாட்டினை உருவாக்குவதற்கு சில வர்த்தகர்கள் திட்டமிட்டுச் செயற்படுவதாகச் சொல்லப்படுகிறது.

வர்த்தகர்களின் இந்தத் திட்டத்தினை முறியடிக்கும் நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்ற தகவல்கள் கிடைத்து வருகின்றன. எரிபொருள் விநியோகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சீர்முறை போன்று உணவு மற்றும் அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் விநியோகமும் சீராக்கப்பட வேண்டும். பொதுமக்களிடம் கைவசமிருக்கும் குடும்ப அட்டைகளுக்கு வாரத்தில் ஒரு தடவையோ, இரு தடவையோ சீனி உட்பட அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படும்போது, ஏற்கனவே பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பொருள்களும் சந்தைக்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவு நிலைவரம் குறித்து யாழ். அரச அதிபரிடம் கேட்டபோது -

பொருள்களுக்குத் தட்டுப்பாடு எதுவும் இல்லை. சிலர் பொருள்களைப் பதுக்கி வைப்பதால் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது - என்று அவர் கூறினார். கொழும்பிலிருந்து தொடர்ந்து பல கப்பல்களில் பொருள்கள் வந்துகொண்டிருக்கின்றன என்றும் - பொருள்களைப் பதுக்கிவைத்து செயற்கையான தட்டுப்பாட்டினை ஏற்படுத்த வேண்டாம் என்றும் - அவர் அறிவுறுத்தினார்.

யுத்தம் மேலும் தொடரும் பட்சத்தில் குடாநாட்டின் இந்த நிலை மோசமான நிலைக்குத் தள்ளப்படும் என்பதனால், குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் தினமும் கூடி ஆராய்ந்து வருகின்றன. ஐ.நா. அபிவிருத்தி நிறுவனம், கெயர் நிறுவனம், யுனிசெவ், யு.என்.எச்.சி.ஆர்., செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு போன்றவை கூடி உணவு நிலைவரம் தொடர்பாக ஆராய்ந்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

தேவையேற்படின் அரச செயலகம் தனியார்துறை போன்றவற்றுக்கு புறம்பாக அரச சார்பற்ற நிறுவனங்களும் உணவுப் பொருள்களைக் கையிருப்பில் வைத்திருத்தல் வேண்டும் என்ற முடிவினை மேற்படி நிறுவனங்கள் எடுத்துள்ளதாகவும் அறியவந்துள்ளது.

### போக்குவரத்து நெருக்கடி

கொழும்பிலிருந்து கப்பல்கள் வராது விட்டால் யாழ்ப்பாணத்தில் உணவு மற்றும் பாவனைப் பொருள்களுக்கு மட்டுமல்ல வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்தும் நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டுவிடும். கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி அனுராதபுரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து படையினரை ஏற்றிச் சென்ற விமானம் வீழ்ந்து நொருங்கியதைத் தொடர்ந்து விமானப் போக்குவரத்துச் சேவை நிறுத்தப்பட்டது.

விமானச் சேவை நிறுத்தப்பட்ட பின்னர், இரண்டொரு தடவைகள் மட்டுமே பயணிகள் கப்பல் சேவை நடத்தப்பட்டது. தற்பொழுது இந்தக் கப்பல் சேவை இல்லாமையினால் ஆயிரக்கணக்கான பயணிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கும் - வெளிமாவட்டங்களில் இருந்தும் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்காக தமது பெயர்களைப் பதிவு செய்து விட்டு திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் காத்திருக்கின்றனர். கப்பல் சேவையைத் தொடருமாறு கோரி திருகோணமலையில் பயணிகள் ஆர்ப்பாட்டம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். செயலகத்துக்கும் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் கப்பல் சேவையை நடத்துமாறு கோரி அரச அதிபர் அலுவலகத்துக்குப் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

நேர்முகப் பரீட்சை, கல்வியியற் கல்லூரி அனுமதி உட்பட பல அவசர தேவைகளுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்ல வேண்டிய பலர் யாழ். செயலகத்துக்கும், யாழ். - சிவில் நிர்வாக அலுவலகத்துக்கும் தினமும் அலைந்து கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

அத்துடன் எமது அலுவலகத்துக்கும் தொலைபேசியிலும், நேரிலும் இந்தக் கப்பல் சேவை எப்பொழுது நடைபெறும் என்று கேட்டுப் பலரும் வந்து செல்கின்றனர்.

பொது மக்கள் இவ்வாறு அலைந்து திரிந்து அந்தரித்துக் கொண்டிருக்க பயணிகள் சேவைக்கெனப் பயன்படுத்தப்படும் கப்பல் இரண்டு - மூன்று தடவைகள் திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்குமிடையில் சென்று வந்ததாக சொல்லப்படுகிறது.

# பாதுகாப்புச்சபையில் இந்தியாவுக்கு நிரந்தர அங்கத்துவம் கிடைக்குமா?

ஐ.நா பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்பு நாடாக இந்தியா சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் இந்தவாரம் மேலும் அதிகரித்துள்ளன.

இந்த விவகாரத்தில், பாதுகாப்புச்சபையில் தற்பொழுது நிரந்தர உறுப்பு நாடுகளாக இருந்துவரும் நான்கு வல்லரசு நாடுகளின் ஆதரவு இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது. மற்றொரு நாடான சீனா, இந்தியா அனுமதி பெறுவதற்குப் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவிக்காத போதிலும் இந்தியாவுக்கு ஆதரவு வழங்கத் தயக்கம் காட்டி வருகிறது.

இன்றைய நிலையில் தனது நோக்கத்தை எட்டுவதற்கு இந்தியா தனது ராஜிய நடவடிக்கைகளை மேலும் முடுக்கிவிடவேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா அரசு இந்த விவகாரத்தில் மிகவும் தீவிரமாகச் செயலாற்றி வருகிறது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தன்னை நிரந்தர உறுப்பு நாடாகச் சேர்த்துக் கொள்ளுமாறு 1994 ஆம் ஆண்டுமுதல் இந்தியா கோரிவருகிறது. ஐ.நா.பொதுச்சபையின் 49 ஆவது மாநாட்டில் இந்தக்கோரிக்கை முதல் தடவையாக இந்தியாவினால் முன்வைக்கப்பட்டது. ஆரம்பத்தில், இந்தியாவின் நீண்டகால நட்பு நாடான ரஷ்யாவின் ஆதரவு மட்டுமே இந்தியாவுக்கு இருந்தது.

பாதுகாப்புச்சபையின் ஏனைய நிரந்தர உறுப்பு நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, சீனா, ஆகிய நான்கு நாடுகளும் உடனடியாக ஆதரவு வழங்கத் தயங்கின. 1998ஆம் ஆண்டு இந்தியா அணு வெடிப்புப் பரிசோதனைகளை நடத்தியபோது இந்த நாடுகளின் ஆதரவை இந்தியா பெறுவது மேலும் கடினமாகக் காணப்பட்டது. ஐ.நா. பாதுகாப்புச்சபையில்நிரந்தர உறுப்பு நாடு ஆகும் வாய்ப்பை இந்தியா முற்றாக இழந்து விட்டதாகவே அப்பொழுது கருதப்பட்டது. ஆனால் தற்பொழுது வல்லரசுகள் மத்தியில் ஏற்பட்டுவரும் மனமாற்றம் இந்தியா தனது நோக்கங்களை விரைவில் எட்டிவிட வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.


### பகிரங்கமாக ஆதரவு தெரிவித்த முதல் நாடு பிரான்ஸ்

இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் சமீபத்தில் பிரான்ஸுக்கு விஜயம் செய்திருந்தார். அப்பொழுதே பிரான்ஸின் ஆதரவு இந்தியாவுக்கு பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடாகும் தகமையை இந்தியா பெற்றிருப்பதாக பிரெஞ்சு ஜனாதிபதி ஜாக் ஷிராக் வெளிப்படையாகவே கூறினார். பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடாகும் முயற்சிக்கு பிரான்ஸ் ஆதரவு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கு ரஷ்யாவின் ஆதரவு இருந்துவந்த போதிலும் பிரான்ஸின் ஆதரவே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், ஏனைய ஐரோப்பிய நாடுகளின் ஆதரவையும் இந்தியாவுக்கு இது பெற்றுக் கொடுக்கக்கூடியது.

இந்தியாவுக்கு பிரான்ஸின் ஆதரவு கிடைத்து 24 மணி நேரத்துக்குள் பிரிட்டிஷ் ஆதரவும் கிடைத்தது இதனை நிரூபிக்கிறது. ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடாவதற்கான தகமை இந்தியாவுக்கு இருப்பதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ரொபின் குக் புதுடில்லியில் கருத்து வெளியிட்டார். பாதுகாப்புச் சபையில் இந்தியாவின் அனுமதிக்கு இது பிரிட்டனின் அங்கீகாரமாகவே கருதப்படுகிறது. இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஆதரவு ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் மிகவும் நெருக்கமான உறவுகள் இருந்துவருகின்றன.

இந்தியா தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டிலும் தற்போது



வாஜ்பாய்

மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இந்தியாவின் கோரிக்கையை அமெரிக்கா உன்னிப்பாக பரிசீலனைசெய்து வருவதாக இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் ரிச்சர்ட் செலெஸ்ரே தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் சுமார் 20ஆண்டுகளுக்குப் பின்னர் சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். கிளின்ரனின் விஜயத்தின் பின்னர் இந்தியா தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது.

### சீனா மௌனம்

சீனா மட்டும் இந்த விவகாரத்தில் இன்னும் மௌனம் சாதித்து வருகிறது. ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் அடுத்த மாதம் சீனாவுக்கு விஜயம் செய்கிறார். இந்திய - சீன உறவை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்த விஜயம் இடம் பெறுகிறது.

பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாகச் சேருவதில் உடனடியாக இல்லாவிட்டாலும் காலம் பிந்தியாவது சீனாவின் ஆதரவைப் பெறமுடியும் என்று அவதானிகள் கருதுகின்றனர். 1962 ஆம் ஆண்டில் சீனாவும் இந்தியாவும் எல்லை யுத்தம் ஒன்றில் ஈடுபட்டன. இந்தப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. இந்தியாவின் எதிரி நாடான பாகிஸ்தானுக்கு சீனா முழு ஆதரவு வழங்கி வருகிறது. இது இந்திய - சீன உறவு அபிவிருத்தி அடைவதற்கான வாய்ப்புக்களைக் குறைத்துவருகிறது.

### பாதுகாப்புச் சபையில் ஆரம்பத்தில் 11 நாடுகள்

ஐக்கிய நாடுகள் சபை, இரண்டாவது உலக மகாயுத்த முடிவில் 1945ஆம்ஆண்டு உருவாக்கப்பட்டது. மற்றொரு உலக மகாயுத்தம் மூழு

உலக உலா

என்.பி.சீலன்

வதைத் தவிர்ப்பதே இதன் பிரதான நோக்கம் ஆகும். ஆரம்பத்தில் 51 நாடுகளே இதில் அங்கம் வகித்தன. அப்பொழுது ஐ.நா.பாதுகாப்புச்சபை பதினொரு உறுப்பு நாடுகளைக் கொண்டிருந்தது. அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து நாடுகளும் 'வீட்டோ' அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்பு நாடுகளாக இருந்தன. மற்றைய ஆறு நாடுகளும் நிரந்தரமற்ற நாடுகளாக - வீட்டோ அதிகாரம் அற்ற நாடுகளாக - சேர்த்துக் கொள்ளப்பட்டன.

இந்த நிரந்தரம் அற்ற நாடுகளின் பதவிக்காலம் இரண்டு வருடங்கள். பிராந்தியங்களின் அடிப்படையில் சுழற்சிமுறையில் அங்கத்துவம் பெற உறுப்பு நாடுகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு வருகிறது.

1963 ஆம் ஆண்டு ஐ.நா.சாசனத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டு 1965 இல் அது அமுலுக்கு வந்தது. நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை ஆறில் இருந்து பத்தாக அதிகரிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 51ஆக இருந்த ஐ.நா.உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையும் 1965 இல் 118 ஆக உயர்ந்தது. இந்த எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து தற்பொழுது 188 நாடுகள் ஐ.நாவில் அங்கம் வகிக்கின்றன.

15உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா.பாதுகாப்புச் சபையை விஸ்தரிப்பது குறித்து கடந்த பல வருடங்களாக பேசப்பட்டு வருகிறது. ஆனால் எத்தனை நாடுகளைப் புதிதாகச் சேர்த்துக் கொள்வது? எந்தெந்த நாடுகளைச் சேர்த்துக் கொள்வது? என்பதில் இணக்கம் ஏற்படவில்லை. ஆனால் பாதுகாப்புச் சபையின் உறுப்புநாடுகளின் எண்ணிக்கை போதாது என்பது மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

1965 ஆம் ஆண்டு ஐ.நா.உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 118 ஆக இருந்த போது பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 15ஆக இருந்தது. தற்பொழுது ஐ.நா உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 188 ஆக உயர்ந்த நிலையிலும் பாதுகாப்புச்சபைஉறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 15 ஆகவே இருந்து வருகிறது. இதனால்தான் பாதுகாப்புச் சபை நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் யோசனை சாதகமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

ஐ.நா.பொதுச்சபையின் செயற்குழு ஒன்று இது தொடர்பாகத் தீர்மானம் எடுக்க ஆறு வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டது. இன்னும் தீர்வு காணப்படவில்லை.

பாதுகாப்புச்சபை உறுப்பினர் எண்ணிக்கையை எத்தனையால் அதிகரிக்க வேண்டும்? புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் நாடுகள் எத்தகைய தகமைகளைக் கொண்டிருக்க வேண்டும்? என்பன குறித்து செயற்குழு முடிவு செய்யவேண்டும்.

இந்த செயற்குழு உருவாக்கப்பட்டபோது பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகளை 25க்கு மேல் அதிகரிப்பதற்கு வீட்டோ அதிகாரம் உள்ள நிரந்தர உறுப்பநாடுகள் சில எதிர்ப்புத் தெரிவித்தன. பாதுகாப்புச் சபை குறைந்த உறுப்பினர்களுடன் திறமையாகச் செயலாற்ற முடியும் என்று அப்பொழுது கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

எனினும்பாதுகாப்புச்சபை உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை 25ஆக உயர்த்துவதற்கு தற்பொழுது ஓரளவுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் நாடுகளில் ஐந்து நிரந்தர நாடுகளும் ஐந்து நிரந்தரமற்ற நாடுகளும் அடங்கும்.

### ஜேர்மனி, ஜப்பான் இடம்பெறலாம்

புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள ஐந்து வீட்டோ அதிகாரம் உள்ள நிரந்தர நாடுகளில் ஒன்றாகச் சேர்ந்துகொள்ளும் முயற்சியிலேயே இந்தியா ஈடுபட்டு வருகிறது. புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் 5 நிரந்தர உறுப்பு நாடுகளில் ஜேர்மனியும், ஜப்பானும் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையும் பல நாடுகளினால் முன்வைக்கப்பட்டுள்ளது. ஐ.நா.வுக்கு இந்த இரு நாடுகளும் கணிசமான அளவு நிதியை வழங்கி வருகின்றன. இந்த இரு நாடுகளுடன் இந்தியாவும் சேர்த்துக் கொள்ளப்படும் பட்சத்தில் ஏனைய இரு நாடுகளும் லத்தீன், அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்படலாம் என்று நம்பப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை உலகில் சீனாவுக்கு அடுத்ததாக சனத்தொகை அதிகமாக உள்ள நாடு. இதன் விஸ்தீரணம், ஐ.நா. சமாதானப் பணிகளில் இது வகித்து வரும் பங்கு, இதன் ஏனைய பங்களிப்புக்கள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடாகச் சேர்த்துக்



நாராயணன்

கொள்வதற்கான தகமைகளை உருவாக்கி உள்ளன. பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்பு நாடாவது மூலம் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நலனைப் பாதுகாக்க முடியும் என்றும் இந்தியா கருதுகிறது.

### சீனா எதிர்க்குமா?

தற்பொழுது பாதுகாப்புச்சபையில் உள்ள ஐந்து நிரந்தர நாடுகளிலும் சீனா மட்டுமே ஆசியாவைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. ஐ.நாவில் சீர்திருத்தங்கள் தேவை என்று சீனா கூறுகிறது. பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் சீனா ஆதரவு தெரிவிக்கிறது. ஆனால் புதிதாக உறுப்புநாடுகளைச் சேர்த்துக் கொள்ளும்போது மிகவும் அவதானமாக நடந்து கொள்ளவேண்டும் என்று சீனா கருத்து வெளியிட்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச்சபை சர்வதேச விவகாரங்களில் சுமுகமான தீர்வுகளை எட்டுவதில் சிக்கல் ஏற்படக்கூடாது என்று சீனா கருத்து வெளியிட்டுள்ளது. சீனாவைப் பொறுத்தவரை இந்தியாவை மட்டும் அல்ல ஜப்பானையும் அது எதிர்க்கிறது. ஆசியாவில் சீனாவின் பகைமை நாடாக இந்தியாவுக்கு அடுத்ததாக ஜப்பான் கருதப்படுகிறது.

### பிரதான எதிரி பாகிஸ்தான்

பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்பு நாடாகும் இந்தியாவின் முயற்சிக்கு ஐ.நாவில் எதிர்ப்புத் தெரிவிக்கும் நாடுகளில் பாகிஸ்தான் முன்னணி வகிக்கிறது. காஷ்மீர் தொடர்பான 1948 ஐ.நா பாதுகாப்புச்

(XV ஆம் பக்கம் பார்க்க)

# சீனாவை இணங்க வைப்பதற்கு நாராயணனின் விஜயம் உதவலாம்



பெண் ஒருவர் தனது குழந்தையுடன் குழாய் நீருக்காகக் காத்திருக்கும் காட்சி. இந்தியாவில் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள சில மாநிலங்களில் தினமும் 15 முதல் 20 நிமிடம் வரையுமே குழாய் நீர் விநியோகம் இடம் பெறுகின்றது.

## இந்தியாவில் 5 கோடி மக்கள் வரட்சியினால் பாதிப்பு!

இந்தியாவில் ராஜஸ்தான், குஜராத், ஆந்திரா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் நிலவும் கடும் வரட்சியினால் 5 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ராஜஸ்தானும் குஜராத்துமே பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த இரு மாநிலங்களின் பெரும் பகுதிகளில் பெரும்பாலான நீர் நிலைகள் வற்றிவிட்டன. பயிர்கள் அழிந்து விட்டன. உணவு, தண்ணீர் இன்றி தினமும் நூற்றுக்கணக்கான கால்நடைகள் இறந்து வருகின்றன.

வரட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கும் நிதி போதாது என்பதால் நாட்டு மக்களின் உதவியை பிரதமர் வாஜ்பாய் கோரி உள்ளார். குஜராத் மாநிலமே வரட்சியினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாநிலம் ஆகும். இங்கு தினமும் 15 முதல் 20 நிமிடம் வரையுமே குழாய் நீர் விநியோகிக்கப்படுகிறது. உள்ளூர் நீர்த்தேக்கம் ஒன்றில் உள்ள தண்ணீரை நகருக்குள் திருப்பும் முயற்சியில் குஜராத் அரசு ஈடுபட்டு வருகிறது. விவசாயிகள் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். பிரதானவீதி ஒன்றில் மறியல் நடத்திய விவசாயிகள் மீது பொலீஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அப்போது மூவர் உயிரிழந்தனர். குஜராத்தில் ஒரு வாளி குடிதண்ணீர் 45 இந்திய ரூபாவுக்கு (ஒரு அமெரிக்க டொலர்) விற்கப்படுகிறது.

குஜராத்தின் 4 கோடியே 20 லட்சம் மக்களில் 2 கோடியே 50 லட்சம் மக்கள் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். குஜராத்தில் உள்ள 143 நீர்த்தேக்கங்களில் 100 நீர்த்தேக்கங்களில் தண்ணீர் அறவே வற்றிவிட்டது. எஞ்சிய நீர்த்தேக்கங்களிலும் அடுத்த இருவார காலத்தில் தண்ணீர் வற்றிவிடும் என்று அஞ்சப்படுகிறது.

தற்போதைய நெருக்கடியில் நாட்டு மக்கள் அனைவரும் கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய் கோரிக்கை விடுத்துள்ளார்.

வாஜ்பாய் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஒரு மாதச் சம்பளத்தை வழங்குவதற்கு எம்.பிக்கள் இணக்கம் தெரிவித்தனர்.

பிரஸ்தாப மாநிலங்களில் பெரும்வரட்சி ஏற்படும் ஆபத்துக் குறித்து, சில மாதங்களுக்கு முன்னரே காலநிலை ஆய்வு நிபுணர்கள் எச்சரித்ததாகவும் அரசாங்கம் முன்ஏற்பாட்டு நடவடிக்கை எதுவும் எடுக்கத் தவறி இருந்தது என்றும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

கால்நடைகள் இறந்து போனதாலும் பயிர்கள் அழிந்ததாலும் மேற்கண்ட நான்கு மாநிலங்களிலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இவர்கள் ஏற்கனவே இடம்பெயர ஆரம்பித்திருப்பதாகவும் இவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவது மாநில அரசுகளுக்கு, மற்றொரு நெருக்கடியை ஏற்படுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிதி நெருக்கடி காரணமாக பல மாநிலங்கள் நிவாரண வேலைகளை முழு அளவில் மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகின்றன.

மத்திய அரசிடம் நிவாரண நிதியாக 7003 கோடி ரூபா கேட்டதாகவும் ஆனால் 75 கோடி ரூபா மட்டுமே கிடைத்திருப்பதாகவும் ஆந்திர பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு குற்றஞ் சாட்டி உள்ளார். வரட்சி நிவாரணப் பணிகளை முழு அளவில் முடக்கி விடுவதற்குத் தடையாக இருப்பது நிதிப்பற்றாக்குறை தான்.

# ஈஸ்வரனை ஈன்ற ஈஸ்வரம்மா!

## சுவாமி சத்திய சாயிபாபாவின் தாயின் நினைவு தினம் இன்று

**பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அன்னை ஈஸ்வரம்மா அமரரான தினம் இன்று ஆகும். இந்நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. தாயின் மகிமையைக் காட்டும் இக்கட்டுரை அத்தினத்தை ஒட்டி பிரசுரமாகின்றது.**

'நான் எனது தாயைத் தேர்ந்து எடுத்தேன்' என்று கூறினார் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா. அந்தத் தாய் கோசலை, தேவகி - யசோதா, அரசி மகாமாயா, கன்னி மரியா வரிசையில் வந்தவர்.

தெய்வ அவதாரங்களுக்குத் தாய் தான் முக்கியம்; தகப்பன் அல்லர். தாயின் வயிற்றிலே தெய்வீகச் சக்தி கருவாக உருவெடுக்கின்றது. யாகத்திலிருந்து உற்பத்தியான தெய்வீகச் சக்தி பாயாசமாக கோசலையின் வயிற்றில் சென்றடைந்தது; இராமர் அவதரித்தார். கன்னி மரியா தூய ஆவியினால் கருவுற்றார்; யேசு அவதரித்தார். இவை நடக்கமுடியுமா என்ற கேள்விக்கு, 20ஆம் நூற்றாண்டில் பதில் கிடைத்தது.

ஸ்ரீசத்திய சாயி பாபா ஓர் அடியாருடன் பேசிக்கொண்டிருந்தார். திடீரென்று அந்த அடியார் "சுவாமி உங்கள் பிறப்பு சாதாரண பிரசவமா அல்லது தெய்வப் பிரவேசமா?" என்று கேட்டார். பக்கத்திலே அன்னை ஈஸ்வரம்மா இருந்தா. "அம்மா, நீயே பதில் சொல்லு" என்று வேண்டினார் பாபா. ஈஸ்வரம்மா விவரித்த நிகழ்வு பின்வருமாறு:-

எனது மாமி (லக்ஷ்மம்மா) ஒரு நாள் எனக்குச் சொன்னா "மருமகளே, நான் இராத்திரி சத்திய நாராயணா சுவாமியைக் கனவில் கண்டேன். கடவுளின் ஆணையால் உனக்கு ஏதாவது ஏற்பட்டால் பயப்படாதே" என்று. காலையிலே நான் கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டு நின்றேன். பிரகாசமான நீல நிற ஒளிப்பந்து ஒன்று என்னை நோக்கி வந்தது. நான் பயந்து, மயக்கமுற்று விழுந்துபோனேன். ஆனால் அது என்னுள் நழுவி ஊர்ந்ததை உணர்ந்தேன்.

ஈஸ்வரம்மா இதைக் கூறியதும் பாபா அடியாருக்குச் சொன்னார்; "எனது பிறப்பு பிரவேசம்தான்; பிரசவம் அல்ல"

தெய்வீக சக்தியின் பிரவேசம் தான்! பகவான் இயேசுவின் அவதார உண்மை கூட இப்போது தெளிவாக விளங்குகிறது அல்லவா?

பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபா எத்தகைய ஊரையும் எப்படியான தாயையும் எந்தப் பெயரையும் தேர்ந்து எடுத்தார்? ஊர் புட்டபர்த்தி. இந்தியாவிலேயே மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்று. விவசாயக் குடும்பம். ஆனால் குடும்பத்திலே கலைஞர்கள். ஈஸ்வரம்மாவின் கணவர் பாடகர்; நடிகர். வீட்டிலே நாலாபக்கமும் சங்கீதக்கருவிகளும், நடிகர்களின் சோடனைகளும். பேசும் மொழி, மும்மூர்த்திகள் கர்நாடக தெய்வீக இசை பாடிய சுந்தரத் தெலுங்கு. ஈஸ்வரம்மாவின் தகப்பனும் தாயும் தெய்வ பக்தியில் ஊறியவர்கள். தகப்பன் ஈஸ்வரனுக்கு ஒரு கோயில் கட்டி முடிந்ததும், மகள் பிறந்தாள் ஆகவே ஈஸ்வரம்மா என்று பெயர் வைத்தார். இனி, ஈஸ்வரம்மா வளர்ந்து மூன்று பிள்ளைகள் பெற்று, நான்கு கருச்சிதைவுகளின் பின் எட்டாவது கர்ப்பம். மாமியார் சத்திய நாராயணா பூசை செய்பவர். ஒரு பூசகர் வீட்டில் பூசை செய்து பிரசவ வலியுடன் இருந்த மருமகள் ஈஸ்வரம்மாவுக்கு பிரசாதம் கொடுத்தா. பேரன் பிறந்தான்; சத்திய நாராயண ராஜு" என்று பெயர் வைத்தார்கள். ஈஸ்வரம்மா என்ற தாயின் பெயரும், சத்யா என்ற மகனின் பெயரும் பகவானின் தெய்வ சங்கற்பம் என்றே அவரின் அடியார் கருதுகின்றனர்.

ஈஸ்வரன் தேர்ந்து எடுத்த ஈஸ்வரன் - அம்மா எப்படிப்பட்டவர்? அன்னை மரியா போல் மிகவும் சாதாரண பெண். படிப்பு இல்லை; அறிவு உண்டு. ஏழைக்குடும்பம்; ஆனால் பக்தியில் செல்வந்தர். குடிசை வாழ்வு; ஆனால் தரிசனத்துக்குக் கற்றோரும் மற்றோரும் வந்தனர். ஈஸ்வரம்மாவை முன் வைத்து தாய்மைக்கு இலக்கணம் வகுத்தார் சாயிபாபா. பெற்றோரை மதிப்பதற்கும் பிள்ளைகளுக்கு வழிகாட்டினார்.

### தாய்மை குறித்து பாபா

தாய்மை பற்றியும் தாய்மார் பற்றியும் பகவான் சாயி பாபா பின்வருமாறு கூறுகிறார்:-

★ *தாய்மைதான் கடவுள் தரும் மிகவும் விலை உயர்ந்த பரிசாகும். தாய்மாரே ஒரு தேசத்தின் செல்வத்திற்கும் துன்பத்திற்கும் காரணமாவர். அவர்கள் இரு பாடங்களைப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும் - பாபம் மேல் பயம், பண்பு மேல் பிரியம். இந்த இரண்டும் கடவுள் மேலுள்ள பக்தியினால் விளைவது. அவர் எம்முள்ளிருந்து இயக்குகின்றார். ஒரு தேசத்தின் முன்னேற்றத்தை அறிய விரும்பினால், தாய்மாரைக் கவனித்துப் பாருங்கள்;*



*அவர்கள் பயமும் கவலையும் அற்றவர்களா, எல்லோருடனும் அன்பு பொழிபவர்களா, அவர்கள் பண்பு வழியிலும் மனோவலியிலும் பயிற்றப்பட்டவர்களா? ஒரு கலாசாரத்தின் மகிமையை உணர்வதற்கு விரும்பினால், தாய்மாரைப் பாருங்கள்; அவர்கள் குழந்தைகளைத் தாலாட்டுவதை, உணவு ஊட்டுவதை, பேணுவதை, படிப்பிப்பதை, செல்லம் கொஞ்சுவதைப் பாருங்கள்.*

❖ *இன்று, பிள்ளைகளின் நன்னடத்தைக்கும் தீர்நடத்தைக்கும் தாய்மாரே காரணம். 'என்னுடைய மகன் என் சொல்லைக் கேட்கிறானில்லை' என்று சொல்வது வெட்கக்கேடு. ஆரம்பத்திலிருந்தே பிள்ளையைச் சரியாக வளர்த்திருந்தால், பிள்ளை தவறுவிடாது. புடலங்காய் பிஞ்சாக இருக்கும்போதே கல்லைக் கட்டி நேராக வளர விட வேண்டும். அதே போல், ஒழுக்கம் - பக்தி என்ற கல்லை ஒரு பிள்ளைக்கு சிசுவாக இருக்கும்போதே கட்டி வளர்க்க வேண்டும்.*

◆ *பிள்ளைகள் தவறு செய்யும் போது திருத்துவதற்கு பெற்றோர்கள் தயங்கப்படாது.*

★ *பண்டைய காலத்தில் தாய்மார் பிள்ளைகளுக்கு தெய்வீகத்தின் உண்மையை உணர்த்தினார்கள். அதனால் தங்களின் உண்மையான தெய்வீக நிலையை அவர்கள் அறிந்தார்கள். பாரதத்தின் புனிதமான கதைகளைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். அதனால் அவர்கள் பெற்றோரையும் முதியோரையும் மதிக்கப் பழகினார்கள். ஒருவன் பெற்றோரை மதியாமலும், தனது ஆசிரியரை வணங்காமலும் இருப்பானேயானால், அவனை மனிதப்பிறவி என்று அழைக்கலாமா? ஆகவே, தாய்மார் ஆரம்பத்திலிருந்தே மனித உயிரின் அளவற்ற பெறுமதியைக் கற்பிக்க வேண்டும். ஐயோ பாவம்! அவர்களுக்கே மனிதனின் பெறுமதி தெரியாது. அவர்கள் மற்றவர்களுக்கு எவ்வாறு படிப்பிப்பார்கள்? ஆகவே பெற்றோர் முதலில் தாங்களே, மனித மாண்பைக் கற்க வேண்டும். மனிதனின் தெய்வீகத்தில் அவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும்.*

### பிள்ளைகளுக்கு பாபா மொழிவது.

இனி பிள்ளைகளுக்கு பகவான் சாயிபாபா பின்வருமாறு கூறுகிறார்:-

❖ *முதன்மையாக நீங்கள் பெற்றோரைக் கனம் பண்ண வேண்டும். தாய்தான் கண்கண்ட தெய்வம். கண் காணும் - பூஜிக்கத் தகுந்த - தாயின் தெய்வீகத்தைப் புறக்கணித்துவிட்டு, கண்காணாத ஒன்றை வணங்குவதற்குத் திரிவது பேதைமையின் அறிகுறியாகும். கடவுள் சூட்சுமமாக உள்ளார். அவர் காண இயலாதவர். எல்லை அற்றவர். அளவிடமுடியாதவர். தாயைக் காணமுடியும். தாய்தான் தெய்வீக உருவத்தின் சாட்சியம். ஒரு குழந்தை பிறந்ததும் முதலிலே காண்பது தாயைத்தான். ஒரு தாய் தன் பிள்ளைக்காக எத்தனையோ வேதனைகளைப் பொறுமையுடன் ஏற்கிறாள். அப்படியான ஒரு தாயை நேசிப்பது இனிமையாகும். நீ கடவுள் மேல் அன்பு வைக்கலாம். ஆனால், உன் முன்னால் பிரத்தியட்சமாக நிற்கும் தாய் மேல் அன்பு பாராட்ட முடியாவிடில், காண முடியாத கடவுள்மேல் எங்ஙனம் அன்பு கொள்வாய்?*

*  *  *

ஈஸ்வரம்மா - சத்திய நாராயணன் (சத்தியா) தொடர்பு தெய்வீகமானது. அன்புக்கு இலக்கணமானது. ஆனால் ஓர் அவதாரத்தின் அன்னையாக இருப்பது இலேசான காரியம் அல்ல. அதுவும் அவதாரத்தின் உண்மை தெரியாத முதல் 15 வருடங்கள், ஈஸ்வரம்மாவுக்கு சோதனைக் காலமாகவே இருந்தன.

தன் தாயைப் படைத்த தெய்வம், மகனாக வந்தது புராணக்கதை போல் இருக்கலாம். ஆனால் மகனின் லீலைகளும் செயல்களும் விளங்க முடியாமல் அச்சம் தந்தன.

★ தனது உணவைப் பசியாற வந்தவர்களுக்குக் கொடுத்துவிட்டு உண்ணாமல் திரிகிறான். கேட்டால் சாப்பிட்டேனே என்று கையை மணக்கத் தருகிறான். கையிலே நெய்யுடை அடிசில் மணக்கிறது.

★ புதிய உடைகள் வீட்டிற்கு வந்தால் சத்தியா எடுப்பதில்லை. மிஞ்சிய உடைதான் சத்தியாவுக்கு. இவன் ஏன் சாதாரண பையன்கள் போல் இல்லை? சித்திராவதி நதிக் கரையிலே மற்றப்பிள்ளைகளுடன் ஓடி ஆடி, குதித்துக் கும்மாளம் போடும் சத்தியா, வீட்டிற்கு வந்ததும் ஆழமான யோசனையுடனும் விளங்காத மௌனத்துடன் இருக்கிறான். பெரியவர்கள் கூட இவனைப் பிரம்மஞானி என்று அழைக்கின்றார்கள். இது உண்மையா? கேலியா?

★ புளிய மரத்திலிருந்து மாம்பழமும், பெயர்ஸ்பழமும், அப்பிளும் எல்லாம் பறிப்பதாகக் கூறுகின்றார்கள். என் மகனை வைத்தியரிடம் காட்டவேண்டுமா?

★ இல்லை, எல்லோரிடமும் மிருகம், பறவை ஜாதிகளிடமும் கூட அன்பு, இரக்கம், கருணை, பச்சாத்தாபம் காட்டும் என்மகனுக்கு ஒரு தீங்கும் நேராது.

ஆனால், பேறுகொண்டா தாலுகாவிலேயே சத்தியா முதல் மாணவனாகப் பரீட்சையில் தேறிய போது, மக்கள் நகர் வழியே ஊர்வலமாகக் கொண்டு போனார்களே, என் மகனுக்குக் கண்ணூறு பிடித்து, என்ன எல்லாம் ஆகுமோ!

இப்படியான பல கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி விரைவில் வந்தது. 20 ஒக்டோபர் 1940

சத்தியாவுக்கு 14 வயது. பாடசாலையில் இருந்து வந்த சத்தியா புத்தகங்களை அண்ணாவின் வீட்டு வாசலுக்கு வெளியே எறிந்து விட்டு "நான் உங்களுக்கு உரியவன் அல்லன் நான் போகிறேன். எனக்கு வேலை உண்டு" என்றார். வீதியில் நின்றபடி மேலும் சொன்னார்; "என் பக்தர்கள் என்னை அழைக்கிறார்கள். நான் செய்ய வந்த வேலையைத் தொடங்குகிறேன்."

அதன் பின் மிக விரைவில் ஈஸ்வரம்மா என்ற தாய்க்கு தனது உண்மை நிலை புரிந்தது. தான் வெறும் சத்திய நாராயணனின் தாய் அல்லள். ஒரு தெய்வத்தைப் பிறப்பித்தவர் என்று. அந்தத் தெய்வத்துடன் மேலும் 32 வருடங்கள் வாழும் பெரும்பேறுபெற்றார். மகனை 'சுவாமி சுவாமி' என்று அழைத்தார்.

திகதி 6 மே மாதம், 1972

பெங்களூர். மாணவருக்கு வகுப்புகள் நடைபெறுகின்றன. சுவாமியின் தரிசனமும் கிடைக்கின்றது. குளியல் அறையிலிருந்து 'சுவாமி! சுவாமி!' என்று அம்மாவின் குரல் கேட்கிறது. 'வருகிறேன்! வருகிறேன்' என்றவாறு அங்கே போனார் சுவாமி. அந்த நேரம் அந்தத் தெய்வத்தின் தாய், வானுலகத்து அமரர் ஆனார். இது ஒரு தாய்க்குக் கிடைக்கும் வாய்ப்பு மட்டும் அல்ல ஓர் உண்மையான பக்தனுக்குமே இந்தப்பேறு கிடைக்கிறது என்பார் பகவான்.

ஈஸ்வரம்மாவின் இந்தத் தினத்தை பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாதான் மிகவும் நேசிக்கும் குழந்தைகள் தினம் ஆக பிரகடனப்படுத்தினார்.

# கொழும்பில் தமிழன் படும் அவலம்

கொழும்பில்திரி தமிழன்படு கோலம்அலங் கோலம்
கழும்பில்படு தழும்பேறிய சீலம்பஞ்ச சீலம்
எழும்பித்திரி காலைமுதல் மாலைஅவன் ஓலம்!
அழுந்தித்தொடர் அவன்வேதனை அறியாதிதை ஞாலம்!

கடமைக்கெனத் தொழிலுக்கென(க்) கடவுக்கென வருவார்
உடைமைக்கென உறவுக்கென உதவிக்கென விரைவார்
உடனுக்குடன் வருவாரிவர் உருவேட்டினை(த்) தெரிவார்
தடமிட்டிடத்; தலைசுற்றிடத் தடுமாற்றமே புரிவார்.

கப்பல்வரு விமானம்வரு கதிவேறிவர் கவலை
சுப்பம்தரு மப்பும்பிற தப்பும்இவர் நிலைமை
ஒப்பம்இட வாரும்அதில் உதையும்பல உடைமை
தப்பும்சில; தொலையும்உடல் தளரும்இது பொறுமை!

தங்கும்இடம் தாவும்இடம் தடவல்இடம் மேனி
எங்கும்இடம் இல்லாவகை இழையோடிட வெட்கம்
பொங்கும்இடம் எல்லாம்படப் புரிவார்படை வித்தை
கங்குல்பகல் தமிழன்படு கொழும்புதரும் தொல்லை!

விடுதிகளில் மூலைகளில் முடுக்குகளில் தங்கி
படுவேதனை வருசோதனை ஒருசாதனை; அன்றி
எடு;பேசென(த்) தொலைபேசியில் வெளிநாட்டுறை பவனை(க்)
கொடுகாசென(ப்) பெற்றுழல்பவர் பிசகானவை சகசம்!

பெண்ணுக்கொரு ஆணைத்தெரி பெருமுயற்சியில் இறங்கி
எண்ணுற்றவர் வந்துபிற தரகர்களை நம்பி
பன்னாட்டிரு வரன்கட்கென வான்ஊர்தியில் ஏற்றி(ப்)
பின்னாலவர் பரிதவிப்பதை(க்) கண்டேபலர் கவல்வார்!

பத்தாயிரம் பலஆயிரம் பணவாடகை செலுத்தி
சித்தாகிய அறைகட்குள்ளே சிறுவீட்டினை நிறுவி
பத்தாஇடப் பரிபாலனம் பரிவோடிடச் செய்வார்
சொத்தோடிட சொந்தத்துறு சுகமண்ணையும் விட்டே!

இந்தச்சிறு இணைப்புக்குளே இருந்துநெருக் குறுவார்
பந்தத்தொடு பலபேரெனில் பலவேதனை படுவார்,
குந்திக்குறும் இடத்திற்குளே குமைதல்தனை(த்) தவிர்க்க(ச்)
சந்திக்குறு சந்தியெலாம் தம்பாட்டிலே திரிவார்.

சந்தேகமாய் வந்தோமெனச் சீருடையிலே வருவார்,
வந்தேயவர் சாமத்திலும் வரித்தேயவர் இழுப்பார்,
பந்தாடவும் செய்வார்சிலர் பரிபாஷையும் புரிவார்,
சிந்தாகுலம் பெருகப்பல சீரழிவுமே செய்வார்.

மாதர்க்கென மரியாதைகள் மறந்தும்அவர் செய்யார்.
பேதத்தொடு இன்வேற்றுமை துச்சாதனர் சொரிவார்,
ஏதம் இலை எனின்அவர் இம்சைச்செயல் தவிரார்,
வாதத்திலும் வாதம்அவர் வளமைபிடி வாதம்

ஏறென்குவர் ஊர்தியின்னர் இறங்கென்குவர் மோதி
கூறென்குவர் உண்மைதனைக் கொள்ளென்குவர் உதைத்து;
ஆறென்பது இல்லைஅடி அடிக்காதவர் இல்லை
வெறென்கிலும் உண்டோஇது கொடுமைச்செயல் அன்றோ!

இளசிற்கது கொழும்பிற்குடி இருக்கென்பது குசிதான்
அளவற்றிடு அழகீக்கெலாம் அதுதொற்றிடும் அன்றோ!
தளர்த்தனாய்(த்) திரியும்மது தறிகெட்டிட அலையும்
பழகப்பல புதிதாய்ப்பிறழ் பாடுகளால் தொல்லையும்!

பண்பாட்டினை விட்டேஅது பலபாட்டிலே சென்று
தன்பாட்டிலே திரியும்;சில வெளிநாட்டிலும் செல்ல
என்பாடுமே பட்டுளடு எம்முயற்சியும் செய்யும்
பின்பாட்டிலே செல்வம்பல பிறர்கைப்பட நையும்!

கடவுற்றிடு சீட்டும்பெற கைரொக்கமாய்ப் பணமும்
உடனுற்றிடக் கனவிற்செல உத்திபல புரியும்
திடமற்றதோர் செயலால்அவர் திரும்பிவரும் கதியால்;
கடன்பெற்றிடக் கதியற்றவர் கலக்கத்துடன் திரிவார்

வடவாழ்வுறு கிழவாழ்வுறு தமிழர்பலர் வருவார்,
அடடாசிவா! வடவாழ்வுதா! என்றேபலர் அழைப்பார்,
நடைபாதையில் கெடுபீதியில் நடமாடியே நகர்வார்
திடமாயவர் தெளியார்கெடு செயல்கள்பல தெரிவார்.

பேச்சுக்கடை விரிப்பார்சிலர்; பெருவிழாக்களை எடுப்பார்;
ஆச்சப்பணம் என்றாலவர் அதிஉத்தமர் ஆவார்
ஏச்சுப்பல புள்ளிகளை எழுநாட்டிலும் செல்வார்
ஓச்சுமிவர் உளமாரவே ஒருபக்கமும் உதவார்!

கனவிற்பயில் கணக்குப்பயில் கனவாலியர் கூட்டாய்
தினமும்திசை வளமும்உறு திரமும்கொடு செல்வார்
மனமோடொரு சிலரேஇவை மதிநுட்பமாய்(ச்) செய்வார்
தனவாகிடப் பலபேரிவை கைவிட்டுமே உய்யார்.

வேடங்களில் உயர்வானவர் போலும்பலர் உள்ளார்,
கூடங்களில் மாடங்களில் குவித்துப்பொருள் விற்பார்
ஆடங்கமாய் வங்கிப்பணம் வட்டிப்பணம் பெறுவார்
ஓடங்கமாய் கடன்தொல்லையால் ஒளித்தேதிரை அகல்வார்.

நவநாகரி கத்திற்சில நாரியரும் உழல்வார்
தவமாய்ப்பல துணையோடிவர் பலசாகசம் புரிவார்
சிவமே இவர் செய்காரியம் அவமேயெனத் தலைமேல்
உவவாமலே கைவைத்தெமர் உளவாதையில் நலிவார்.

இவ்வாறெலாம் கொழும்பில்திரி தமிழர்படும் பாடு
ஒவ்வாதென உணர்த்திப்பல உத்திகளை ஆண்டும்
அவ்வாறவர் அறியாரவர் அகங்காரமே! அதனால்
எவ்வாறிவர் உய்வெய்துவர்! எவ்வழியுமே இல்லையா!

**- நயினைக் கவிஞர் நாக.சண்முகநாதபிள்ளை -**

*(1998 ஆம் ஆண்டு இறுதியில் - ஆஸ்திரேலியாவில் விக்டோரியா நகரில் இயங்கும் தமிழ்ச் சங்கம் நடத்திய அனைத்துலகக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை இது.)*

# மோகம்

வானமே இடிந்து தலையின் மேல் கொட்டுப்பட்டதைப்போன்ற உணர்வுடன் துடித்தான் சங்கர். எத்தனை பெரிய இழப்பு? வாழ்நாளில் இப்படி ஓர் இழப்பை அவன் சந்தித்ததேயில்லை.

நான்கு சுவர்களால் அடைக்கப்பட்ட சிறிய சுவரின் அறையின் குறுக்காக போடப்பட்டிருந்த கட்டிலில் குப்புறப்படுத்திருந்தான் அவன். நேற்றுவரை எத்தனையோ கனவு, கற்பனைகளை நிரப்பிக்கொண்டிருந்த இதயம் இன்று வெறுமையாகி விட்டது. படுக்கையில் பய முள் தைத்தது. இரவு கரியைப் பூசிக் கொண்டு பயமுறுத்தியது. உடலின் ஒவ்வொரு அணுவும் அனலைக் கொட்டிக்கொண்டிருந்தது.

இன்று காலை ஏழு மணிக்கு பிளேற். "நான் நிச்சயம் ஆறு மணிக்கே வந்து உன்னை பிளைட்டில் ஏற்றுவேன்" என்று திரும்பத் திரும்ப எத்தனை தடவைகள் உருப்போட்டுவிட்டு, பெரும் இடியைத் தூக்கி தலையில் போட்டுவிட்டு மின்னலாகிவிட்டான் ஏஜென்சி. காசென்றால் எட்டு லட்சம் ரூபா. நினைக்க நினைக்க நெஞ்சை நிறைத்தது ஆத்திரம். எவ்வளவு கஷ்டப்பட்டு அம்மா சேர்த்து அனுப்பிய பணம்! எவ்வளவு ஈடுகள், அடைவுகளில் இருந்து, தத்தெடுத்த பணம்! அப்பா எத்தனையோ தடவை சொன்னது இப்பவும் காதுகளை ஊடுருவுகிறது.

"இப்ப ஏன் அவனை வெளிநாட்டிற்கு அனுப்புறா? இஞ்ச இருந்தே அவன் படித்து உழைக்கட்டும். சின்ன வேலையெண்டாலும் எங்கட ஊரில செய்வது போல் வருமா? இப்ப என்னட்ட காசும் இல்லை!" என முற்றாய் மறுத்தார். ஆனால் அம்மா விட்டாவா? ஒற்றைக்காலில் நின்றாள்.

"போங்கோ, இஞ்ச பாருங்கோ, பக்கத்து வீட்டுப் பொடியன் சுவிசுக்குப் போய் எவ்வளவு காசாய் கொட்டுறானெண்டு! கொட்டில்லை இருந்ததுகள், இப்ப பெரியவீடும் கட்டி" பெருமூச்சும் மூக்குத்துவாரங்களைத் தாண்டி வெளிப்பட்டது.

முதலில் முரண்டு பிடித்த அப்பாவை, அம்மா பார்வை அங்குசத்தால் அடக்கி, ஒருவாறு சம்மதிக்கவும் வைத்துவிட்டாள். பாங்கில் தங்கச்சியின் பெயரில் இருந்த காசெல்லாம் எடுத்து, நகையெல்லாம் விற்று, ஐந்து லட்சம் சேர்த்துவிட்டாள். இறுதியில் வீடும் ஈடு வைக்கப்பட ஐந்து லட்சம் எட்டு இலட்சமாகிக் கொண்டது.

பொலீஸில் பதிந்து, பாஸ் எடுத்து, ஒருவாறு சங்கரை கொழும்புக்கும் ஏற்றிவிட்டாள்.

"ஹலோ" சோகமாய் சோபையற்று போனை வாய்க்கருகில் பிடித்திருந்தான். மறுமுனையில் முதலில் போனை எடுத்தவள் தாய் சொர்ணம்.

"சங்கர்......" அதிர்வுடன் கூடிய பிரமிப்புடன் அவள் குரல் தளும்பக் கேட்டாள். ஒருவாறு, நடந்ததை நாடகப் பொம்மையாய் ஒப்பித்துவிட்டான் சங்கர். "ஓ" வென்று அலறும் அவளை மறுமுனையில் யாரோ தேற்றுவது கேட்டது. அப்பாவாக இருக்கலாம். இல்லை தங்கையோ?

"என்ன சங்கர் இனி என்ன செய்யிறது?" அப்பாதான் முதலில் குரல் நடுங்கக் கேட்டார்.

"என்னப்பா, எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்ல" சூழ்நிலையை மறந்து விம்மத் தொடங்க, கோல் கட்டாயிற்று.

உறவினர்கள், நண்பர்களிடம் கெஞ்சி மன்றாடி, கடன்பெற்று, சங்கரை சுவிசுக்கு அனுப்பிவிட்டாள் சொர்ணம். அவன் சுவிசுக்குப் போகாமல் இருப்பதை அவளால் பொறுத்துக் கொள்ளவே இயலவில்லை. அவன் போய்ச் சேரமுன்னமே, பெண் தேடி பத்து இலட்சம் சீதனமும் பேசிவிட்டாள் அதனால் துடியாய்த் துடித்தாள்.


* * *

"நான் எவ்வளவோ கஷ்டப் சுவிசுக்குப் போய்ச் சேர்ந்து டேன்" சந்தோசப் பூக்களைச் சுமந்து வந்தது சங்கரின் கடிதம். ஒரு தடவைக்கு நாலு தடவையாய் திரும்பத்திரும்ப வாசித்தாள். உரத்து வாசித்தாள். "இஞ்சையடி என்ர மகனெல்லே சுவிசுக்கு போய்ச் சேர்ந்திட்டான்" வாய்முழுக்கப் பல்லாக பக்கத்து வீடெல்லாம் சென்று ஒலி பரப்பினாள். "இனியென்ன சொர்ணமக்கா நீங்கள் பெரிய கோடீஸ்வரி" வெளிவார்த்தைகள் களிப்பாக வெளிப்பட்டபோதும்மனம் பொறாமை தடங்களால் உள்ளுரப் புகைந்து கொண்டிருந்தது.

'அவன் போய்ச்சேர்ந்து முதல் வார பணத்தில நல்லூர் முருகனுக்கு இரண்டு பவுணில் அட்டிகை போடுவன்' இது சொர்ணத்தின் நேர்த்திக்கடன்.

நான்கு வருடம் நான்கு மாதமாய் நகங்கிச் செத்துவிட்டது. பத்தாய், இருபதாய், முப்பதாய் சங்கரிடமிருந்து மாதாமாதம் பணம் வந்தபடியே இருந்தது. சொர்ணம்தான் காசு எடுக்கப்போவாள். சிலோன் பாங்குக்கே அவன் பணம் அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். மெல்லியசேலையுடன் ஹான்ட் பாக்குடனும்போய் பணத்தை எடுத்துவருவாள். புத்தகத்தை காசாளரிடம் கொடுத்து காசு வந்ததை பார்த்துச் சொல்லுமளவும் அங்கே நீட்டு நீட்டாய்ப் போடப்பட்ட நீளக் கதிரையின் ஒருமுனையில் அமர்ந்து, காசு வந்தால் ஒப்பமிட்டு, காசைக் கவனமாக எண்ணி வாங்கி எடுத்து வருவாள். வரும் போது தனக்கொரு புதுரகச் சேலையும் எடுத்துவர மறக்கமாட்டாள்.

ஆறுவருடங்கள் அணைகடந்து விட்டன. மற்றமகனும் இருபத்தொரு வயதைத் தாண்டிவிட்டான். அவன்



அடிமனதிலும் வெளிநாட்டிற்குப் போய் அண்ணா மாதிரி காசு உழைக்க வேண்டுமென்ற ஆசை வேரூன்றியது.

"அம்மா, அப்பா, தம்பி உங்களை எப்ப பார்ப்பேனெண்டு கிடக்குது. நான் வாறமாதம் லீவில கொழும்புக்கு வாறன். நீங்களும் வாங்கோ" நான்கு வரிகளைத்தாங்கி வந்தது கடிதம். குற்றாலத்தில் குளிப்பதாய் மிதந்தாள் சொர்ணம். பாபுவுக்கும் ஆனந்தத்தை அடக்க முடியவில்லை.

கப்பலுக்குப் பதிந்து ஒன்று இரண்டு உடைமைகளுடன் கொழும்பில் வந்திறங்கிவிட்டார்கள். விதவிதமான உடைகள், நகைகள், ஸ்ரைல்கள். சொர்ணம் அப்படியே விக்கித்துப் போய்விட்டாள்.

சங்கர் ரொம்பவும் மாறிப்போய் விட்டான். முந்திய சாந்தம் இல்லை. பணிவு இல்லை. "ஹலோ மம்" அணைத்து அன்னையை முத்தமிட்டுக் கொண்டான் அவன். சொர்ணத்திற்கு இது மிகவும் பிடித்திருந்தது. சிதம்பரத்திற்கு இது எள்ளளவேனும் எடுபடவில்லை. அவன் மீண்டும் பிளைட் ஏறியதும் "என்ன இது புதுப்பழக்கங்கள். என்னதான் இருந்தாலும் எங்கட தாய்நாட்டுப் பண்பாடுகளை மறந்து விடுகிறதே?" வார்த்தைகள் வரட்சியையும் ஆத்திரத்தையும் கலப்படம் செய்து கொண்டு வெளிப்பட்டன.

ரைற் ஸ்கேட்டும், பிளவுசுடனும் வந்து நின்ற மனைவியையும் பார்க்க அவர் உதட்டுக்குமேல் கோபம் வந்தது. நாக்கை கடித்துக் கொண்டார். "டொக்கு டொக்கு" என்ற ஹீல்ஸ் சத்தத்துடன் அவள் நடக்க நடக்க அடி வயிற்றில் ஆத்திரம் சுரந்தது. இவரின் முன்னின்று உதடுகளைக் குவித்து நளினத்துடன் "எப்படி இருக்கிறது?" என்று கேட்டபோது அவரால் ஒன்றுமே சொல்லமுடியவில்லை. உதடுகள் எச்சில்பிசினால் ஒட்டப்பட்டு வாளாவிருந்தன. "நன்றாக இருக்கிறது" என்றார் பெருமூச்சுடன். எதையும் எடுத்துக்கொள்ளாமல் "பிளாஸ்கில் ரீ வைச்சிருக்கிறன் எடுத்துக் குடியுங்கோ" பதிலுக்குக் காத்திருக்காமல் மகனின் மோட்டார் சைக்கிளில் தொற்றி பறந்துவிட்டாள்.

சொப்பிங்குக்காகத்தான் இருக்கும். இரவு அவள் அவரின் காதுகளில் கிசுகிசுத்தது ஞாபகம் வர உதடுகளில் சிறுபுன்னகை வந்து உட்கார்ந்து கொண்டது.

"முந்திய சொர்ணமா இவள்? சேலைக்குள் பதுங்கிக் கிடந்தவளா இவள்? வாசலைத் தாண்டவே நாணிக்கோணி.....?

"இப்பொழுது இளமை திரும்பிவிட்டதா? என்னவோ அனுபவிக்கட்டும்!" இயல்பாகவே விட்டுக் கொடுக்கும் மனம் விலகிக் கொண்டது.

கொழும்பு என்றாலே ஒருவித பரபரப்பு, எங்கு செல்கிறோம்? என்ற உணர்வில்லாமலே அலையும் மக்கள். இதுதான் நாகரிகம் என்று பாரம்பரியங்களைப் படுகரியாக்கும் மக்கள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற இத்தியாதி நோய்களால் நிரம்பியிருந்தது அது.

அன்று ஊரடங்காம். அதையும் எடுத்துக்கொள்ளாமல் சொர்ணம் பாபுவை உஷார்படுத்திக் கொண்டிருந்தாள்.

"உதில திரும்பி அடுத்த ரோட்டில வீடு. இண்டைக்கு தைச்சு வைக்கிறன் எண்டவ.உடனை போய் எடுத்துக்கொண்டு வா" நாளை திருமண விழாவில் போடவேண்டிய பிளவுஸ் ஞாபகத்துக்குவர அவள் தன்நிலை மறந்தாள். அவளின் கொழும்பு நண்பி தன் மகனின் திருமணத்திற்கு இவளுக்கும் அழைப்பு விடுத்திருந்தாள். மோட்டார் சைக்கிளுக்கு உயிரூட்டி புறப்பட்டான் பாபு.

"என்னங்கோ, கொழும்பு என்ன மாதிரியான வாழ்க்கை நாங்கள் இங்கையே இருந்தால் என்னங்கோ?" செல்லமாய்க் குழைந்தாள் சொர்ணம்.

"இஞ்சை பார் உந்தக்கதையொண்டும் வேண்டாம். நான் எப்ப என்ர சொந்த ஊரில் போய் மூச்சு விடுவன் எண்டு கிடக்கு" பாய்ந்தார் மனைவிமீது. சீறினாலும் கீறினாலும் அவள் மாறப்போவதில்லை என்னும் மறக்கமுடியாத உண்மை சிதம்பரத்தின் மனதில் பளீரிட்டது.

ஆறாகி, ஏழாகி, எட்டாகியும் மகன் வராததைக் கண்டு, சொர்ணத்தின் தொண்டை வற்றிவிட்டது. கணவரின் ஏச்சிற்கும் பயந்து அறைக்குள் முடங்கிக் கிடந்ததாள். நேரம் பத்தாகிவிட்டது. இதயம் ஒருமுறை நின்று மறுபடியும் துடித்துக் கொண்டது. பொறுமையை பகிஷ்கரித்து கணவனின் கட்டிலை அணுகினாள்.

குட்டித்தூக்கத்திலிருந்தே சிதம்பரம் "என்னங்கோ?" என்ற மனைவியின் விசும்பல் கேட்டு இமைகளை உலுப்பினார்.

அவர் மறுபுறம் திரும்பிப்படுத்துக் கொட்டாவி விட்டார்.

"என்னங்கோ எங்கட பாபுவை இன்னும் காணேல்லை. எனக்கு பயமாய் இருக்குதுங்கோ" இயல்பாகவே உடல்நடுங்க விம்மினாள் சொர்ணம். துடித்து எழுந்தார் சிதம்பரம். மனைவியின் மீதும் மகன் பாபுவின் மீதும் கடும் கோபம் ஊசலாட ஒருவாறு அடக்கிக் கொண்டு வீதிக்கு இறங்கினார்.

எங்கும் தேடியும் பாபு இல்லை. அன்று முழுவதும் அவன் வரவேயில்லை. விடிந்ததும் அவசர அவசரமாய் பத்திரிகையை விரித்த சிதம்பரம் திடுக்கிட்டார்.

*"குண்டுவெடிப்பு, சந்தேகத்தின் பேரில் இருபது வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார். இவர் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மாதத்திற்கு முன்பு கொழும்பிற்கு"* நீண்டு சென்றது செய்தி. கொதிப்புடன் எழுந்த சிதம்பரம் மனைவியின் மீதுள்ள கோபத்தையெல்லாம் திரட்டிக் கதவை ஓங்கித் திறந்தபடி வெளியே சென்றார்.

ஐந்து லட்சம் வைத்தால்தான் விடுவிப்பதாக பொலீஸார் கூறினர். ஒருவாறு சங்கரிடம் அழுது ஐந்து லட்சம் தயாராகிவிட்டது. ஸ்ரேசனில் காவல் நின்று பொலிஸ் அதிகாரியின் கையில் பணத்தைத் திணித்து பாபுவை வெளியில் கொண்டுவரப் பட்டபாடு போதும் போதுமென்றாகி விட்டது.

மகனையும் ஏற்றிக்கொண்டு ஆட்டோவில் பறந்துகொண்டிருந்தார்கள். எங்கும் இருள் சூழ்ந்து பயமுறுத்திக்கொண்டிருந்தது. பழக்கப்படாத இடங்கள், அறிமுகமில்லாத முகங்கள். ஆட்டோ பிரதான வீதியிலிருந்து விலகி சந்து பொந்து எல்லாம் கடந்து ஒரு வெட்ட வெளியிப் பாதையில் தட்டுத்தடுமாறிச் சென்றுகொண்டிருந்தது. திரைச் சேலையை விலக்கிப் பார்த்த சொர்ணம் திடுக்கிட்டாள். "ட்ரைவர் நிறுத்து! நிறுத்து!" அவள் கத்தல் அடங்குமுன் நான்கைந்து முரடர்கள் ஆட்டோவை சூழ்ந்துகொண்டார்கள். ஆட்டோ சுயநினைவை இழந்து மௌனம் சாதித்தது.

**- ச.சுஜிதா -**

"நகைகள், பணம் எல்லாம் எடுங்கோ" உறுமினான் அவர்களின் ஹீரோவாய் தாடி வளர்த்திருந்த முரடன் ஒருவன். மூச்சுநின்று விடுமோ என்று பயமாய் இருந்தது சொர்ணத்திற்கு. கத்தியின் கூர்மை கண்களைக் குத்த சோபையற்று காதுத்தோடுவரை கழற்றி எறிந்தாள். சிதம்பரமும் பாபுவும் விக்கித்துப்போய் நின்றார்கள். முரடர்களில் ஒருவன் பாபுவின் கழுத்தில் மின்னிய ஐந்து பவுண் செயினையும் கழற்றி எடுத்துக் கொண்டான். மறுகணம் ஆட்டோவில் ஏறி முரடர்கள் முகிலாய் கலைந்து விட்டார்கள். சொர்ணம் கதறினாள்; புலம்பினாள்; ஏதேதோ அலற்றினாள்.

ஒருவாறு வீடுவந்து சேர்ந்து விட்டார்கள். விடிந்ததும் வேட்டியைச் சுற்றிக்கொண்டு நடையாய் சிதம்பரம் புறப்பட்டுவிட்டார். "என்னங்கோ கப்பலுக்குப் பதியவே?" உறுதியான வார்த்தைகள் சொர்ணத்திடமிருந்து வெளிப்பட்டன. சேலையால் போர்த்திருந்த மனைவியை ஏற இறங்கப் பார்த்தவர் ஒருவித புன்னகையுடன் தலையசைத்துவிட்டுப் புறப்பட்டார்.

# நந்தி விலகியது

நேற்றெமது வானத்தில் திங்கள் வரவில்லை;
காற்றெதுவும் வீசவில்லை; – ஊழிக் கூத்தாடும்
வேற்றுப் பேயிரைச்சல் அச்சத்தையூட்டியது;
நாற்றுக்குள் னெழுந்த களைமுற்றி கதிரழிந்தது

காற்றின்று திசைமாறியெங்கள் கழனிக்குள் வீசியது;
நேற்றிருந்த நிலைமாறி நிம்மதியெழுந்தது;
இற்றரையில் வசந்தமெழும் நம்பிக்கை பிறந்தது;
முற்றத்தில் படுத்து வழிமறிந்த மூதேவி விலகியது.

சந்தியிலே வந்து குந்திச் சதிராடி
பங்கம் பல செய்து பயிரழித்து
மந்தி போற் பாய்ந்து மணங்கீறி மதிகெடுத்த
நந்தி தொலைந்தின்று நன்மை பிறந்தது

எங்கள் வானத்தில் இருளகன்றது; திங்களெழுந்தது;
கங்குல் விலகியொரு காலை மலர்ந்து;
முந்தியெம் முற்றத்து ஒற்றையடிப்பாதையில்
குந்தியிருந்து குடிகெடுத்த நந்தி விலகியது.

சிந்தையிரங்கா சிறுநரிகளோடியது;
சந்தமெழுந்தது; வசந்தம் வந்தது;
நந்தவன வாழ்வொன்றுவரும் காலம்
சிந்தையிலே தோன்றியது; வெந்தமனம் குளிர்ந்தது.

- பண்ணாக நாரதன் -

# தமிழரும் நுண்ணுயிரும்

காற்றில் கடலடியில் கக்குமெரி மலைக்குழம்பில்
நாற்றில் நம்முடலில் நனிதுருவக் குளிர்பனியில்
வீற்றிருந்து வையமதை வியக்கவைக்கும் நுண்ணுயிரின்
பேற்றினையே தமிழரவர் பெற்றுவிட்ட பெருமையினை
ஏற்றமுற எம்வீட்டில் ஏதிலியாய் இருட்காட்டில்
சோற்றிற்காய் வெளிநாட்டில் 'ஷெல்' மழைக்காய்
புகைக் கூட்டில்
'ஏற்றி விட்டு' நடுறோட்டில் இயல்பாக இருப்பதெலாம்
தேற்றமுறத் தெரிவிக்கும், திகழ்தமிழர் உண்மையிது!

இருக்கின்ற இடமதுதன் இயல்பிற்கே இசைவாக்கி
பெருக்கித் தன்குடியினையே பேறுடனே வாழ்கின்ற
செருக்குமிகு நுண்ணுயிரின் செயல்களென எம்மவரும்
தருக்குற்று நிற்காது தகைப்பினையே அனுசரித்து
பெருக்கித் தம்மினத்தினையே பெருமையுற
வாழ்கின்றார் – ஆனாலும்
உருக்கித்தன் எதிரியவன் உயிர்போக்கும்
நுண்ணுயிரின்
செருக்கின்று எம் தமிழர் சிந்தையிலே மறைந்ததனால்
உருக்குலைந்து போகின்றார்; உலகமெலாம் சிரிக்கிறது!

- அனலையூர்ச் சேந்தன் -



# நான் மட்டுந்தான் இப்படியா??

**சித்திரா**

"நான் மட்டும்தான் இப்படியா?" இது எனக்குள்ளே அடிக்கடி எழும் கேள்வி. உண்மையான உள்ளத்தின் உணர்வுகளை அடக்கிப் போலித்தனமான உணர்வுகளை வெளிப்படுத்துதல் அவசியமாகின்ற போது இந்தக் கேள்வி நிச்சயமாக என் அடிமனத்திலிருந்து எழும்.

"குட்மோனிங் குமரன்!" எனக் காலை வணக்கம் சொல்லும் இரவீந்திரனுக்கு பதிலுக்கு நானும் "குட்மோனிங்" சொல்ல வேண்டிய கட்டாயம். என்னைப் பொறுத்தவரை இதய பூர்வமாக இரவீந்திரனுக்கு "குட்மோனிங்" சொல்லமுடியவில்லை. அவனைக்காணும்போதெல்லாம் 'இவன் உன் எதிரிக்குச் சமமானவன். உனக்கு வரவேண்டிய பதவியுயர்வைத் தட்டிப் பறித்தவன்! என்று மனம் சொல்லும். ஆனால் அவனுக்குப் பதிலுக்கு 'குட்மோனிங்' சொல்லாவிட்டால் நான் பொறாமை மிகுந்தவனாக முத்திரை குத்தப்படுவேன். அலுவலகத்திலுள்ள அனைவரும் உலகத்திலேயே பொறாமையுணர்வு கொண்ட ஒரேயொரு மனிதன் நான்தான் என்ற ரீதியில் விமர்சனம் செய்வர். அவர்கள் பார்வை வித்தியாசப்படும். நான் தீயவாகிப்போனதாய் உணர்வேன். இதனால் இரவீந்திரனுக்கு குட்மோனிங் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

* * *

"நீர் நல்ல வடிவப்பா" மனைவியிடம் அடிக்கடி சொல்லிக் கொள்வேன். சந்தோசமான குடும்ப வாழ்க்கைக்கு இந்த வார்த்தை மிகவும் அவசியப்பட்டு போனதால் அவளிடம் இதை அடிக்கடி சொல்லிக் கொள்கிறேன். ஆனால் என் மனைவியைவிட நல்ல வசீகரமான பெண்களை நான் காண நேரும் போதெல்லாம் என் மனைவிக்கு நாள்தோறும் பொய் சொல்லிக்கொண்டிருப்பதாக நெஞ்சில் ஓர் நெருடல். எனினும் மனைவியிடம் "உன்னை விட அழகான பெண்கள் எத்தனை பேரைப் பார்த்திருக்கின்றேன்" என்று சொல்ல முடியவில்லை. அவ்விதம் நான் சொன்னால் அவள் முகம்சுருங்கும்; அகம் குமுறும். அவள் என் மீது வைத்திருக்கும் மதிப்பும், பாசம், நேசம் ஆகிய எல்லாம் கணப்பொழுதில் பூச்சியமாகும். என்னோடு முகங் கொடுத்துப் பேசமாட்டாள். மொத்தத்தில் தேன்கூடு போலிருந்த தாம்பத்திய வாழ்க்கை சிதறிச் சின்னாபின்னப்பட்டுப்போகும். எனவே நான் நிச்சயமாக இங்கே உண்மைகளோடு முரண்படவேண்டியவனாகிறேன்.

* * *

"எல்லோரும் ஏறங்கிப் போங்க!" பச்சைச் சீருடையில் நின்றிருந்த அவனது வாயில் இருந்து தமிழ் கொலை செய்யப்பட்டு பிணமாக வெளிப்பட்டது. பேருந்தினுள் நின்றிருந்தவர்கள் மாத்திரம் இறங்கி நடந்தார்கள். என்னைப் போல இருக்கைகளில் இருந்தவர்கள் யாரும் இறங்கவில்லை. சீருடையில் நின்றிருந்தவன் சீற்றமடைந்தான். வேகமாக வந்து பேருந்தினுள் ஏறினான்.

'ஏய்! சொன்ன தமில் விளங்குதில்லை? சீற்றில இரிக்கிறவர்களும் ஏறங்கிப்போங்க" என்று சொன்னவன் முன்னிருக்கையில் இருந்த என்னை முறைத்துப்பார்த்தபடியே நின்றான்.

நான் எனது பயணப்பையைத் தூக்கிக் கொண்டு இருக்கையை விட்டு எழுந்து பேருந்தின் நுழைவுப்படியில் நின்றிருந்த என்னிலும் பத்துவயதாவது குறைந்த அந்தச் சீருடைக்காரனைப் பார்த்துச் சிரித்தபடி பேருந்தை விட்டு இறங்கினேன். என் மனதில் ஆத்திரம், கோபம், விரோதம் எல்லாம்ஒருங்கே எழுந்தன. முகம் சிவந்தது.

'உன்னை எழும்பச் சொல்ல இவன் யார்? இவன் சொன்னால் நீ எழும்பிவிடுவதா? நீ ஒரு பயந்தவன். கோழை. துணிவில்லாதவன். அதனாற்றான் அவனுக்குப் பயந்து இறங்கிநடக்கிறாய்' என்மனம் என்னைக் கேலி செய்தது. நான் மனத்திற்குச் சமாதானம் சொல்லமுடியாதவனாயிருந்தேன்.

சோதனைச் சாவடியைக் கடந்து பேருந்தை நோக்கி ஓடினேன். பேருந்து சிலஅடிகள் முன்னுக்குப் போய்நின்றது. ஓட்டுநர் மீது நிறையக் கோபமாக இருந்தது. ஆனால் அமைதியாக பேருந்தில் ஏறினேன். நான் இருந்த இருக்கையில் இப்போது வேறொருவன் அமர்ந்திருந்தான். எனக்கு ஆத்திரம் பொங்கியது. உதடுகள் துடித்தன. அவன் விரோதியானான். அப்போது என்னைக் கவனித்த அவன் இருக்கையை விட்டு எழமுயன்றான். என் கட்டுப்பாட்டை மீறி "வேண்டாம் நீ அமர்ந்திரு" எனச் சைகை செய்துவிட்டேன். எனினும் அவன் மீதிருந்த கோபம் எனக்கு பேருந்தை விட்டு இறங்கும் வரைக் குறையவில்லை.

* * *

அந்த நடு இரவில் கதவைத் தட்டியவர்களை என் மனத்தினால் இனங்காண முடிந்தது. என் மனைவி ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். அவளை எழுப்ப வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

"மணிமேகலை! எழும்பும் ஆரோ கேற்றில் தட்டினம். அனேக ஆமிக்காரராய்த்தான் இருக்கவேணும்"

நான் சொன்ன அந்த வாக்கியத்தின் முக்கிய பகுதிகள் அவள் காதில் விழுந்திருக்கவேண்டும். அவள் சட்டென்று விழித்துத் தூக்கம் கலைத்தாள். நான் எழுந்து போய் கதவைத்திறந்தேன். என் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. அவர்கள் துப்பாக்கியை நீட்டியபடி நின்றிருந்தனர். என்னைக் கண்டதும் "வீட்டைச் சோதனையிடவேண்டும். கேற்றைத்திற" என தமிழையும் சிங்களத்தையும் கலந்து கட்டளை பிறப்பித்தனர்.

'நாசமறுப்பார், நிம்மதியாய் நித்திரை கொள்ளவும் விடாங்களாம்' மனத்திற்குள்ளே திட்டித் தீர்த்தேன்.

அவர்கள் கட்டளைக்கு பணிவான குரலில் "அதற்கென்ன தாராளமாக சோதனையிடலாம்" என்ற வார்த்தைகள் என்வாயிலிருந்து வெளிப்பட்டன. நான் கேற்றைத் திறந்தேன்.

எனக்குப்பின்னால் நின்றிருந்த என் மனைவி "என்னப்பா! இவங்கள் ஒண்டு பாதியில நித்திரையைக் குழப்பிக் கொண்டு" என எனக்கு மட்டும் கேட்கக்கூடிய குரலில் சலித்துக் கொண்டாள்.

நான் மெல்ல எச்சரித்தேன் "உஸ்.... பேசாமல் இருமப்பா!" அவள் அடங்கிப்போனாள்.

அவர்கள் சப்பாத்துக் கால்களுடன் வீடுமுழுவதும் சோதனையிட்டுக் கொண்டிருக்க மீண்டும் என் மனைவி சலித்துக்கொண்டாள்.

"நேற்றுத்தான் கழுவின வீடு. அதுக்குள்ளே சப்பாத்துக்காலோட உள்ளிட்டு உழக்கிறாங்களப்பா".

நான் மீண்டும் எச்சரித்தேன். "பேசாமல் இருமப்பா. இரவுநேரம். அவங்களோட ஒண்டும் சொல்லக் கூடாது. அவங்கள் ஏதும் செய்து போட்டால் ஒண்டும் செய்யேலாது."

அவள் மௌனமானாள். அவர்கள் சோதனை முடிந்து புறப்பட்ட போது கேட்டார்கள்.

"நாங்கள் உங்களை நிறையவே தொல்லைப்படுத்திவிட்டோமா?"

அவர்கள் என்ன பதிலை நான் சொல்லவேண்டுமென எதிர்பார்த்தார்களோ நான் அந்தப் பதிலைச் சொன்னேன் - "இல்லை எந்தத் தொல்லையுமில்லை. நீங்கள் உங்களுடைய கடமையைத்தானே செய்கிறீர்கள். அதற்கு ஒத்துழைக்க வேண்டியவர்கள் நாங்கள்."என்றேன் நான்.

"நன்றி" எனக் கூறியபடியே வீட்டை விடு வெளியேறினர் எல்லோரும். நான் ஒரு போலித்தனமான பதிலைச் சொன்னதற்காகக் கூனிக் குறுகிப்போனேன்.

* * *

திருச்செல்வத்தின் தலைதெரிந்தது. அவன் வழமைக்கு மாறான உயரம் என்பதால் அலுவலக வளவிற்கு வெளியே அவன் நின்றாலும் மதிலுக்கு மேல் அவன் தலை இரண்டடி உயர்ந்து நிற்கும். வழமைக்கு மாறானதாய் இருப்பதெதுவும் வித்தியாசமாகத் தோன்றும் என்பதற்கு திருச்செல்வமே எடுத்துக் காட்டானான். அவன் மீது இப்போது எனக்கு ஓர் அக்கறை இருந்தது. 'ஒருவேளை கடந்த வாரம் என்னிடம் கடனாகவாங்கிய ஆயிரம் ரூபா நட்டக்கடனாகிவிட்டால்...' என்ற எண்ணம் அவன்மீது தனி அக்கறை கொள்ள வைத்தது.

'திருச்செல்வம்! அந்த ஆயிரம் ரூபாவை தாவன் மச்சான்' என்று கேட்க எண்ணுவேன். வாய்வரை வந்துவிட்ட வார்த்தைகள் தடைப்பட்டு நிற்கும். 'சே.... அப்படிக் கேட்டால் அவன் என்னைத் தரக்குறைவாய் நினைப்பான்' என்ற எண்ணம் என் மனதில் தோன்றி என்னை ஊமையாக்கும். அவனைக் காணும் போதெல்லாம் எப்போதும் போல புன்னகை செய்வேன். அவனோடு கதைக்கும் போதெல்லாம் அந்த ஆயிரம் ரூபாவை மறந்துவிட்டவன் போல பாவனை செய்கிறேன்.

* * *

வெள்ளிக்கிழமையன்று வெகு நேரமாகப் பேருந்துத் தரிப்பிடத்தில் நான் பேருந்திற்காகக் காத்து நின்றேன். பேருந்து வரவில்லை. பதிலாக நண்பன் பேரின்பநாதன் வந்து சேர்ந்தான்."என்னடாப்பா ஊருக்கே?" என்ற கேள்வியோடு ஆரம்பித்தான். அவன் வந்த ராசியோ என்னவோ ஒருவாறு பேருந்தும் வந்து சேர்ந்தது. இருவரும் ஏறிக்கொண்டோம். அப்போது நான் என்னை மீறி நடத்துநரிடம் "நெல்லியடிக்கு இரண்டு ரிக்கற்" என்றேன். என்னுடைய எதிர்பார்ப்பெல்லாம் பேரின்பநாதன் ஒப்புக்காவது நான் ரிக்கற் எடுப்பதைத் தடுப்பான் என்பதாக இருந்தது. ஆனால் அவன் எதுவும் சொல்லாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தான். நான் அவசரப்பட்டுவிட்டதாகத் தோன்றிற்று.

இச்சம்பவத்திற்கு பின்னர் மீண்டுமொருநாள் அவனும் நானும் சேர்ந்து பேருந்தில் பிரயாணம் செய்ய வேண்டி ஏற்பட்டபோது அவன் "நெல்லியடிக்கு ஒரு ரிக்கற்" என நடத்துநரிடம் சொன்னபோது நான் அந்நியப்பட்டுப் போனேன். 'நானும் அண்டைக்கு எனக்குத் தனியாக ரிக்கற் எடுத்திருக்கலாம்' என எனக்கு நானே கூறிக்கொண்டேன். ஆனால் அவ்விதம் என்னால் செய்ய முடியாது போயிற்று.

* * *

"என்ன ஒரேயடியா எழுதித்தள்ளுறியள்?" குரல் கேட்டு நிமிர்ந்தேன். விஜயா புன்னகைத்தபடியே நின்றிருந்தாள்.

"சும்மா தெரியாதே பொழுதுபோகாட்டால் எழுதித்தள்ளுவன்" நான் பதிலளித்தேன்.

நானும் விஜயாவும் கதைத்துக் கொண்டிருப்பதை பேருந்து நிலையத்தில் இருந்த பலரின் கண்கள் விடுப்புப்பார்த்தன.அவள் தொடர்ந்து என்னுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். பாடசாலை வகுப்பறையில் ஆரம்பித்த நட்பு சாயம் போகாமல் இருப்பது குறித்து எங்கள் இருவருக்கும் ஒருவித சந்தோசம்.

"தம்பி ஒரு பத்து ரூபா காசு தாவன். இராத்திரியும் சாப்பிடேல்ல, பாண்வாங்கிச் சாப்பிடுவம்" எங்கள் பேச்சுக்குக் குறுக்கே அந்தப் பிச்சைக்காரன் புகுந்து நின்றான்.

எதுவும் பேசாமல் என் சட்டைப் பையிலிருந்து ஒரு புத்தம்புதிய பத்து ரூபாத்தாளை எடுத்து அவனிடம் நீட்டினேன். அவனது பார்வையில், ஆச்சரியமும் ஏளனமும் கலந்திருந்தன. அவன் பணத்தை வாங்கிக் கொண்டு அப்பால் நகர்ந்தான். அந்தப் பிச்சைக்காரன் பலதடவை என்னிடம் இரந்திருக்கிறான். நான் ஒருசதமேனும் அவனுக்குக் கொடுத்ததில்லை. ஆனால் இன்று அவன் தக்கதருணம் பார்த்து கல்லை வீசி விட்டான். அவனுக்கு வெற்றி கிடைத்துவிட்டது. நான் தோற்றுப் போயவிட்டேன். விஜயாவுடன் கதைத்துக் கொண்டிருக்காவிடின் நான் நிச்சயமாக ஒரு சதமும் அவனுக்குக் கொடுத்திருக்கவேமாட்டேன். எதுவும் பேசாமல் செவிடனாக நின்றிருப்பேன். ஆனால் 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனின் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியின் கவிதையை ஆதாரமாகவைத்து கதை எழுதிவரும் நான் விஜயாவின் மனதில் தரம் தாழ்ந்து போவேன் என்ற எண்ணம் என்னை வேடதாரியாக்கி விட்டது. என்செயலால் விஜயா நிறையப் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அவள் பார்வையில் என் மீதான மதிப்பு உயர்ந்திருந்ததை என்னால் நன்கவதானிக்க முடிந்தது.

* * *

மனைவி என்பவள் அனேகமாக கணவனை அடிக்கடி மதிப்பிடுபவளாகவே இருக்கிறாள். அவளுடைய மதிப்பீட்டில் சித்தியெய்துவதற்கோ வெற்றிபெறுவதற்கோ நிறைய அனுபவம் வேண்டும்; புத்திசாலித்தனம் வேண்டும். என் மனைவியும் இப்படித்தான். அடிக்கடி என்னை மதிப்பிடுபவளாக இருக்கிறாள். எனக்குப் பதில் சொல்வதற்குப் போதிய அனுபவமில்லையெனினும் புத்திசாலித்தனம் இருப்பதாகவே கருதுகிறேன். இதனால் சில நேரங்களில் நிஜங்களை மறைத்துப் போலிகளை நிஜங்களாக்கி, அவளுக்குப் பதில் சொல்லி வருகிறேன். சந்தோசம் நிறைந்த தாம்பத்திய வாழ்க்கைக்கு இந்நிலைமை அவசியமாகிவிட்டதால் அது எனக்குத் தவறாகப்படவில்லை.

சம்பந்தன் கிளினிக் நோயாளர்களால் நிரம்பியிருந்தது. அங்கே மனைவியோடு நானும் இருந்தேன். அங்கேயிருந்தவர்களில் ஒருத்தி கண்ணைக்கவரக்கூடிய அழகில் இருந்தாள். 'எட இவள் எவ்வளவு வடிவு?' என்மனம் அங்கலாய்த்துக் கொண்டது. ஆனாலும் அந்த அழகான பெண்ணை கவனிக்காதவன் போல் நான் இருந்தேன். "மிஸ் நித்தியா" என்ற பெயர் கூப்பிடப்பட்டதும் அந்த அழகானவள் எழுந்து போனாள்.

கிளினிக்கை விட்டுப் புறப்பட்ட போது வழியில் என் மனைவி "அப்பா! அந்த நித்தியா எண்ட பிள்ளை நல்ல வடிவெல்லோ?"

"ஆரப்பா நித்தியா? நான் கவனிக்கேல்ல" என்பதில் அவளுள் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியதோ தெரியாது. என்னை அவள் மரியாதையோடு நோக்கியதாக உணர்ந்தேன்.

அப்போது எனக்கு ஒருவிடயம் தெளிவாயிற்று. இந்தச் சமூகத்திலும் தாம்பத்திய வாழ்விலும் மதிப்போடும் சந்தோசத்தோடும் வாழ விரும்பும் எவரும் உள்ளத்தின் உண்மையான உணர்வுகளை பல நேரங்களில் மறைத்தாக வேண்டும்.

(யாவும் சிந்தனை)

## "ரெலிபோன்" குயிலே!

ஆனையிறவில் அடி விழ – என்
அடி வயிற்றினில் இடி விழ
போனதேனடி கண்ணே – என்
'பூத்'திலிருந்த பூம் பெண்ணே?

உந்தன் மணி ஒலித்தபோது
உள்ளமெலாம் மகிழ்ந்ததும்
எந்தன் அன்புக் கையில் நீயும்
இன்புறவே இருந்ததும்
வெந்த காலமாகிப் போன
வித்தை கண்டு மனம் சிலிர்த்து
விந்தை யாகிப் போனேன் கண்ணே
வேண்டு முந்தன் தரிசனம் பெண்ணே!

பொக்கை வாயை மெல்லும் பாட்டன் – மனப்
புல்லரிப்பில் துள்ளும் இளைஞர்
அக்கரையில் வாழும் தம்பி – அவன்
அனுப்பும் காசை நம்பி
இக்கரையில் வாழும் வீட்டார் – இன்னும்
இன்னும் எத்தனை நாட்டார்
சொக்கி யுந்தன் அழகில் வருவார்
சொர்க்க மெனப் பணமும் தருவார்!

போனவளே உந்தன் வரவால்
பொலியுமெந்தன் வாழ்வு – அதனால்
ஆன மட்டும் பண்ணைக் கரையில்
அடியிருப்பேன் மீண்டும் வாராய்!

- அனலையூர்ச் சேந்தன்.

# மீண்டும் எய்ட்ஸ்.....

## நோய் நிலைமை

ஒருவருக்கு எச்.ஐ.வி தொற்றிய தும் உடனடியாக எய்ட்ஸ் வந்து விடுவதில்லை. வைரசு தொற்றும் நிலைமையில் நான்கு முதல் எட்டு வாரங்களுக்குள் குருதிப் பரிசோ தனை மூலமும் அதனைக் கண்டு பிடிக்க முடியாதுள்ளது. ஆனால் தொற்றிய வைரசு குருதியில் உள்ள வெண்குருதிக் கலங்களைத் தாக்கத் தொடங்குகின்றது. வழமை யாக உடலின் நோய் எதிர்ப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் வெண்குரு திக் கலங்கள் தாக்கப்படுவது அத் திவரத்தையே பெயர்க்கும் முயற்சி ஆகின்றது. ஆனால் தாக்கப்படும் வெண்குருதிக் கலங்கள் ஏனைய கிருமிகளைக் கண்டு செயற்படுவது போலவே நோய் எதிர்ப்பு நடவடிக் களில் பிரதானமாகின்றது. இதை ஏற்படுத்தும் பக்ரீரியாவான Mycobacterium Tuberculosis இவர் களை விரைவில் பிடிக்கின்றது. இவை தவிர வேறும் பல மிகச் சாதாரணமான நோய்கள் இவர்க ளில் தோன்றக்கூடும்.

இத்தகைய இறுதிக்கு முந்திய நிலையில் வைத்திய சிகிச்சை வருபவரிடம் எந்த மருந்தும் பயன் தராத நிலையில் எச்.ஐ.விக்கான இரத்தப் பரிசோதனை மேற்கொள் ளப்படும் அல்லது பிற பரிசோதனை களின் போது எச்.ஐ.வி. இருப்பது கண்டுபிடிக்கப்படுகின்றது.

இறுதி நிலையில் காய்ச்சல், நிறைக் குறைவு, இரத்தச் சோகை (Anaemia), வயிற்றோட்டம் (Diarrhoea), போன்ற பல நோய்கள் ஒன்றாகத் தென்படும். வாய்ப்புண், தோல் வியா திகள் போன்றன மேலும் உச்சமடையும். எந்த மருந் திற்கும் கட்டுப்படாத நிலையில் நோயாளி திண றவேண்டி இருக்கும். இறு தியில் மரணம் சம்பவிக் கும்.

எனவே எச்.ஐ.வி. தொற்றியநிலை சுமார் பத் துப் பன்னிரண்டு வருடங்க ளுக்குள்ளும் எய்ட்ஸ் கண்டநிலை சுமார் ஓரிரு வருடங்களுக்குள்ளும் மர ணத்தை நிச்சயிக்கும் என்பதில் ஐயமில்லை.



ஸாம்பிய அநாதை இல்லம் ஒன்றில் எயிட்ஸ் பிடிக்கப்பட்ட சிசு ஒன்றுக்குச் சிகிச்சை அளிக் கப்படுகிறது.

## நோயாளியும் சுற்றமும்

ஒருவருக்கு சாதாரண மாக ஏதாவது நோய் தென்பட்டாலே தெம்பு குறைந்துவிடும். அதுவும் சாதாரண நோய்களுக்கே மரணம் வந்துவிடுமோ என்ற ஏக்கம் வேறு ஆளைக்கொல்லும். பல ருக்கு வியாதி என்று சொல் லிக் கொள்ளவே கூச்சம். இப்படிப்பட்ட சமூகச் சூழ லில் எச்.ஐ.வி. இருக்கிறது என்ற நிலைமை உறுதி செய்யப்பட்டால் நோயாளி யின் நிலைமை என்னவாகும்?

மரணபயம் ஆளை முடித்துவிடும். அதை மிஞ்சிய மானப் பிரச்சினை தலைதூக்கும். அதைவிடச் சமூகத் தாலும் ஏன் குடும்பத்தாலும் தள்ளி வைக்கப்பட வேண்டிய நிலைமை உருவாகும். எனவே நோயாளி தனது நிலைமையைக் கேள்விப்பட் டதும் மிகவும் மன ஆதரவு தேவைப்படும் ஒரு மனமுடைந்த நிலையில்தான் காணப்படுவார். தற்கொலை முயற்சிகளில் ஈடுபட அத்தகையோர் முயலக்கூடும்.

சாதாரணமாக நோயாளிகள்மீது காட்டப்படும் அனுதாபம் எய்ட்ஸ் நோயாளிகள் மீது காட்டப்படுவ

கைகளில் இறங்குகின்றன. இதனால் ஆரம்பத்தில் எச்.ஐ.வி. இனப்பெ ருக்க விகிதமும் பரம்பலும் ஓரள வுக்கு கட்டுப்படுத்தப்படுகின்றன.

ஆனாலும் எச்.ஐ.வி.தொற்று ஏற் பட்ட ஓரிருவாரங்களில் காய்ச்சல், தலைவலி, தோல் அழற்சி, நிணநீர் முடிச்சுக்களில் மெதுமை, மூட்டுக்க ளில் வலியும் வீக்கமும் போன்ற சாதாரண அறிகுறிகள் தென்பட்டு மறைந்துவிடும். இவற்றைப் பெரி தாக எவரும் கருத்தில் எடுப்பதும் இல்லை. அடுத்துவரும் பத்து ஆண் டுகள் படிப்படியாக வெண்குருதி கலங்களை வென்று எச்.ஐ.வி உட லில் ஆதிக்கம் செலுத்தும் காலமா

## அங்கம் 2

இழந்து அனாதையாகும் நிலைமை ஜீரணிக்க முடியாதது. அவர்கள் செய்யாத தவறுக்கு அனுபவிக்கும் தண்டனையோ மிகப்பெரிது.

சொல்லப்போனால் எய்ட்ஸ் என் பது தவறு செய்தவர்களுக்கே அள வுக்கு மீறிய தண்டனை என்றுதான் கூற வேண்டும். இந்த நிலை கண்ட பின் சமுதாயம் வேறு ஒதுக்கித் தண்டிப்பது மேலும் நோயாளியை அவஸ்தைப்பட வைக்கிறது.

## இந்திய நிலைமை

மும்பையில் இனிக்க வாழ்ந்த ஒரு குடும்பம். கணவன் ஒரு கணக் காளர். மனைவியோ ஆசிரியை. குழந்தைகள் போதும் என்று மனைவி கருத்தடை சத்திரசிகிச்சை யான டியூபெக்ரமி செய்துகொண் டாள். வாழ்க்கை அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.

எனினும் கணவன் உறவின் போது ஆணுறையை வலியுறுத்தி யது அவளுக்குப் பைத்தியக்காரத் தனமாகத் தென்பட்டது. இயன்ற வரை அவளைத் தவிர்க்கவும் அவன் முயன்றுகொண்டிருந்தான். உற்சாகம் இன்றிக் காணப்பட்டான். இதையெல்லாம் வித்தியாசமாக

லப்பம் என்று ஆண்களும் நெருங் கிப் பழகிவிடுகிறார்கள். அலுவலக வேலையாக தனது செயலாளருடன் டில்லி வந்து தங்கிய ஓர் உயரதி காரி இரவையும் அவளுடனேயே உல்லாசமாகக் கழித்திருக்கிறார். காலப்போக்கில் சம்பவத்தையும் மறந்து விட்டார். அவளும் இடமாற்ற லாகி எங்கோ போய்விட்டாள்.

பலவருடங்கள் கழித்து இரத்த தானம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது இவரது இரத்தம் ஏற்கப்படாது நிராகரிக்கப்பட்டது. நோய் கண்டதும் அவளைத் துரோகி எனத் திட்டத்தான் இவரால் முடிகி றது. உல்லாசமாக இருந்துவிட்டு இப்போது அவளைத் திட்டி என்ன லாபம்?

திருமணப் பதிவுச் சான்றிதழ் முக்கியமானதல்ல. அதற்கு முன்னர் எச்.ஐ.வி. நெகட்டிவ் என்ற சான்றி தழை மணமக்கள் கொண்டுவர வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது என்கிறார் ஒரு பிரபல சென்னை டாக்டர். அத்தோடு தமக்கு எச்.ஐ.வி. இருக்குமா என்ற சந்தேகம் கொண் டவர்கள் இரத்தப் பரிசோதனை யைத் தயக்கமின்றித் தாமாக முன் வந்து செய்துகொள்வதே உகந்தது. பின்பே அவர்கள் உறவைப் பற் றியோ, திருமணத்தைப் பற்றியோ நினைப்பதுதான் அடுத்தவருக்குத் துரோகம் செய்யாத நிலையையா கும்.

நாய் கடித்தவர்கள் அதற்கு விசரா எனக் கட்டிவைத்துப் பத்து நாள் காத்திருத்தல் போலே தாம் உறவுகொண்டவர்களைப் பத்து வருடம் கண்காணிக்க வேண்டிய அவசியம் ஏக்கமாக எழுகிறது. ஒரு வருக்கு எய்ட்ஸ் கண்டால் எத்த

களோ, கொண்டாட்டங்களோ குறை யப்போவதில்லை.

பல ஆபிரிக்க நாடுகளில் வளர்ந் தோரில் இருபதுக்கும் மேற்பட்ட விகிதத்தினர் எச்.ஐ.வியைக் கொண் டுள்ளனர். இவற்றில் உச்சமாக பொற்ஸ்வானாவில் 25 வீதத்தின ரும், ஸிம்பாப்வேயில் 26 வீதத் தினருமாக சுமார் நாலு பேருக்கு ஒருவர் என்ற பயங்கர விகிதத்தில் நோயைக் கொண்டுள்ளனர். இது மனித இனத்தையே முற்றிலும் அழிக்கப் போதுமான விகிதம் ஆகும்.

ஆபிரிக்கப் பிரதேசங்களில் 65ஐ தாண்டும் சராசரி வயதெல்லை எய்ட்ஸ் நோயாளிகளைப் பொறுத்த வரை 40 ஆகின்றது. இது மேலும் வீழ்ச்சியடையும் ஆபத்துக் காணப் படுகிறது. இளைய வயதினரின் பெரும் எண்ணிக்கையிலான மர ணங்கள் பல்வேறு வகையிலும் சமூ கப் பாதிப்புக்களை ஏற்படுத்தவே செய்யும்.

ஆபிரிக்க வைத்தியசாலைக ளின் பிரேத அறைகள் எய்ட்ஸ் நோயால் இறந்தவர்களின் உடல் களால் நிரம்பி வழிகின்றன. குழந் தைகள் காப்பகங்கள் பல இந்நோ யால் பெற்றோரை இழந்த குழந்தை களினால் நிரம்பியுள்ளன. இக்குழந் தைகளில் சிலருக்கு நோயும் கண்டி ருக்கின்றது. இவர்களைப் பராமரிக் கப் போதிய நிதியோ, வசதிகளோ அப்பிரதேசங்களில் இல்லை.

## இலங்கை நிலவரம

வறிய நாடுகளில் எய்ட்ஸின் கோரத் தாண்டவத்திற்கு ஆபிரிக்கா ஓர் எடுத்துக் காட்டாக விளங்கு கின்றது. இதே நிலைமை இந்தியா விலும் வேறுபல ஆசிய நாடுகளி

# எங்கும் எய்ட்ஸ்.....

எடுக்க அந்தப் படித்த பெண்ணா லேயே இயலவில்லை. 33 வயதே யான அவள் ஓர் எம்.ஏ. பட்டதாரி.

அவள் நோய்வாய்ப்பட்டபோது எச்.ஐ.வி. இருப்பதாக வைத்திய அறிக்கை தெரிவித்தபோதுதான் எல் லாம் விளங்கிற்று. பைத்தியம் பிடித் தவள் போலானாள் அவள். கண வன் செய்த துரோகத்துக்குப் போரா டிப் பயனில்லை. பிள்ளைகள் அநா தைகளாகப்போவது மட்டும் நிச்ச யம். வீடு வந்தவள் வாயைத் திறக்க முன்னமே முற்றும் விளங்கிக் கூனிக் குறுகி நின்ற கணவனிடம் எதைக் கேட்டு என்ன லாபம் என்று விட்டு விட்டாள்.

இதுதான் பல நடுத்தர வர்க்க குடும்பங்களின் நிலை என்கிறது ஒரு பிரபல இந்தியப் பத்திரிகை. பெயர் மற்றும் இட விவரங்களைக் குறிப்பிட்டு அது பல பரிதாபக் கதைகளை வெளியிட்டு இருக் கிறது. இந்தியாவில் எய்ட்ஸ் நோயா ளிகளின் எண்ணிக்கை முப்பது லட்சத்தைத் தாண்டிவிட்டது என U.N. எய்ட்ஸ் தெரிவிக்கிறது.

னைபேர் ஏங்கிச் சாவார்களோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். ஆனால் கண்ட கண்ட இடங்களி லெல்லாம் உறவு வைப்பவர்கள் எங்கிருந்து நோயைப் பெற்றார்கள் என ஊகிப்பதும் கடினமே.

## ஆபிரிக்க நிலைமை

1999இல் மட்டும் உலகளாவிய ரீதியில் 26 லட்சம்பேர் எய்ட்ஸினால் இறந்திருக்கிறார்கள். இதில் 22 லட் சம் பேர் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர் கள். இதனை ஒரு படிப்பினையாக ஆபிரிக்கா எடுத்துக் கொள்ளுமா என்றால் அதுதான் இல்லை. ஏனெ னில் தற்போதும் எய்ட்ஸ் பரம்பல் விகிதம் ஆபிரிக்காவில்தான் அதி கம் எனலாம். அங்கு சுமார் 50 லட்சம் பேர் புதிதாக அதே ஆண் டில் எய்ட்ஸைப் பெறுகிறார்கள்.

2000 ஆண்டு முடிவடையும் போது பதினைந்து வயதிற்குட்பட்ட சுமார் ஒரு கோடி ஆபிரிக்கச் சிறு வர்கள் தமது பெற்றோரை இழந்து அநாதைகளாகி விடுவார்கள் என் றால் இதன் கோரத்தைச் சொல்ல வேறு வார்த்தைகள் தேவைதானா? இத்தகைய நிலைமைகள் உலகின் ஏனைய நாடுகளுக்கும் பரவ அனும திக்கலாமா?

வயதான காலத்தில் தனது நான்கு மகன்களையும், மருமகள் களையும் எய்ட்ஸுக்குப் பறிகொ டுத்த ஓர் ஆபிரிக்க மூதாட்டி தனது இருபது பேரப்பிள்ளைகளைக் காப் பாற்றப் போராடுகிறார். இன்னொரு வீட்டில் முப்பத்தி இரண்டு சிறார்கள் பரிதவித்து நிற்கிறார்கள். இப்படி இன்னும் எத்தனை வீடுகள் கிராமம் தோறும் இருக்கின்றனவோ தெரி யாது.

இவ்வாறு அநாதைகளாக விடப் படும் பெண் பிள்ளைகள் பருவம் வந்ததும் வேறு வழியேயின்றி விபச் சாரத்துக்கு வந்துவிடுகிறார்கள். அதன்மூலம் தமது குடும்பத்தைக் காக்க நினைக்கிறார்கள். இதனால் நோய்ப் பரம்பல் விகிதம் மென்மே லும் அதிகரிக்கிறது.

அநாதைகளாகி வீதிக்கு வரும் இளைஞர்களோ களவு, கொள்ளை மற்றும் குற்றச் செயல்களே கதி யென்று வாழும் நிலைமையே உரு வாகி வருகிறது.

ஏற்கனவே அரசியல், சமூக மற் றும் பொருளாதாரச் சிக்கல்களைச் சமாளிக்க இயலாமல் திண்டாடும் ஆபிரிக்காவை எய்ட்ஸ் மேலும் சின் னாபின்னமாக்குவதை உலக நாடு கள் வெறுமனே பார்த்துக் கொண்டி ருக்கமுடியாது. நோய் நிலைமையை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்றும் கருத இயலாது. கறுப்பர்கள் மீது வெள்ளையர்கள் கொண்டுள்ள கடும் மோகம் இந்த அச்சத்தால் தணியப்போவதில்லை. நாடுகளுக் கிடையேயான போக்குவரத்துக்

லும் தென்படத்தான் போகின்றது. இலங்கையிலும் கூட வெளிநாட்டுத் தொடர்புகளும், உல்லாசப் பயணி களின் வருகைகளும் அதிகரித்து வருகின்றது. வெளிநாடு செல்லும் பணிப்பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. அண்மை யிலும் குவைத் நாட்டில் இருந்து நூற்றுக்கணக்கான பணிப்பெண்கள் பாலியல் இம்சைகள் மற்றும் கொடு மைகள் காரணமாகத் தாயகம் திரும்பி இருக்கிறார்கள்.

**- அம்பிகா -**

இத்தகைய நிலைமைகள் நாட் டின் ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல. அத்துடன் அதிகரித்து வரும் எய்ட்ஸ் நோயாளிகளையும் இதனால் உருவாகப்போகும் அநா தைகளைப் பராமரிக்கும் நிலைமை யையும் ஏற்கனவே போரினால் அநா தைகளைக் குவித்து இருக்கும் ஒரு நாட்டைப் பொறுத்தவரை பெரும் சுமையாகவே கருதப்படல் வேண்டும்.

வடபகுதியைப் பொறுத்தவரை யில் அடிக்கடி பத்திரிகைப் பக்கங்க ளைப் பிடிக்கும் சீருடையினரின் பாலியல் வல்லுறவுகள் மற்றும் அவர்களுடனான தொடர்புகள் எத்த கைய அனர்த்தத்தில் போய் முடி யுமோ என்ற உள்ளார்ந்த ஏக்கம் மக்களிடையே நிலவவே செய்கின் றது.

அத்தோடு அடிக்கடி எய்ட்ஸ் செய்திகள் வந்து அதிரடி அடிக்கத் தவறுவதில்லை. இத்தகைய செய் திகள் வரவர எத்தனைபேர் ஏங்கிச் சாகிறார்களோ அவரவருக்குத்தான் தெரியும்.

எனவே வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும் என்ற நிலைமை இப்போது இலங்கையி லும் இல்லை. கடுமையான எச்ச ரிக்கை உணர்வுடன் செயற்பட்டால் அன்றி இத்தகையதோர் ஆபத்தி லின்றும் சமுதாயத்தை காத்து விடல் இயலாத காரியமே. துணை முறைகளாக பண்பாடு வலியுறுத் தும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலைப்பாடும் திருமணத்திற்கு முந் திய பாலியல் தொடர்புகள், ஏற்பற்ற நிலைமையும் பெருமளவில் இச்சிக் கலில் இருந்து சமுதாயத்தை விடு விக்கவே செய்யும் என்பதில் இரு கருத்துக்களுக்கு இடமிருக்க முடி யாது.

இந்த நிலைமையை சட்டங்கள் போட்டு அமுல் செய்ய முடியாது என்பதே பெரிய பலவீனம் ஆகின் றது. ஒவ்வொருவரும் இத்தகைய நிலைப்பாட்டிற்கு ஈடுகொடுத்தே ஆகவேண்டும் என்ற வலியுறுத்தல் எவ்வளவு தூரம் எடுபடும் என்ற

(XV-ஆம் பக்கம் பார்க்க)

# என்றும் எய்ட்ஸ்!

கும். இக்காலப் பகுதியில் ஒரு கன மில்லிமீற்றர் குருதியில் உள்ள வெண்குருதி கலங்களின் எண் ணிக்கை 750 முதல் 500 வரையாக சாதாரண நிலைமையிலும் சற்றே குறைவடைய ஆரம்பிக்கும். இக்காலத் தில் சாதாரணமான ஒருவராகவே தொற்று ஏற்பட்டவர் தென்படுவார்.

எச்.ஐ.வி. வைரசை தன்னுடலில் கொண்டுள்ள ஒருவரின் குருதியில் உள்ள இந்த வெண்குருதிக் கலங் களின் எண்ணிக்கை கனமில்லிமீற்ற ருக்கு ஐநூறிலும் குறைவடையும் போது எந்தச் சாதாரண நோயையும் எதிர்க்கும் சக்தியை அவருடல் இழக்கின்றது. இந்த எண்ணிக்கை இருநூறிலும் குறையும்போது அவரை எய்ட்ஸ் நோயாளி என இனம் காண லாம். அவரில் பொதுவாகத் தென்ப டும் முதலாவது நோய் நியூமோ னியா (Pneumonia) ஆகவே இருக் கும். இதை ஏற்படுத்தும் பங்கசு வான (Pneumocystis Carinii) சாதா ரணமாகவே காற்றில் பரம்பி அனை வருமே தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் காணப்பட்டாலும் எய்ட்ஸ் நோயாளிகளை இது விரைவில் தாக் கிவிடுகின்றது.

காசநோய் எனப்படும் Tuberculosis எய்ட்ஸ் நோயாளியின் சுவாசத்தொகுதியை தாக்கும் நோய்

தில்லை. காரணம் நோய் தொற்றி விடுமோ என்ற அச்சமும் நோயாளி நோயைப் பெற்றமைக்கான காரணங் களுமாகும். கருணை காட்ட வேண் டிய வைத்தியர்களும், தாதியர்க ளுமே பல சந்தர்ப்பங்களில் நோயா ளியைத் தவிக்க விட்டுவிடுகிறார் கள்.

நோயைக் கொண்டவர் படுமோச மான பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபாடுள்ளவர் என்று எடுத்தவுடன் முடிவுகட்டிவிடக் கூடாது. பலருக்கு வேறு காரணங்களாலோ அல்லது ஒருமுறை தவறும்போதோ கூட நோய் வந்திருக்கலாம். விபச்சார விடுதிகளில் கூட கட்டாயம் எய்ட்ஸ் இருக்கும் என்றில்லை. அங் கெல்லாம் தப்பி வந்தவர்கள் தனிப் பட்ட தொடர்புகளிலிருந்து - அது வும் ஓரிரு சந்தர்ப்பங்களுடனேயே - நோயைப் பெற்றுவிடுகிறார்கள்.


பல அப்பாவிக் குடும்பப் பெண் கள் தவறிழைக்கும் கணவன்மாரி டமிருந்து நோயைப் பெறுகிறார்கள். வயிற்றில் வளரும் சிசுவுக்கே பிறக்கு முன்பே தொற்று ஏற்பட்டு விடுகிறது. சில குடும்பங்களில் நோயைக் கொண்டு வந்தது கணவனா, மனை வியா என்ற சர்ச்சை எழுகிறது. மூலம் எதுவானாலும் பிள்ளைகள் தாயையும், தகப்பனையும் ஒருமித்து

ஒரு வைத்தியர் தகவல் தரு கையில் சென்னையில் பிரபல தொழிலதிபர் ஒருவரின் இரண்டு புத் திரர்களுக்குத் தான் எய்ட்ஸ் நோய்க்கான சிகிச்சை அளித்து வருவதாகத் தெரிவித்தார். விபசாரி களுடனோ கீழ்மட்டப் பெண்களு டனோ தொடர்புகொண்டிராத அவர் களின் சகவாசமெல்லாம் பெரிய இடத்துப் பெண்களுடன்தானாம். விளைவு இருவரின் மனைவிமாருக் கும் ஒருவரின் குழந்தைக்கும் எய்ட்ஸ். இனி வாழ்க்கையில் எத் தனை வசதி வாய்த்தும் என்ன லாபம்?


பல இளம் வயதினரும் திரும ணத்திற்கு முன்னரே எய்ட்ஸைப் பெற்றுவிடுகிறார்கள். பலருடனும் உறவுகொள்ளும் மேலைநாட்டு மோகம் இந்தியாவிலும் வேகமாகப் பரவிவருவது இதற்குக் காரணமா கிறது. சினிமா, பெண்களின் கூச் சத்தை வெட்டி வருகிறது. இதனால் தவறும் பெண்களின் தொகையோ அதிகரித்த வண்ணமேயுள்ளது.

வேலைக்குப் புறப்படும் பெண் கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக் கத் துடிக்கிறார்கள். குடிப்பதிலும் கூத்தடிப்பதிலும் ஆண்களை மிஞ் சத் துடிக்கும் சிலரிடம் வாய்த்தது


# உள்நாட்டு மீனினங்களுப




கெண்டை (CARP) - *PUNTIUS TITTEYA.*




பனை நார் மீன் - *MACROPODUS CUPANUS.*



முதிர்ச்சியடைந்த விலாங்கு - *ANGUILLA BICOLOR BICOLOR* APPROACHING THE SILVERY PHASE.



கொறாமி - *OSPHRONEMUS GORAMY.*



விலாங்கு RIPED SNAKE HEAD - *OPHICEPHALUS STRIATUS.*



விலாங்கு (EEL) - *ANGUILLA NEBULOSA NEBULOSA.*

குகன்

## இலங்கையின் மீன்வளமு

இலங்கையில் சிற்றாறுகள் ஆறுகள், குளங்கள், குட்டைகள், நன்னீரேரிகள் நிறைந்த அளவில் இருப்பதோடல்லாமல் கடல்நீரேரிகள், குடாக்கடல்கள் என்றவகையில் உவர்நீர், உப்பு நீரேரிகளும் நிறைந்த் அளவில் உண்டு. இவற்றில் உயிரின வகைகளும் நிறைந்த அளவில் உண்டு. உள்நாட்டு நீர் நிலைகளுக்குரிய மீனினங்களை மக்கள் நாடுவது குறைவு. மீன் வளர்ப்புத் திட்டங்கள் வாயிலாக, நல்லின மீன்களைப் புகுத்தி பலனைப் பெறலாம். நன்னீருக்குரிய விலாங்குகள் இங்கு போதிய அளவில் கிடைத்தாலும் மக்கள் அதை விரும்புவதில்லை. ஜப்பான்காரருக்கு விலாங்கு ஒரு விருப்பஉணவு (DELICACY). விலாங்கு வளர்ப்பிற்கு இலங்கையில் போதிய வசதியுண்டு; குறிப்பிட்ட காலங்களில் குடம்பிகளைச் சுலபமாகச் சேகரிக்கவும் முடியும்.

வாழ்க்கை முறையைப் பொறுத்தவரை. இவற்றுள் தாவரபட்சணிகளுமுண்டு; ஊனுண்ணிகளுமுண்டு. வளர்ப்புக்கு ஏற்றவை தாவர பட்சணிகள். வளர்ப்புக்குரிய இடங்களில் ஊனுண்ணிகள் புகுந்தால் பிரச்சினைதான்.

நன்னீருக்குரிய சில மீனினங்கள், மழை காலங்களில், தரைக்கு மேலாக அரக்கிச் சென்று, குளத்திலிருந்து குளத்துக்குப் பரவுவதுண்டு. இவற்றிற்கு மேலதிக சுவாச உறுப்புக்கள் இருப்பதனால், வளிக்குரிய சுவாசம் நிகழ்த்தி, நீண்டநேரம் நீருக்கு வெளியே இருக்க முடியும்; ஆனால் உடல் உலர்ந்தால் விரைவில் இறந்து விடும். இவைபோன்ற முன்னோடிகளிலிருந்துதான் ஈருடக வாழிகள் தோன்றியிருக்க வேண்டும்.

கோடை காலங்களில். உள்நாட்டு நன்னீர் நிலைகள் வற்றிப் போக வாய்ப்புண்டு. அதனால் பல மீனினங்கள் சேற்றில் வளை தோண்டிப் புதைந்தோ, நீர் நிலைகளுக்குரிய மரப்பொந்துகளிலோ கோடை நெடுந்தூக்கம் நிகழ்த்தி தகா தகாலங்களைத் தாண்டும் இசைவாக்கமுடையவை.

மனிதன் தூண்டில் கொண்டு மீன் பிடிப்பதை ஒரு பொழுதுபோக்காகவும் விளையாட்டாகவும் (SPORT) கருதுகின்றான். மார்லின்கள் (MARLINS), சியர்மீன்கள் (SEAR FISH) ஆபத்தானவை; மிகவேகமாக நீந்தக் கூடியவை: நீரிலிருந்து பல அடிகள் உயரத்திற்கு எகிறிக்குதிக்கக் கூடியவை; தூண்டிலில் மாட்டுப்பட்டால் பெரிய போராட்டத்தின் பின்பே அடங்கும். அதனால் இவற்றை வேட்டையாடுவதையே பெரிதும் விரும்புவதுண்டு. தட்பவெப்பப் பிரதேச ஆறுகளுக்குரிய TROUT மீன்களைப் பிடிப்பதற்கும் மிகுந்த பிரயத்தனம் வேண்டும். இவை இலேசில் தூண்டிலைக் கவ்வா: அகப்பட்டால் பெரிய போராட்டத்தைக் காட்டும்.

தமிழகத்தில் உதக மண்டலம், கோடைக் கானல் போன்ற இடங்களிலும், இலங்கையில் நுவரேலியா மாவட்டத்திலும் உள்ள சிற்றாறுகள், ஆறுகள் ஏரிகளிலும் TROUT மீன்கள் புகுத்தப்பட்டன. இவற்றின் எச்சங்கள் இன்றுமுண்டு.

இப்பொழுது சில நன்னீருக்குரிய மீனினங்களைக் கவனிப்போம்:

### 1. கெளிற்று மீனினங்கள்

CAT FISHES என அழைக்கப்படும் இவை இலங்கையில் ஆறு இனங்களுண்டு. கெளிறுகள் ஊனுண்ணிகள். மூஞ்சியிலுள்ள தொடுமுனை (BARBEL)களைக் கொண்டு இவற்றைச் சுலபமாக இனங்காணலாம். மழை காலங்களில் தரைக்கு மேலாகவும் இடப்பெயர்ச்சி செய்யும். பூக்களைத் தவிர, மேலதிக சுவாச உறுப்புக்களுமுண்டு. உண்ணக் கூடியவை. விடமுட்கள் உண்டு.

*OMPOK BIMACULATUS* (BUTTER CAT FISH) - இரண்டு சோடி தொடுமுனைகளை உடையது. ஆறுகளுக்குரியது.

*MYSTUS KELATIUS* - நாலு சோடி தொடுமுனைகளை உடையது. சிற்றாறுகளிலும் ஆறுகளிலும் சாதாரணமாகக் காணப்படும்.

*MYSTUS VITTATUS* - நாலு சோடி தொடுமுனைகளை உடையது. குளங்களிலும். சிறிய சிற்றாறுகளிலும் காணப்படும்.

*MYSTUS GULIO* - நாலு சோடி தொடுமுனைகளை உடையது. முகத்துவாரங்களுக்குரியது. கூட்டமாக வாழும். சாதாரணமாகக் காணப்படும். நன்னீர் நிலைகளுக்கும் அலைந்து வருவதுண்டு.

*CLARIAS TEYSMANNI BRACHYSOMA* (SPOTTED CAT FISH) - சாதாரணமாகக் காணப்படும் கெளிறு. நாலு சோடி தொடுமுனைகள். தாழ் நாட்டுக்குரிய, கலங்கிய சிற்றாறுகளிலும் குளங்களிலும் காணப்படும்.

**அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்**

*HETEROPNEUSTES FOSSILIS* (STINGING CAT FISH) - இது ஓர் உயிருள்ள உயிர்ச்சுவடி. நாலு சோடி தொடுமுனைகள். தாழ்நாட்டுக் குளங்கள், குட்டைகளிலும், சில சமயங்களில் ஓரளவு உவர் நீர்நிலைகளிலும் சாதாரணமாகக் காணப்படும். விடமுள்ள தோட்பட்டை முட்களுண்டு. இதனால் குத்துவதற்குப் பின்னிற்பதில்லை. கொட்டிய காயத்தில் வேதனை தரும் புண் தோன்றலாம். ஆனாலும் சுவையான மீன்!

### 2. வாளை மீன்

FRESH WATER SHARK எனப்படும் இது. நன்னீருக்குரியது. ஓர் இனம் மாத்திரமுண்டு - *WALLOGO ATTU* ஆற்றுவாளை என்ற தமிழ்ப் பெயரின் இலத்தீனாக்கமே விஞ்ஞானப் பெயர். இரண்டு சோடி தொடுமுனைகளுண்டு. அதனால் கெளிற்று மீனினம் என்றே கொள்ளவேண்டும்.

மெய்யான வாளைமீன்கள் கடலுக்குரியவை. ஆழமான, ஓடும் நீர்நிலைகளில் வாழும். தாழ் நாட்டு ஆறுகளிலும் குளங்களிலும் காணப்படும் இது ஓர் இரை கௌவி. சிறிய நீர்ப்பறவைகளையும் பிடித்து உண்பதுண்டு.

### 3. விலாங்குகள்

EELS என்பது ஆங்கிலப்பெயர். நம்மிடையேயும் விலாங்குகள் உண்டு. நீரிலும் விலாங்குகள் உண்டு. நீர் வாழ்க்கைக்குரியவை ஒன்றில் கடல் வாழ்க்கைக்குரியவையாகவோ, அல்லது நன்னீருக்குரியவையாகவோ இருக்கும்.


கடல் வா
கடற்கரைகளி
தனமானவை;
பின்னிற்பதில்
.தனால் கடித்
ஏற்படும். இ
தில்லை. ந
ஆயினும் க
இவை உண
வர்களும், சிற
விரும்பி உண்
வளர்ச்சி அ
(SILVERY E
கடலை நோக்
சகல முண்மீ
ழும். பெண்க
அவற்றிற்கு மே
சொரிய, புறக்
மீன்களில் புண
நிகழும்.) சகல
கள். இலங்கை
யமான சாதி
*SOX, MURA*
*OPHIS, OPH*
*PHIS, CAL*
*THYRSOIDE*
*RAX, ECHID*
*UROPTERYC*
நன்னீருக்கு
சியடைந்ததும்
முட்டைகள் ெ
முகத்துவாரங்க
ரும். அல்லது
கால்வாய்கள்
அங்கு வளரு
செல்லக்கூடிய
மேலதிக சுவா
இவற்றினால்
உயிருடன் இ
ஆனால் உ
யும். கோடை
யும் இவற்றிற்கு

### 4. பன

CLIMBIN
படும். *ANABA*
இலங்கையில்
நிலைகளிலும்
காணப்படும் மீ
யவை. தரை ே
கூடியவை. கூ
நம்பி வாழும்.
வளிக்குரிய சு
வலையால் த
இறந்து விடும்.
நெல் மணிக
நெல்வயல்களு
களில் நீர் இரு
என்ன, ஆனா
தத் திருட்டு
பயன்படும்.

### 5.


*MACROP*



கெளிற்றுமீன்கள் (CAT FISHES) - 1. *LEPIDOCEPHALUS THERMALIS,* 2. *NOEMACHEILUS BOTIA,* 3. *NOEMACHEILUS - NOTOSTIGMA.*



விலாங்கு(EEL) - *ECHIDNA NEBULOSA.*



விலாங்குக் குடம்பிகள் (RIBBON LARVAE OF CEYLON EELS).



விலாங்கு
*COLOR*



பனைமே
*ANABAS TE*

ன்டு. கெளிறுகள்
ா தொடுமுனை
இவற்றைச் சுலப
காலங்களில்
ர்ச்சி செய்யும்.
வாச உறுப்புக்க
வ. விடமுட்கள்

*S* (BUTTER
தொடுமுனை
தரியது.
நாலு சோடி
சிற்றாறுகளிலும்
காணப்படும்.
சோடி தொடு
களிலும். சிறிய

சோடி தொடு
கத்துவாரங்க
சாதாரணமாகக்
கும் அலைந்து

*RACHYSOMA*
சாதாரணமாகக்
டி தொடுமுனை
ங்கிய சிற்றாறு
படும்.
*SILIS* (STING-

...ம்
...ருவிதம்

ிருள்ள உயிர்ச்
கள். தாழ்நாட்
சில சமயங்க
லும் சாதாரண
தோட்பட்டை
வதற்குப் பின்
தில் வேதனை
ாலும் சுவை

னப்படும் இது.
த்திரமுண்டு -
என்ற தமிழ்ப்
நானப் பெயர்.
ன்டு. அதனால்
ர்ளவேண்டும்.
லுக்குரியவை.
வாழும். தாழ்
காணப்படும்
பறவைகளை

பயர். நம்மி
ன்டு. நீரிலும்
கக்குரியவை
வையாகவோ,
ா இருக்கும்.



...*BULOSA.*



LARVAE

# ...களும் பல்வகைமையும்—II

குகன்

## ...வளமும் பல்வகைமையும்

கடல் வாழ்க்கைக்குரியவை, கற்பாங்கான கடற்கரைகளில் காணப்படும். இவை மூர்க்கத் தனமானவை; விடமுள்ளவை; கடிப்பதற்குப் பின்னிற்பதில்லை. விடமுள்ளவையாக இருப்ப தனால் கடித்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இவை உணவாகப் பயன்படுவ தில்லை. நன்னீருக்குரியவை விடமற்றவை; ஆயினும் கடிப்பதற்குப் பினனிற்பதில்லை. இவை உணவாகப் பயன்படும். மேலை நாட்ட வர்களும், சிறப்பாக ஜப்பானியர்களும் இதை விரும்பி உண்பார்கள். நன்னீருக்குரியவை பூரண வளர்ச்சி அடைந்ததும் வெள்ளிமய விலாங்கு (SILVERY EEL) என அழைக்கப்படும். இவை கடலை நோக்கிச் சென்று அங்கு முட்டையிடும். சகல முண்மீன்களிலும் புறக்கருக்கட்டல் நிக ழும். பெண்கள் முட்டைகளை இட, ஆண்கள் அவற்றிற்கு மேலாக நீந்திக் கொண்டு விந்தைச் சொரிய, புறக் கருக்கட்டல் நிகழும். (கசியிழைய மீன்களில் புணர்ச்சி நிகழ்ந்து, அகக்கருக்கட்டல் நிகழும்.) சகல இனவிலாங்குகளும் ஊனுண்ணி கள். இலங்கையில் பல இனங்களுண்டு. முக்கி யமான சாதிகள் *ANGUILLA, MUROENE-SOX, MURAENI CHTHYS, PISOODON-OPHIS, OPHICHTHUS, BRACHYOSMO-PHIS, CALLE CHELYS, CAECULA, THYRSOIDEA (MURAENA), GYMNO THO-RAX, ECHIDNA (MURAENA), ARNDHA, UROPTERYGIUS* போன்றவை.

நன்னீருக்குரிய விலாங்குகள் பூரண வளர்ச் சியடைந்ததும் கடலில் சென்று முட்டையிடும். முட்டைகள் பொரித்துத் தோன்றும் குடம்பிகள் முகத்துவாரங்களை அடைந்து, ஆறுகளில் வள ரும். அல்லது குளங்கள், குட்டைகள், அகழிகள், கால்வாய்கள் போன்ற நீர்நிலைகளை அடைந்து அங்கு வளரும். நிலத்தின் மேலாக நகர்ந்து செல்லக்கூடிய இயல்பும் இவற்றிற்கு உண்டு. மேலதிக சுவாச உறுப்புக்கள் இருப்பதனால் இவற்றினால் நீருக்கு வெளியே நீண்ட நேரம் உயிருடன் இருக்க முடியும்.

ஆனால் உடல் உலராமல் இருப்பது அவசி யம். கோடை நெடுந்தூக்கம் நிகழ்த்தும் இயல் பும் இவற்றிற்கு உண்டு.

### 4. பனையேறி/மரமுரஞ்சி/ காவையன்

CLIMBING PERCH என்றும் அழைக்கப் படும். *ANABAS TESTUDINEUS KAVAIYA* - இலங்கையில் பரவலாகப் பல தரப்பட்ட நன்னீர் நிலைகளிலும் சாதாரணமாகவும் அதிகமாகவும் காணப்படும் மீன். கூட்டமாக வாழும் இயல்புடை யவை. தரை மேலாக நன்றாக நகர்ந்து செல்லக் கூடியவை. கூடுதலாக வளிக்குரிய சுவாசத்தை நம்பி வாழும். மீன் தொட்டியில், மேலே வந்து வளிக்குரிய சுவாசம் நிகழ்த்த முடியாமல் கம்பி வலையால் தடுக்கப்பட்டால், மூச்சுத்திணறி இறந்து விடும். நெல் விதைத்த காலங்களில், நெல் மணிகளைப் பொறுக்கி உண்பதற்காக, நெல்வயல்களுக்கு வருவதுண்டு - நெல்வயல் களில் நீர் இருந்தாலென்ன இல்லாது போனால் என்ன, ஆனால் இரவு வேளைகளில்தான் இந் தத் திருட்டு வேலை நிகழும். உணவாகப் பயன்படும்.

### 5. பனை நார் மீன்

*MACROPODUS CUPANUS* எனப்படும் இம்மீன் நீரில் உள்ள, நீர் நிறைந்த தேங்காய் மட்டைகளின் கீழும், அழுகும் தாவரங்களின் கீழும் அல்லது நீர்த் தாவரங்களுக்கிடையேயும் பொதுவாகக் காணப்படும். தாழ்நாட்டில் குளங் கள் குட்டைகளிலும் அகழிகளிலும் சாதாரண மாகக் காணப்படும். நுளம்புக்குடம்பிகளை அழிப் பதில் பெரிதும் உதவும்.

### 6. கொறாமி அல்லது குறாமி

*OSPARONEMUS GORAMY* - என்படும் இம்மீன் வளர்ப்புக்காகப் புகுத்தப்பட்டது. விரை வாக வளரும். விரைவில் இனப்பெருக்கம் செய்ய ஆரம்பிக்கும். சுவையான மீன். இது வொரு தாவர பட்சணி. ஆகாயத்தாமரை, நெய்த் தாமரை, அல்லி போன்றவற்றைக் கட்டுப்படுத்த உதவும். சோறு, பிரிந்தழியும் சேதனவுறுப்பிற் குரிய பொருள்கள், சிறிய மீன்கள் போன்றவற் றையும் உணவாகக் கொள்ளும்.

### 7. விரால்

SNAKE HEAD - விரால் இனங்கள் இலங் கையில் பல இனங்கள் உண்டு. அவையாவன *O.PHICEPHALUS STRIATUS* - விரால் - MURREL /STRIPED SNAKE HEAD - இதில் நிறங்கள் பட்டிகளாகவிருக்கும்; *O.MARULIUS* - இரு விரால் - GIANT SNAKE HEAD - நிறங்கள் உடல் நீளத்துக்கு தொடர்ச்சியாக விருக்கும்; *O.PUNCTATUS* - கொறுவை/ புள்ளிவிரால் - GREEN SNAKE HEAD - நிறங்கள் புள்ளிகளாக விருக்கும்; *O.GACHUA KELAARTI* - பறைக் கொறுவை - BROWN SNAKE HEAD - முதுகுப்புறம் கபில நிறம், பக்கங்களில் "W" வடிவமுள்ள குறுக்குப் பட்டி கள்.


விரால்கள் எல்லாம் ஊனுண்ணிகள்; மேல திக சுவாச உறுப்புக்களை உடையவை; நிலத் தின் மேலாக நகரக் கூடியவை; கோடை நெடுந் தூக்கம் நிகழ்த்தும் இயல்புடையவை; உண வாகப் பயன்படும்; எளிதில் சமிபாடு அடையும்; அதனால் நோயாளிகளுக்கு சிபார்சு செய்யப் படும்.

ஓபியோ செபாலஸ் என்பதன் கருத்து, ஓபி யோஸ் என்றால் பாம்பு, செபாலஸ் என்றால் தலை. அதனால் "பாம்புத்தலையன்கள்" என்ற பெயரே இவற்றிற்கு மிகவும் பொருத்தமானதா கும்.


### 8. கெண்டை மீன்கள்

CARPS - இலங்கையில் 13 இனங்களுண்டு. அவையாவன:- *PUNTIUS AMPHIBIUS*; *P.BIMACULATUS* - TWO SPOTTED CARPLET; *P.CHOLA* ; *P.SARANA* - OLIVE CARP; *P.DORSALIS* - கெண்டை - LONG SNOUTED CARP; *P.FILAMENTOSUS* - FILAMENTED CARP; *P.NIGROFASCIATUS* THREE BANDED CRIMSON CARPLET; *P.PLEUROTAENIA* - SIDE

(XV ஆம் பக்கம் பார்க்க)




விலாங்கு - *ANGUILLA BICOLOR BICOLOR*




பனையேறி (CLIMBINS PERCH) - *ANABAS TESTUDINEUS KAVALYA.*



விலாங்கு - *RATABOURA BICOLOR.*




கெண்டை(CARP) - *PUNTIUS NIGROFASCIATUS.*




விலாங்கு(EEL) - *BRACHYSOMOPHIS CIRRHOCHILUS.*




வாளை மீன் - *WALLAGONIA ATTU.*



கெண்டை (CARP) - *PUNTIUS PLEUROTAENIA.*




கெண்டை - *PUNTIUS MELANAMPYX.*




கொறுவை - GREEN SNAKE HEAD - *OPHICEPHALUS PUNCTATUS.*




ஜெனிற்றுமீன் (SPOTTED CAT FISH) *CLARIAS TEYSMANNI BRACHYSOMA.*



கெளிறு (STINGING CAT FISH) - *HETEROPNEUSTES FOSSILIS.*



இரு விரால்-GIANT SNAKE HEAD - *OPHICEPHALUS MARULIUS.*



கெண்டை - *PUNTIUS CUMINGI.*

# உங்கள் கவிதைகள்

உடல் உழைப்பை உரமாக்கி
உணவும் உற்பத்திகளும்
உடனுக்குடன் வழங்கும்
உன்னத தொழிலாளர் நாம்!!

-ந.சிறீதரன்-
கிளிநொச்சி

இதுவரை ஆடிவிட்டார்கள் ஆட்டம்!
இப்போது ஓடப்போகிறார்கள் ஓட்டம்!
இங்கே வரப்போவது எமது கூட்டம்!
இனி நமக்கெல்லாம் கொண்டாட்டம்!

-இ.விஜயகுமன்-
அல்வையூர்.



மண்புரட்டி ஏற்றங் கண்ட - நம்
பொன்னிலம் வாசமிழப்பதா?
வீரம் உரமேறிய கரங்கள்
சாரமிழந்து போவதா?
தடுக்கும் தடையகற்றி - பலன்
கொடுக்கும் மண்ணைக் காக்க
மேதின இலக்குகளுடன்
இணைந்து உறுதி பூணுவோம்!

- றொட்றிக் இனுவை-

ஒரு போராளியின் குருதியால்...
தேசம் உருவாக்கப்படுகின்றது!
ஒரு கவிஞனின் வரிகளால்...
தேசம் உணர்வூட்டப்படுகின்றது!
ஓர் உழவனின் வியர்வையால்....
உலகமே உயிரூட்டப்படுகின்றது!

-ப.பிறேமலதா-

உடலில் பலமில்லையா.....?
யார் சொன்னது...
உள்ளத்தில்
உறுதியும் பலமுமிருக்கும் வரை
நிமிர்த்துவோம்
எம் தேசியக் கொடியை....
ஆம்!
நாம் தொழிலாளர்கள்....!

-கே.கே.அன்ரன்-
மீசாலை

ஊருக்குச் சீரைத்தாரும்
ஏரைப்பிடித் துழுது
நீரைப்பாய்சினால்,
பயிர்கள் செழித்துவளரும்!
உலகோர்க்கும்
சோறு தரும்!
விவசாயப் புரட்சியால் - நீ
உயர்வாய்...!
யாவருமுனைத்துதிப்பர்!

-மாருதி-

குருதியை வியர்வையாக்கி
குவலய உயர்வுக்காக
உழைப்பவரின் உன்னத நாளே வருக!
உலகத்தின் எல்லை வரை - எம்
உரிமையின் மகிமை சொல்வோம்
உழைக்கும் உன்னதரே எழுக!

-ஜே.யூட்றஜிதா-
யாழ்.பல்கலைக்கழகம்
(நுண்கலைப்பீடம்)

மே 1
மேதாவிகளுக்குப் பேச்சுமேடை.
மே 1
பார்வையாளர்க்கு பரபரப்பு.
மே 1
அரசியலுக்குப் பிரச்சாரம்.
மே 1
அலுவலகங்களுக்கு விடுமுறை.
மே 1
ஊர்வலங்களுக்கு எழுச்சி.
மே 1
தொழிலாளர்களுக்கு......?

-ஆ.ஜென்சன் றொனால்ட்-
ஈச்சமோட்டை

கொடிய
முதலாளித்துவ முதலைகளை
முடமாக்க வந்த
கொடியிது!
இனவாதப் பேய்களுக்கு
இடித்துரைக்கும்
இடியிது!
கொடியோரின்
கொடியல்ல – இது
விடிவுக்கு வித்தானோர்
வீரக் கொடி!
அடிமடியில் கை போடும்
ஆதிக்கப் பேய்க்கு
இடியாயிடிக்கும்
பாட்டாளியின்
கொடி!

-பண்ணாகநாரதன்-

அந்நியப் பொருள்களுக்கு
அடிமையாகி விட்டோம்
தலையில் 'சன்சில்க் ஷம்போ'
வயிற்றில் 'பட்டர்பாண்'
காலில் 'பாட்டா சிலிப்பர்..'
சுதேசப் பொருள்கள்
சந்தைக்கு வரட்டும்!

-லோ.கமலவதனி-
ஓட்டுமடம்

உழுது பயிர் செய்வோர்
உழைத்து உடல் வளர்ப்போர் – இதை
உணர்ந்து உயிர் வாழ்வோம் – தடை
உடைத்து வளம் சேர்ப்போம்!

-மௌனிகன்-

# மௌனமொழி

பிறப்பும் இறப்பும்
ஏன் வாழ்வும் கூட-
எளிமையானதாய், சேவலமானதாய்
இருந்து மனுமகன்
பூஜிக்கப்படுகிறாரே!
தனித்துவமான தேசியம் உள்ள நீ
உரிமைகளுக்காக குரல் கொடுக்க
ஏன் தயங்க வேண்டும்
உழைப்பவனே உனக்கென்ற
இப்புனித நாளில்?

-ரூபன்-
இருபாலை

உழைக்கும் கரமே!
பூமியைப் புரட்டும்
பூகம்ப சக்தி
உன்னிடந்தான்
புதைந்து கிடக்கின்றது.
எழுந்து நீயும் இணைந்துவிட்டால்
உன்னால் கூட
பூமியைப் புதிதாய்(ப்)
பூப்பிக்க முடியும்!

-தமிழ்த்தாடி-
ஈச்சமோட்டை

புழுதியிலே புதைகின்ற தமிழ்த் தொழிலாளரே...!
இதற்கு மேல் என்ன எழுதுவது – உங்கள்
சோகத்தைச் சொல்ல சொற்களுக்கு வலிமையில்லை.
மார்க்ஸின் கட்டுரைகளும், லெனினின் சிந்தனைகளும்–
உங்கள் நிலைகண்டு மௌனமான போது கூட
கங்குல் மறையுமென்று காத்திருந்தீரே – உங்கள்
கனவுகள் நனவாகும் காலம் வந்துவிட்டது தோழரே.!
எல்லோரும் சேர்ந்து இனிதாய் பூபாளம் இசைத்திடுங்கள்!!

-சி.சிவகௌரி-
மட்டுவில்-வடக்கு.

ஒன்றுபட்டு
ஏர் பிடித்து
பாரினிலே
பஞ்சம் தீர்ப்போம்
போர் பிடித்து
வானத்தையே
தாமதாக்குவோம்

முல்லையூரான்-

ஏருடன் போரிடும்
பெண்ணே!
பதியினின்....
கரங்களில் பகிரெடு
பாரினில்....
பசுமையின் வேரிடு
பாரதி... கவிதையில்...
புதுமையின் கோடிடு!!!

-க.நாகேஸ்வரா-

உழைக்கும் கரங்களிங்கு உய்த்திட முயல்கையிலே
உழைக்க உதவுமாந்போல் உபத்திரவம் பண்ணிவிட்டுப்
பிழைக்க வழிதேடுவோர் பின்னாலே தொடர்கிறார்
சளைக்கா துழைத்திடு மேதினத்திற் கானவனே.

-வி.பராபரன்-
நீர்வையூர்

அடக்குமுறை ஒடுக்கப்பட்டு
ஓநாய்கள் விரட்டப்பட்டு
உன் நிலம் மீட்கப்பட்டது.
அரிவாளை எடு
பசுமைப் புரட்சியும்
கைத்தொழிற் புரட்சியுமாய்
கைகள் சிவக்கட்டும்!

-லோ.யாழினி-
வண்ணை

உழவுத் தொழிலாளர்கள்
உடலை வருத்தி
உணவுற்பத்தியை
உயர்த்துவதால்தான்
உலகத் தொழிலாளர்கள்
ஒன்றுபட்டு
உரிமைக் கொடியை
உயர்த்துமுடிகிறது.

-வி.பி.ஆர்.எழில்மதி-
வல்லிபுரக்குறிச்சி

வாழ்வில்
சுமைகளை சுகங்களாக்கி
சுகங்களை
மனித உரமாக்கி...ஓர்
இனத்தின் விடுதலையைக்
கனவாகக் கொண்டு
தேசியத்தை நிமிர்த்தும்
இவர்கள்...
மாண்புமிகு மனிதர்கள்...
மானம் கொண்ட மறவர்கள்!

-ஏ.மருமம் கேதீஸ்-
பருத்தித்துறை

## மௌனமொழி ~ 85



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவா கச்சேரியடியைச் சேர்ந்த ர்.அரிக்குட்டி.

தொழிலாளர், விவசாயிகள்
தொழில் நிலைமை மேம்படவே
தோன்றியது மே தின
போராட்டம் அன்று!
தொல்லைகள் தொடர்ந்து
நீடிப்பதாலே
எல்லையில் போராட்டம்
தொடர்கிறது இன்று!

-சா.அம்பிகை-
மீசாலை

மேதினக் கூச்சலுக்காக
முதலாளியால் உருவாக்கிய
அலங்கார ஊர்தி
அரசியல்வாதிகளால் இழுத்து
வீதி வலம் வருகின்றது.

-செ.பிரியதர்சினி-
அச்சுவேலி

மதம்
சுவர்க்கச் சிந்தனையை வளர்த்து
மனித வர்க்கத்தை ஆயுள் கைதிகளாக்கியது.
மார்க்ஸ்(Marx)
வர்க்கச் சிந்தனையை வளர்த்து
உழைக்கும் வர்க்கத்தின் விலங்குடைத்தார்.

- சுதா-
யாழ்.பல்கலைக்கழகம்

ஆண்ட தமிழினம்
அடங்கிக்கிடப்பது
நியாயமல்ல;
புரட்டு தமிழா ஏர்கொண்டு
நிலத்தைப் புரட்டு
வீரம் தோய்ந்த வரலாறு
வெளிப்படும் கண்முன்னே!

-ஆ.ப.நிஷங்கன்-
சுண்டுக்குளி

அழுதிடும் எம் வாழ்வினை
அமுதமாய் மாற்றிடுவோம்
பழுதிலா நம் வாழ்வினை
பக்குவமாய் காத்திடுவோம்
பயிர் செய்து மண்ணினை
பசுமையாய் ஆக்கிடுவோம்.

-மு.வே.அன்பழகன்-
மட்டுவில் தெற்கு.

அயராது உழைப்பு
அறியாது உலகம் – உயராது
பாட்டாளி வர்க்கம்....!

-கலைநேசன்சிவம்-

இவர்கள்
உப்பளத்தை உழுவது
பயிரிடுவதற்கல்ல
உப்புக் காற்றிலே கலந்த
உடன் பிறப்புக்களின்
உதிரம் தோய்ந்த
வீர வரலாற்றைப்
புரட்டிப் பார்ப்பதற்கு!

-பிரசன்னா-
கந்தர்மடம்

இன்ரநெற் வந்தது-
ஈ-மெயில் வந்தது-
பூமிசுருங்கிக் "கிராமம்"
என்றானது.
ஆனால் எங்கள் வாழ்வு
மட்டும் மாறவேயில்லை.
அரிவாளும் சுத்தியலும்
கலப்பையும்
போராட்டமும் கலந்து
எங்கள் வாழ்க்கைநகர்ந்து
செல்கிறது.
எங்கள் வாழ்வில் மட்டும்
வசந்தம் வீசமறுக்கிறது.
வசந்தம் வராவிட்டாலும்
வன்முறையில்லாமல்
எங்கள் வாழ்க்கை நகருமா?
தேசம் செழிக்குமா?

-இளம்பருதி-

இரவு,பகல் கோடை,மாரி – இது
இயற்கையின் மாற்றம்.
இன்பம், துன்பம் உயர்வு, தாழ்வு – இது
வாழ்க்கையின் மாற்றம்
ஓவியம் குறிப்பதோ? ......

- க.கஜேந்திரன் -
உரும்பையூர்.

# இனிய யூலியனே....


**ச.குமுதினி**
சங்கத்தானை

(24) தொலைநோக்கியூடாக அவதானித்துக் கொண்டிருந்த சிசிலியா திகைப்பினால் சிலையாகி நின்றுவிட்டாள். அவன் யூலியனே தான்! குழந்தைத்தனமான அந்தப் பிஞ்சுமுகமும் தள்ளாடும் அந்த நடையும் சந்தேகமில்லாமல் அவனுடையவையே தான்.....

ஒருகணம், சிறுவர் முகாமில் அவனுடைய அசாதாரண இயல்பு பற்றித் தான் அறிந்து கொண்ட நிகழ்வு அவள் நினைவில் தோன்றி மறைந்தது. பூவுலகத்து மனிதர்களையும் நாசகாரிகள் தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து விட்டார்களோ என நிக்கலஸ் சொன்னது ஞாபகம் வந்தது.

மீண்டும் தொலைநோக்கியூடாகப் பார்த்தபோது யூலியன் தென் மேற்குத் திசையாய் அமைந்திருந்த நாசகாரிகளின் ஊர்தியைக் கட்டுப்படுத்தும் பிரதான கோபுரங்களை நோக்கி நடப்பது தெரிந்தது.

'எப்படி இது சாத்தியம்? 400 மீற்றர் தொலைவினுள் ஒரு மனிதனின் எண்ண அலையை உணர்ந்து தம் கொல்லும் நீலக் கதிர்களால் மனிதர்களை அழிக்கின்ற நாசகாரிகள் ஏன் இப்போது மௌனமாய் இருக்கிறார்கள்? அப்படியானால் யூலியன் அவர்களைச் சார்ந்தவனா? இல்லாவிட்டால்... இல்லாவிட்டால் இது எப்படிச் சாத்தியம்?'



சிசிலியாவுள் வேதனை கிளர்ந்தது. ஆக யூலியன் எப்படி இருந்துவிடக்கூடாது என்று அவள் நினைத்தாளோ அதற்கு மாறாக அதே மாயமான ஆபத்து வளையத்துள் அவன் சிக்கிக் கொண்டு விட்டானா...?

எண்ணத்தின் கனத்தைத் தாங்க முடியாதவளாய் நிலத்தில் மடிந்து உட்கார்ந்தாள் சிசிலியா. அவளுக்குப் பிடித்தமான வெண்ணிற மலர்க்கொத்துடன் விடிகாலையில் புன்னகையுடன் வணக்கம் சொல்கின்ற யூலியன்....... தன்னை ஆட்கொள்ளும் மாயசக்தியின் செயலையும் தன் செயலையும் வேறுபடுத்தி உணர இயலாத யூலியன்..... எத்துணை பரிதாபத்திற்குரிய சின்னஞ் சிறுவன்!

'அடுத்து என்ன செய்வது? நிக்கலசிடம் அறிவித்தால் தலைமையகத்துக்கு அவன் தகவல் சொல்வான். அவர்களின் நடவடிக்கைகள் கூட யூலியனை அவன் பிஞ்சுமனம் சிதைவுறாதவாறு அவனுக்கு ஆபத்து ஏதேனும் ஏற்படாதவாறு காப்பாற்றும் என்பது என்ன நிச்சயம்? அவனை அவனாகப் புரிந்து கொள்ள அவனை அறியாத மற்றவர்களால் எப்படி இயலும்? அது இயலாதவரை அவனை முழுமையாய் இந்த மாய வளையத்திலிருந்து மீட்பதென்பது எப்படிச் சாத்தியமாகப்போகிறது?

சிசிலியா மீண்டும் தொலைவை உற்றுக் கவனிக்கத் தொடங்கினாள். இப்போது யூலியன் பார்வையுள் புலப்படவில்லை.

'எங்கே போயிருப்பான்?'

'எப்படி மறைந்திருப்பான்?'

விடையில்லாக் கேள்விகளுடன் கண்கள் களைத்துப் போகும்வரை தொலைவை நோக்கிக் கொண்டிருந்தாள் சிசிலியா. சில மணித்தியாலங்கள் சென்று மறைந்திருக்கலாம்.

யூலியனின் எந்தச் சின்ன அசைவும் பார்வையுள் தென்படவில்லை.

இவான் நின்ற இடம் நோக்கி நடந்தாள் சிசிலியா. அவள் தனக்குரிய கண்காணிக்கும் இடத்தை விட்டு வந்தது அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

"என்ன சிசிலியா? ஏன் பதற்றமாய்த் தென்படுகிறாய்?" சிசிலியா ஊர்தி இயங்கும் ஓசை கேட்டது முதல் நிகழ்ந்தது எல்லாவற்றையும் அவனுக்குச் சொன்னாள்.

"நிச்சயமாய் எதுவும் உன் பிரமையில்லையே?" இவானின் குரலில் நம்பாத்தன்மை தென்பட்டது.

"நிச்சயமாய் இல்லை இவான்!"

"அப்படியானால் நானும் அவனைப் பார்க்கமுடியுமா?"

"இங்கிருந்து பார்க்க முடியாது. எனது கண்காணிப்புக்குரிய பகுதியிலேயே அவனைப் பார்ப்பது சாத்தியமாகும். அதுவும் சில வேளைகளில் மட்டுமே"

"அவன் உன்பார்வைக்குத் தென்படாமல் எங்கே மறைந்திருக்கக் கூடும் என நினைக்கிறாய் சிசிலியா?"

"நிச்சயமாய் வேறு எங்கேனும் சென்றிருக்க முடியாது. அலகு உள்ள கோபுரங்களில் ஏதேனுமொன்றினுள் அவன் புகுந்திருக்கக் கூடும்."

"இப்போது எதுவும் செய்வதற்கில்லை சிசிலியா. காலையில் நிக்கலஸ் வந்ததும் மேற்கொண்டு ஆலோசனைகளைச் செய்ய முடியும். அமைதியாய்க் கண்காணிப்பதைத் தவிர இப்போது எதுவும் நம்மால் செய்ய இயலாது"

"......................"

"ஏன் மௌனமாகி விட்டாய் சிசிலியா?"

"உண்மையிலேயே அவனறியாத விதத்திலேயே அவன் இவ்வாறு செயற்படுத்தப்படுகிறான் என்பதை உன்னால் உணரமுடிகிறதா இவான்?"

"ஆம்! ஆனாலும் தனிப்பட்ட அபிப்பிராயங்களும் கூட உண்மையென நிரூபிக்கப்பட்டால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்..."

"..................."

சிசிலியா மௌனமாகத் திரும்பி நடந்தாள். நெஞ்சில் வேதனை நிரம்பிக் கிடந்தது. யூலியன் பொருட்டு அவளால் என்ன செய்ய முடியும்? நினைவில் நிறைந்திருந்த வினாவுடன் விடியும்வரை அவள் அவர்களது இருப்பிடத்தைக் கண்காணித்துக்கொண்டிருந்தாள். ஆனாலும் அதன் பிறகு யூலியன் அங்கு தென்படவேயில்லை!

விடியற்பொழுதில் நிக்கலஸ் வந்து சேர்ந்திருந்தான். இவானும் சிசிலியாவும் சொன்ன விவரங்கள் எல்லாவற்றையும் கேட்ட பிறகு, சில கணங்கள் மௌனமாய்ச் சிந்தனையில் மூழ்கியிருந்தான். பிறகு ஆழ்ந்த குரலில் சொன்னான்....

"இது பற்றித் தலைமையகத்துக்கு அறிவிக்க வேண்டியது அவசியம்தான். ஆனாலும்... இந்த நிகழ்வு தலைமையகத்தினால் நிறைவேற்றுவதற்காக என உத்தேசிக்கப்பட்டிருக்கும் முயற்சியில் ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்துமா என்பது சந்தேகந்தான்..."

"என்ன முயற்சி நிக்கலஸ்..."

"எமக்கும் நாசகாரிகளுக்குமான இறுதிச் சந்திப்பு!"

"இறுதிச் சந்திப்பா? எப்போது? எப்போது அது நிகழப்போகிறது...."

"இன்றிரவு......"

நிக்கலஸின் பதிலுக்கு காற்றும் ஒருகணம் மௌனமாகிவிட்டாற் போல் தோன்றிற்று.

சிசிலியாவின் மனத்திரையில் கோபுரங்களின் இடையே தள்ளாடி நடந்து கொண்டிருக்கின்ற சின்னஞ் சிறுவனின் தளர்ந்த தோற்றம் துன்பத்துடன் எழுந்து மறைந்தது.

*    *    *

யூலியன் நடந்து கொண்டிருந்தான்: மிகப் பரந்ததாயிருந்த அந்தப் பிரதேசத்தில் இடையிடையே உயரமாய் எழுந்து நிற்கின்ற கோபுரங்களோ, அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் பரவி நிற்கின்ற விநோத உருவம் படைத்த நாசகாரிகளோ அவன் விழிகளில் விழுந்தாலும் எண்ணத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாதிருக்க அவன் தொடர்ந்து நடந்தான்.

"தென்மேற்குத் திசையில் இருக்கின்ற அந்த இரண்டு கோபுரங்களில் உயரமான கோபுரத்தினுள் தான் உனக்கான பணி காத்திருக்கிறது. யூலியன்...."

நீலஒளியின் பின்னணியில் அந்த நெடிய மனிதரின் கட்டளை அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

அவன் உயர்ந்திருந்த அந்தக் கோபுர அமைப்புள்ள கட்டடத்தினுள் சென்றான்.

"உள்ளே உள்ள அமைப்புக்களையும் அவை இருக்கின்ற இடங்களையும் தெளிவாக அவதானி யூலியன்..."

நினைவில் கேட்ட அந்தக் கட்டளை அவனுக்குச் சூழல் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்திற்று.

உள்ளே விரிந்து பரந்திருந்த எண்ணற்ற இயந்திரங்களும் அவற்றை இயக்குகின்ற அமைப்புகளும் அவை ஒவ்வொன்றினதும் அருகே அமைந்திருந்த அந்த இயந்திர அமைப்புகள் பற்றிய குறிப்புகளும் அவனை எல்லையில்லாத பிரமிப்பிலும் குழப்பத்திலும் ஆழ்த்தின.

"யூலியன்......"

"...................." அவன் பதில் சொல்லாமல் பிரமிப்பில் ஆழ்ந்து நின்றான்.

"யூலியன்..... யூலியன்..... என் அழைப்புக் கேட்கிறதா."

"....ஆ....ம்!....."

"எவற்றை அங்கே உன்னால் அவதானிக்க முடிகிறது?"

யூலியன் மெதுவாகச் சொல்லத் தொடங்கினான். மழலை மாறாத அவன் மென் குரலில் அளவிறந்த பிரமிப்பு நிறைந்திருக்க அவன் தன் கண் முன்னால்விரிந்திருந்த காட்சிகளை விவரிக்கத் தொடங்கினான். சின்னதும் பெரியதுமாய் பரந்திருந்த அவன் இதற்குமுன் எப்போதும் கண்டிராத அந்த எந்திர அமைப்புகளை தன் கண்ணில் தெரிந்தபடி அப்படியே விவரித்தான் யூலியன்.

"மிகச் சரியாக எல்லாவற்றையும் சொல்கிறாய் யூலியன்... நீ கெட்டிக்காரப் பையன். எவ்வளவு தெளிவாக விவரிக்கிறாய்! மோறா மொழியில் அமைந்த குறிப்புகள் இருப்பதாய் சொன்னாயே... அவற்றை உன்னால் வாசிக்க இயலுமா யூலியன்....."

"நிச்சயமாய் என்னால் வாசிக்க இயலும்..." பாராட்டுகளைச் செவிமடுக்கும் சிறுவனுக்கேயுரிய உற்சாகத்துடன் அவன் அக்குறிப்புகளை வாசித்துச் சொல்லத் தொடங்கினான்.

இடையிடையே அவன் வாசித்த செய்திகளை மீண்டும் வாசிக்குமாறு கட்டளையை உணர்ந்து மீண்டும் வாசித்தான் யூலியன்.

"மிகச் சரியாக எல்லாவற்றையும் வாசித்தான் யூலியன். உன்னால் நாம் நம்புவது போன்ற செயல்களைச் செய்ய முடியும் என்று நம்புகிறேன்......."

"........................"

"நீ இப்போது மிகவும் களைப்பாக உணருகிறாயா?"

"ஆம்............."

"உன் சட்டைப்பையுள் உள்ள சிறு குளிகைகளில் சிலவற்றை மென்றால் உன் களைப்பு நீங்கிவிடும். வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?"

"ஆம்........." தயக்கத்துடன் நிறுத்தினான் யூலியன்.

"எதுவானாலும் தயங்காமல் சொல் யூலியன்...."

"எனக்கு.... எனக்கு அச்சமாயிருக்கிறது இந்தப் பிரமாண்டமான கோபுரங்கள், இயந்திரங்கள், இவை எல்லாவற்றையும் விட அங்குமிங்குமாய் நடமாடிக் கொண்டிருக்கின்ற விநோதமான அந்த உருவங்கள் யாவும் எனக்கு அச்சத்தைத் தருகின்றன......." அவன் மெல்லிய நலிந்த குரலில் சொன்னான்.

"கோபுரங்களோ எந்திர அமைப்புக்களோ உனக்கு எந்தத் தீங்கையும் விளைவிக்கப்போவதில்லை..... அஞ்சாதே யூலியன்...."

"அப்படியானால் அந்த விநோத உருவங்கள்......"

"நிச்சயமாய் அவைகள் ஒருபோதும் உனக்கு எந்தத் தீங்கையும் விளைக்கப்போவதில்லை. உன் அச்சம் தேவையற்றது. யூலியன் இதை நீ முழுமையாய் நம்பலாம் பையனே...."

அவன் நினைவில் தோன்றி ஒலிக்கும் அந்தக் குரல் மிக ஆணித்தரமாய் அதைச் சொன்னது.

(தொடரும்)

## விஞ்ஞான ரீதியிலான கற்பனைத் தொடர்

---

## பாருக்கும் புரியாது

("எங்கள் வீட்டில் எல்ல நாளும் கார்த்திகை" என்ற சினிமாப் பாடலின் மெட்டோடு ஒத்திசையும் ஒரு கவிதை இது)

*எடுப்பு*

எங்கள் நாட்டில் எல்லா நாளும் போர்த்திரை
எங்கள் மக்கள் இங்கும் அங்கும் யாத்திரை
ஒரு தீர்வு காணும் நோக்கமோ
இங்கு யாருக்கும் கிடையாது
இது யாருக்கும் புரியாது.......(எங்)

*தொடுப்பு*

ஆளுங்கட்சி எதிர்க்கட்சி
நாளுக்கொவ்வொரு சித்தாந்தம்
அன்று தொட்டு இன்று வரை
அதன் அடிப்படை ஒன்றே இனவாதம்
சோகங்களை சுமப்பதுவே
தொடர் கதை ஆகிப்போனது
சொந்தங்களை இழப்பதுவே
வாழ்வின் நியதிகளானது
ஒரு தீர்வு காணும் நோக்கமோ
இங்கு யாருக்கும் கிடையாது
இது யாருக்கும் புரியாது........(எங்)

*முடிப்பு*

மொட்டைத் தலைகள் வைத்ததுவே
சட்டம் ஆகிப் போனது
ஆட்சி பீடம் அன்றும் இன்றும்
அதனின் படியே ஆடுது
அகதிகளாய் அலைவதுவே
அனுதின வேலை ஆச்சுது
உதவிகளை எதிர்பார்த்தே
வாழ்க்கை உருண்டு போகுது
ஒரு தீர்வு காணும் நோக்கமோ
இங்கு யாருக்கும் கிடையாது
இது யாருக்கும் புரியாது........(எங்)

*- யாழ். வதிரிவாசன் -*

---

## அவள் வருவாளா?

மனதை மெருகூட்டி
மகிழ்ச்சி தனைக் கூட்ட - இந்த
உலகை உலா வந்து - எம்
உறவைப் பலமாக்க
இன்பத் தமிழாலே
இங்கு வருவாளா - என்
துன்பம் தனை நீக்கி
செய்தி தருவாளா?

வாடிக்கிடக்கும் மனம்
துள்ளித் துளிர்த்திடவே - எனை
தேடித் துணைக்கு வந்து
தூண்டில் இடுவாளா
சோடிக் குயில்களென
சிறகை விரித்து வந்து - என்னோடு
கூடிக்குலவி நின்று
கானம் தருவாளா?

*- எம். சுயர்சன்*
*கோண்டாவில்.*

| | | | |
|---|---|---|---|
| | சூ செவ. வியா. சன வெ | புத. சந். | |
| | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | |
| | | | |

**அக்கினிநாள் தொடக்கம் 07.05.2000. அக்கினிநாள் முடிவு 28.05.2000. (சுபகாரியங்களைத் தவிர்க்கவும்)**

*மாற்றம்:- 6.5.2000 இல் இடபம் இராசியில் சந்திரன் நிற்கும் (ரோகிணி நட்சத்திரம்) 6.5.2000 இடபம் இராசிக்கு புதன் மாறும் (பி.பகல்)*

*பக்கத்து நாடு நம்மை நாடும். உலகநாடுகள் (ஐ.நா) மூலம் சில புதிய அழுத்தங்களைக் கொடுக்கும். அரசியலில் புதிய திருப்பமொன்று ஏற்படும் அறிகுறிதென்படும். யுத்தம் திசை திரும்பும். மக்களின் இடப் பெயர்வு. வேதனை அகில உலமெங்கும் கேட்கும் காலமாகும். மாணவர்கள், தொழிலாளர்கள் புதிய கருத்துக்களை வைத்து போராடுவார்கள். இந்தியா வடக்கிற்கு சிவப்புக் கொடியும் தெற்கிற்கு பச்சைக் கொடியும் காட்டும். மேற்கு நாடுகள் கிழக்கு நாடுகளில் புதிய வாய்ப்பை ஏற்படுத்தும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

# இந்த வார இராசி பலன்

## 06-05-2000 இலிருந்து 12-05-2000 வரை

# ஜோதிட சஞ்சீவி

## மேடம்

காரணம் இல்லாமல் எந்தக்காரியங்களும் நடக்காது. உங்கள் தொழில் அல்லது கல்வி ஸ்தானத்தில் பலத்த போட்டிகளுக்கு மத்தியில் சில அனுகூலங்களைப் பெறுவீர்கள். தீயவழியில் பணம் மாயமாகும். மதுவிலா அல்லது எதிர்ப்பாலாரலா என்பது உங்களுக்குத்தான் தெரியும். பொருள் தேடமுனைந்து வெற்றி பெறுவீர்கள். செலவுக்கும் பஞ்சமில்லைத்தான். காணி அல்லது வீடு ஒன்று வாங்க மனம் வட்டமிடும். திட்டத்தை விரைவுபடுத்துங்கள். நெஞ்சுப்படபடப்பு, கைகால் வலி, வயிற்றுக்குழப்பம், காய்ச்சல் என்பன வரலாம். சகோதரர், மைத்துனர் என்பவர்களுடன் பேச்சுக்கலகம் ஏற்பட்டு மனம் சஞ்சலப்படும். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். போக்குவரத்துத்துறை, சீவித்துறை, ஹோட்டல்துறை, விவசாயம், பண்ணைத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள், புதன், வெள்ளி பிற்பகல்*

## இடபம்

எப்பொழுதும் குறைகளைச் சொல்பவர்கள் குறைகளைச் சொல்லியபடிதான் இருப்பார்கள். இதைக் கண்டு, அறிந்து வேதனைப்படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் நடக்கும். இடம்பீகச் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். எதிர்ப்புக்கள் வந்தாலும் எதற்கும் பின்வாங்க மனம் வராது. குடும்பத்தில் சுகவீனங்களால் மருந்துச் செலவுகள் அதிகரிப்பதுடன் அடிக்கடி அலைச்சல்கள் ஏற்பட்டபடி இருக்கும். கள்ளச் சிந்தனைகள் வெள்ளமென அலைபாயும். பொருள் தேட எதையும் செய்யும் எண்ணம் ஏற்பட இடமுண்டு. அடிக்கடி களைப்பு, நெஞ்சுநோ, வாய்த்தொல்லை என்பன இருக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தூரதேசப் போவதை நிறுத்துங்கள் அல்லது பிடிபாடுகள் கொடுக்கும். வாகனச் செலவு அல்லது திடீரென இழக்கும் நிலை சிலருக்கு வரலாம். கவனமாக இருக்கவும். மருந்துத்துறை, சீவித்துறை, விவசாயத்துறை, நீதித்துறை, எண்ணெய்த்துறை, போன்ற தொழில் தொடர்பானவர்கள் அதிக இலாபங்களும்-மாற்றங்களும் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள் புதன்.*

## மிதுனம்

கல்வியில் அல்லது தொழிலில் எதையாவது சாதித்துப் புகழ் அடைய வேண்டும் எனச் சிந்திக்கிறீர்களா? "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" நல்லதைச் செய்வதற்காகப் போராடி தோல்வி அடைந்தாலும் அதுவும் ஒருவகை நன்மையே ஆகும். ஆனால் தொழில் ஸ்தானத்தில் ... ஏன் சஞ்சலப்படுகிறீர்கள். எதிர்ப்பாலருடன் ஒத்துப்போவீர்கள் ஆனால் தவறான எண்ணத்தில் மனம் அடிக்கடி வட்டமிடும். வீட்டில் சிறப்பு, வாகனத்தில் சுகம் அனுபவிப்பவராக இருப்பீர்கள். தாய்வழியில் எதிர்ப்புக்கள் இருக்கும். சகோதரங்கள் புறுபுறுப்பார்கள். இடாம்பீகப் பொருள்களுக்கு அதிகசெலவுகள் செய்வீர்கள். மனச்சஞ்சலம் உங்களுக்கு மட்டுமா? இந்த நாட்டிலுள்ளவர்களையே சூழ்ந்துள்ளது என்பதை எண்ணி ஆறுதலடையுங்கள். நெஞ்சு வருத்தங்கள், வாய்வுவருத்தம் என்பன வருத்தலாம். ஹோட்டல்துறை, சாய்ப்புச் சாமான்கள் விற்பனை, மருந்துத்துறை, விவசாயம் அல்லது தோட்டத்துறை போன்றவற்றில் ஈடுபடுபவர்கள் ஆதாயம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள், புதன்.*

## கடகம்

விதி எவ்வளவு பலமானது. நாடே போர்க்கோலம். அழிவே முன்னிக்கின்றது. நல்லவர்கள், தெய்வ பக்தியானவர்கள், குழந்தைகள், பெண்கள், வலிமை குன்றியவர்களின் அவலக்குரல் என்பதைச் சிந்திக்கும் பொழுது உங்களுக்கு வேதனை நிச்சயம் வரும். உங்கள் தொழில் ஸ்தானத்தில் நலிந்தவர்களுக்காகப்போராடி உதவி செய்யும் நீங்கள் அடைய முடியாத ஒன்றிற்காக ஏங்கி இருப்பது நல்லதல்ல. பொருள் வரவு இருக்கும். புதிய பொருள், புதியவர்கள் வருகை, நல்ல நண்பர்களின் நட்பு நன்மை தரும். பொதுத்தொண்டு செய்து உங்கள் காசைச் செலவு செய்வீர்கள். பொருள் சேரும். சகோதரங்களின் உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகளின் உதவிகள் கிடைக்கும். சிலருக்கு அரசியல் விமர்சனம் செய்வதனால் அரச தண்டனைக்கு கூட்ப்பெறச்சந்தர்ப்பம் ஏற்படும். நெஞ்சுநோ, காய்ச்சல், உஷ்ணபீடைகள் என்பன வரலாம். சட்டத்துறை, குருத்துறை, வியாபாரம், கோவில்வேலைகள் போன்ற தொழிலைச் செய்பவர்கள் பலவித முன்னேற்றமும் மாற்றங்களும் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், புதன்.*

# மகாதேவா ஜோதிடம்

## சிங்கம்

ஒருவரின் முன்னேற்றத்தில் சிலர் பெருமைப்பட்டு தேவையற்ற வதந்திகளைப் பரப்ப எத்தனிப்பார்கள். அது பொய்யான வதந்தி எனப் பின்னர் எல்லோருக்கும் தெரியவரும். இந்த அனுபவம் உங்களுக்கு வரும் காலமாகும். அதற்காகக் கவலைப்படாது உங்கள் முன்னேற்றத்தில் கண்ணாக இருங்கள். வெற்றி கிடைக்கும். புதிய நட்பு, அந்நியர் உதவிகள் தேடி வரும். தொழில் ஸ்தானத்தில் கலகலப்பாக இருப்பீர்கள். பொருள்நிலையில்மாற்றங்கள் வரும். சகோதரங்களுக்கு நன்மைகள், மாற்றங்கள் ஏற்படும். புதிய வீட்டுச் செலவுகளால்குழப்பம் அடையலாம். தெய்வவழிபாடு, தாய்வழியினருடன் கருத்து வேற்றுமை, புத்திரரின் நன்மைகள் என்பன நடக்கும். வாய்வு, உஷ்ணபீடைகள், உாகக்காயம் என்பன வரலாம். மருந்துத்துறை, ஆசிரியத்துறை, தொழிநுட்பம் போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன்.*

## கன்னி

ஒன்றைப் பெறுவதற்காக இன்னொன்றை இழக்கவோ பொருளைச் செலவழிக்கவோ வேண்டி வர இடமுண்டு. இடமாற்றங்களைத் தொழில் ஸ்தானத்தில் செய்ய முனையாதீர்கள். காசு, பொருள் தேடிவரும். அயலவர்களுடன் கவனமாக இருக்கவும். தூரதேசத்திலிருந்து நற்செய்திகள் வரலாம். குடும்பத்தில் கலகலப்பும், செலவுகளும் மாறிமாறி வரும். அட்டமத்துச்சனி தன்னி வீழ்த்தலாம். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் வர இடமுண்டு. உஷ்ணபீடைகள், வாய்வுத்தொல்லைகள், கைகால்விறைப்பு என்பன வரலாம். கொடுத்தது வராத நிலை அதனால் கோபநிலை ஏற்படும். கலைத்துறை, செய்தித்துறை, குருத்துறை சம்பந்த மானவர்களுக்கு நன்மைகள் அதிகரித்தபடி இருக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன். வெள்ளி பிற்பகல்.*

## துலாம்

தொழில் ஸ்தானத்தில் நிர்வாகத் திறமையற்றவர்கள் இருப்பதனால் நல்லவர்கள் பலர் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிர்வாகத் திறமையற்ற நிர்வாகப்பதவியாளர்களைச் சிலர் பலவீனப்படுத்தி தமது காரியங்களைச் சாதித்துக் கொள்வதை அறிந்து மனம் வேதனைப்படுவீர்கள். உண்மைக்கும், நேர்மைக்கும் உறுதியுடன் தொழில் ஸ்தானத்தில் ஆதரவு, அன்பாக இருப்பீர்கள். அரச உதவி கிடைக்கும். யாத்திரை போகத்திட்டமுண்டு. ஆனால் அது நிறைவேறாது. உறவினருடன் மனக்கருத்து கொள்கை அளவில் ஏற்பட்டு வேதனை தரும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். நாரிநோ, சூட்டுவருத்தங்கள், வயிற்று வருத்தங்கள் என்பன வருத்தலாம். குருத்துறை, இசைத்துறை, கலைத்துறை, தொழில்நுட்பத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, புதன், வெள்ளிபிற்பகல்.*

## விருச்சிகம்

தகுதிபெற்றஆணோ, பெண்ணோ பதவிக்கோ, பட்டத்திற்கோ வருவது திறமையின் செயலாகும். ஆனால் சில கையாலாகாதவர்கள் பொய்யான வதந்திகளைப் பரப்பி அவர்களை வேதனைப்படுத்தி, பாதிப்படையச் செய்வது மிகவும் வருந்தத்தக்கது என்பதை தொழில் ஸ்தானத்தில் அறிவீர்கள். பொதுச் சேவையென ஓடியாடித்திரிவீர்கள். நண்பர்கள், அன்பர்கள் உங்களுக்கு உதவிகள் செய்வார்கள். பொருள்களவு போகலாம். அரச அதிகாரிகளின் கண்டிப்புக்கள், தண்டனைகள் வரலாம். இடமாற்றம் செய்யவேண்டாம். பொருளில் நிதானமாக இருக்கவும். உஷ்ணபீடைகள், வாய்வு, கைகால் பிடிப்பு என்பன சர்வசாதாரணம். மருந்துத்துறை, விவசாயத்துறை, குருத்துறை, தொழில்நுட்பத்துறை போன்றவற்றில் ஈடுபாடுடையவர்களுக்கு மாற்றங்கள், இலாபங்கள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள் :-சனி, புதன்.*

## தனுசு

போலியாக நடந்து பெரியவர்களைப் பகைப்பதை விரும்பாமல் சிலரை ஏசிவிடுவீர்கள். அதனால் உங்களுக்கு வரவிருக்கும் நன்மைகளில் பாதிப்பு வரலாம். எனவே தொழில் ஸ்தானத்தில் அவதானமாக இருக்கவும். மேலதிகாரிகள் உதவுவார்கள். பல புதிய கருத்துக்களை, திட்டங்களைத் துணிவுடன் வெளியிடுவீர்கள். மனதில் வைராக்கிய எண்ணங்கள் தோன்றி வஞ்சிக்க மனம் ஏவும். குடும்பத்தினருக்காக அங்கும் இங்கும் ஓடியாடித் திரிவீர்கள். காசு வந்தாலும் அதற்கு மேல் செலவுகள் காத்திருக்கும். வயிற்றுப் பொருமல், நாரிநோ, சூட்டுவருத்தம் என்பன இருக்கும். இசைத்துறை, போக்குவரத்துத்துறை, விவசாயத்துறை, குருத்துறை போன்றவற்றில் தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:-சனி, திங்கள், புதன்.*

## மகரம்

நீங்கள் தவறான வதந்திகளைப் பரப்புவதாக எண்ணிச் சில பெரியவர்கள் கண்டிக்கச் செய்வார்கள். நீங்கள் செய்வது, சொல்வதைச் சிலர் மேலிடத்திற்கு அல்லது தொழிலிடத்திற்கு சொல்லுவார்கள். எனவே நிதானமாக இருக்கவும். அமைதியாக இருக்கவும். திசைமாறிச் செல்ல மனம் ஏவும் காலமாகும். திடீர் கோபம் வரும். மேலதிகாரிகளுடன் பகைப்பீர்கள். இடமாற்றங்களால் பிடிபாடுகள் வரலாம். திடீர் நண்பர்களை நம்பாதீர்கள். கைகால் தாக்கம், மனக்குழப்பம், பயம், நாரிநோ என்பன வரலாம். அரசியல் பேசாதீர்கள். அதனால் அவதிகள் வரலாம். ஆலயம் சென்று வழிபாடுகளைச் செய்து வாருங்கள். மனம் அமைதியாகும். போக்குவரத்துத் துறை, செய்தித்துறை, கோவில் துறை, வியாபாரத்துறை போன்றவர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:-சனி, திங்கள்.*

## கும்பம்

உங்கள் வருங்காலத்தைப்பற்றி அறியும் ஆவல் உங்களை நாடிவரக் காரணம் என்ன? புதிய எதிர்பார்ப்புக்களுக்காக காத்திருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் நல்லவர்கள் மேலதிகாரிகளின் நட்புக்கள், உதவிகள் கிடைக்கும். புதியன வரவும் பழையன கழிதலும் நடக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானமாக இருங்கள். தூரதேசச் செய்திகள் நன்மைதரும். இடமாற்றங்கள் செய்ய வேண்டாம். இருப்பதைக் கொண்டு திருப்திப்படுவதில் ஒரு சுகம் கிடைக்கும். சளி, நாரிநோ, நரம்புப்பிடிப்பு, பயங்கரக்கனவுகள் என்பன வர இடமுண்டு. கணக்குத் துறை, குருத்துறை, வியாபாரத்துறை, விவசாயத்துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:-சனி, திங்கள்*

## மீனம்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடலாமா எனச் சிந்திக்கிறீர்களா? காலம் கடந்து விட்டது. எல்லோரும் வெளிநாட்டில் பட்டது போதும் எனத் திரும்பி வரஏங்கியிருக்கும் பொழுது உங்களுக்கு வந்த ஞானம் விசித்திரமானது. தூரதேசத்துக்குப்போகும் எண்ணத்தைச் சற்றுத் தள்ளிப் போடுங்கள். தொழில் ஸ்தானத்தில் 03.08.2000 வரையும் கண்டபடி மாற்றங்கள் செய்யாது இருக்கவும். அல்லது இழப்புக்களைச் சந்திப்பீர்கள். மேற்குத்திசையிலிருந்து செய்திகள் வரும். கிருமித்தாக்கம், வாய்வுத்தொல்லை, சளி, காய்ச்சல் என்பன வரலாம். அயலவர்களுடன் கொஞ்சம் அனுசரித்துப்போங்கள். அல்லது வீண்பழி கேட்க நேரிடும். போக்குவரத்துத்துறை, கடல்துறை, வியாபாரம், விவசாயத்துறை சம்பந்தப்பட்டவர்கள் நற்பலன்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:-சனி, திங்கள்.*

---

# நீங்கள் உண்பது விதை உருளைக்கிழங்கா?

நீங்கள் கடைகளில் வாங்குகின்ற உருளைக்கிழங்குகள் சில வேளைகளில் விதை உருளைக் கிழங்குகளாக இருக்கலாம்! 'அதனால் என்ன? அப்படியே இருந்து விட்டுப் போகட்டும்' என நினைக்கிறீர்களா? இதுவே உங்கள் எண்ணம் எனில் உங்கள் வாழ்க்கையை அழித்துக்கொள்ள நீங்களே பிள்ளையார் சுழி இடுகின்றீர்கள் என எண்ணிக்கொள்ளுங்கள்.

முதலில் விதை உருளைக் கிழங்கு என்றால் என்ன? இது எங்கே உற்பத்தி செய்யப்படுகின்றது? இதன் பாதிப்பு என்ன? - என ஆராய்தல் எம் இலக்கை அடையத் துணை புரியும்.

விதை உருளைக்கிழங்கு, என்பது பதிய முறையில் இனவிருத்தி செய்வதற்கு என, தொற்று நீக்கப்பட்டுத்தெரிவுக்குரியதாக தருவிக்கப்படும் உருளைக்கிழங்கு.

இது யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படுவது இல்லை. ஏனெனில் எமது காலநிலை விதை உருளைக் கிழங்கு உற்பத்திக்கு ஏற்றதல்ல. எனவே நாம் பிற இடங்களிலிருந்து விதை உருளைக் கிழங்கை இறக்குமதி செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஆரம்ப காலத்தில் இப்படியாக இறக்குமதி செய்யப்பட்ட கிழங்குகளால் -

* பிந்திய வெளிறல் நோய் (LATE BLIGHT)
* பக்றீரிய அழுகல் நோய் (BACTERIAL ROT)

என்பன பரவக் காணப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 'விதைப் பரிகாரம் (SEED TREATMENT) செய்யப்பட்ட உருளைக்கிழங்குகள் மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. இவ்வாறு நோய்களை உண்டுபண்ணும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தான் எம்மவர் எமக்கே கிடங்கு வெட்டிக் கொண்டனர்.

விதைப் பரிகாரம் செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மட்டுமே இறக்குமதி செய்யப்பட அனுமதிக்கப்படும் என்ற கட்டுப்பாட்டை அடுத்து விதை இறக்குமதி செய்வோர் 'கப்டான்', 'திராம்' போன்ற பங்கசு நாசினிகளை மிக லாவகமாக விதை உருளைக்கிழங்கை விதைப் பரிகரிப்பு செய்வதற்காய் பயன்படுத்தத் தொடங்கினர். இவை கிழங்குகளில் கருமையான நச்சுத் தன்மையை ஏற்படுத்துவதுடன் கருவிலோ அல்லது வேறு முறையிலோ அகற்றப்படாத தன்மையைக் கொண்டும் காணப்பட்டன.



"இதனால் எங்களுக்கு என்ன? விதை உருளைக்கிழங்கை விதைக்கத்தானே பயன்படுத்துவர்" என்கிறீர்களா? அதுதான் இல்லை. இரவுபகலாய் உழைக்கும் எம் வியாபாரிகள் அதிக கேள்வியான காலத்தில் - அதாவது கிலோ 250 ரூபா போன்ற உச்ச விலைகளில் கிழங்கு விற்கும் சமயத்தில் - உருளைக்கிழங்கு என விதை உருளைக்கிழங்கையே விற்று இலாபம் சம்பாதிக்கின்றனர். இவர்கள் பங்கசு நாசினியின் மணத்தைத் தவிர்க்க மேலும் இரசாயனப் பதார்த்தங்களை உபயோகித்து நஞ்சை மேலும் நஞ்சாக்குவது கொடுமையிலும் கொடுமை.

இப்படியாக சந்தைக்கு வந்து விட்ட விதை உருளைக்கிழங்கை உச்ச விலை கொடுத்து மக்கள் வாங்குவதையும் இதைத் தம் மழலைகளுக்கு ஊட்டி மகிழ்வதையும் கண்ணால் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு மழலைகளை சென்றடையும் நஞ்சு அவர்கள் வாழ்வை நாளுக்கு நாள் பழுதாக்குவதுடன் உயிரைப் பாதிக்கும் யமனாகவும் மாறிவிடுவதும் பார்க்க சகிக்கவில்லை.

**கு.மிகிந்தன்**
(விவசாய உயிரியல் பகுதித்தலைவர்,
யாழ்பல்கலை-விவசாயபீடம்)

இதுமட்டுமல்லாமல் கப்டான், பென்லேற்று போன்றவை கர்ப்பிணித் தாய்மாரை அடைந்து குழந்தைகளில் இதய, ஈரல் கோளாறுகளை ஏற்படுத்துவது பரிசோதனை ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள உண்மை. மேலும் இவ்வகையில் பிறக்கின்ற குழந்தைகள் புத்தி சுவாதீனத் தன்மை உடையதாய் இருப்பதுடன் உடல் ஆரோக்கியம் குன்றியும் காணப்படுகின்றன.

எனவே உருளைக்கிழங்கின் விலை அதிகமான காலத்தில் நீங்கள் விழிப்புடன் செயற்பட்டு உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை காப்பாற்றுவதை உறுதி செய்யுங்கள்.

# பகிர்வு

கோபம்! - இதுதான் நம் வாழ்க்கையின் அனைத்து முன்னேற்றங்களுக்கும் எதிரி. கோபம் உற்பத்தியாகின்ற இடத்தில் அறிவு தன் வேலையை நிறுத்திக் கொள்கிறது. எந்தப் பிரச்சினையினையும் நான்கு பக்கமும் யோசித்துப் பார்க்கின்ற பக்குவம் வரும்போது நிதானம் ஏற்படுகின்றது. நிதானம் மன அமைதிக்கு வழிகாட்டுகின்றது. மனம் அமைதி அடையும் போதுதான் வாழ்க்கை அர்த்தப்படுகின்றது.

அந்தப் பிஞ்சு மனமும் கோபத்தின் வலுவைக் குறைப்பதற்கு முயன்று கொண்டிருந்தது. அருகே நின்று கொண்டிருந்த மயிலின் தோகையினை மெல்ல வருடி விட்டான். தன் எஜமானன் மன நிலையைப் புரிந்து கொண்ட அந்த ஜீவன், தன் தலையை அன்போடு சாய்த்துத் தோகைச் சிறகைச் சிலிர்த்தமை அவனுக்குள் ஒரு ஸ்பரிச உணர்ச்சியைத் தோற்றுவித்தது. அதன் அங்க அசைவுகள் எல்லாம் ஆறுதல் மொழிகளாய் அவனுக்குப்பட்டன. மெல்ல நிமிர்ந்து தன் தந்தையின் நெற்றிக்கண்ணை உற்று நோக்கினான். நெற்றிக்கண் அவனின் பிறப்புறுப்பு. அதற்குரியவர் அவனுக்குத் தந்தை மட்டுமல்ல, அவனைப் பிரசவித்த தாயுந்தான்! ஆம்..... அவன் ஆண்மகன். ஓர் ஆசைக்கே(?) மகனாய் பிறந்தவன். அழகு என்ற சொல்லுக்கு அர்த்தமாக அமைந்தவன். தன்னைக் கையெடுத்து வழிபட்டவர்களை 'கற்றது கைம்மண்ணளவு' என்று கவிபாட வைத்தவன் - கல்லாத உலகளவைக் கற்றுக்கொண்டவன். அனைத்தும் அறிந்த தந்தைக்கே குருவாய் அமைந்த தனயன்.

இப்போது அந்தச் சின்னவனின் அறிவுக்கு தன் தந்தையின் திருவிளையாடலில் சிறுபிழை இருப்பதாகத் தென்பட்டது. பெற்றோர் வீற்றிருந்த திசையை நோக்கிச் சிரம் தாழ்த்தினான்; இருகரங்கூப்பி வணங்கினான்; உதடுகள் வார்த்தைகளை உச்சரிக்கத் தொடங்கின.

"தந்தையே...! தங்கள் இருவரையும் வலம் வந்ததற்காக... அண்ணனுக்கு மாங்கனியை வழங்கியதாகக் கூறுகிறீர்கள்... இந்தப் போட்டியில் நீதி கூறும் நடுவராக இருந்தவர் தாங்கள் தானே...? நீதிபதி பந்த பாசத்திற்கு கட்டுப்படக் கூடாது என்பது தாங்கள் வகுத்த சட்டம் அல்லவா..? தங்களால் எப்படி அண்ணனை மகனாகப் பார்க்க முடிந்தது...?"

"சண்முகா...! உன்தாய் பார்வதி உலகத்து உயிர்கள் அனைத்திற்கும் அன்னையாகவும், தந்தையாகவும் இருப்பவள் என்பதும் நீ அறிந்தது தானே...? அண்ணன் கணபதி எங்கள் இருவரையுந்தானே வலம் வந்தான்? எனவே அது உலகை வலம் வந்ததற்கு ஒப்பான செயல் அல்லவா...?"

பதிலைக் கூறிய சிவனது முகத்தில் வெற்றிப் பெருமிதத்திற் கான புன்னகை தாண்டவமாடியது. ஆனால் உலகத்து நாயகயின் உள்ளம் ஒரு நிலையின்றித் தவித்தது. பிள்ளைகளுக்குள் போட்டி நடைபெறுவதை ஆரம்பத்திலிருந்தே அவள் மனம் ஒப்பவில்லை. அவளும் தாய்தானே? பழத்தை இருவருக்குமே பங்கிட்டுத் கொடுத்திருக்கலாம். ஒரு பிள்ளை மட்டுமே அனுபவிப்பது ஓரவஞ்சனை அல்லவா...? 'எனக்கு மட்டும் உரியது' என்ற எண்ணந்தானே... மேலாதிக்கத்தை வளர்க்கிறது; போர்வெறியைத் தூண்டுகிறது; பேதங்களை விளைவிக்கிறது. பகிர்ந்தளிக்கப்படும் பக்குவம்தான் பண்பாட்டின் உச்சம். அர்த்த நாரீஸ்வரவடிவம் ஆண், பெண் தத்துவத்தின் பகிர்வு தானே...? உள்ளமும் உடலும் ஒன்று சேரப் பகிரப்படும்போதுதானே... சிற்றின்பம் பிறக்கிறது? ஜீவாத்மாவும் பரமாத்மாவும் பகிரப்படுகின்ற போது தானே பேரின்பம் மலர்கிறது?' பார்வதிதேவியின் இந்த எண்ண அலைகளைச் சிதறகடிப்பதாகச் சின்ன மகன் பேசத் தொடங்கினான்.

அனைத்து அஸ்திரங்களும் பயனற்றுப் போகும் போது வேலவன் இறுதியாகப் பிரயோகிப்பது வேலாயுதத்தைத்தான். அது அறிவின் அர்த்தத்தினை விளம்பி நிற்பது. ஆழ்ந்து அகன்று நுண்மையாகக் காணப்படுவது. அவன் வாதமும் அவ்வளவு கூர்மையாக இருக்க வேண்டிய கவ



னத்தோடு அஸ்திரத்தைத் தொடுக்க ஆயத்தமானான்.

"தந்தையே...! தாங்களும் என் தாயும் ஆதியும் அந்தமும் அற்றவர்கள். ஆனால் உலகம் என்றழைக்கப்படுவது அப்படி அல்லவே..? நாளை அழிந்து, பின்பு தோற்றம் பெறப் போகும் அற்பத்தனமான சடப்பொருளுக்குச் சமமாக உங்கள் இருவரையும் உவமித்தது சரிதானா...? அன்றியும் தாய், தந்தையரை உலகமாக கொள்வது சாதாரண மானுட தத்துவம். அதனை எப்படி இறை தத்துவத்திற்கு இணையாகக் கொள்ளலாம்? தர்மங்களை மனிதர்களிக்குள்ளேயே பாமரர்களுக்கு வேறாகவும், மன்னர்களுக்கு வேறாகவும் மற்றும் தேவர்களுக்கு வேறாகவும் வகுத்தவர் தாங்கள் தானே...? இறை தர்மம் இதற்கெல்லாம் அப்பாற்பட்டதல்லவா...? அதனைச் சராசரி மனித தர்மத்தோடு சமமாகக் கொண்டு தீர்ப்புக் கூறலாமா...?"

ஞானபண்டிதன் முகத்தில் முன்னெப்போதும் இல்லாத ஒளி வீசிக் கொண்டிருந்தது. ஆயிரம் சூரியன்கள் அவன் கண்களுக்குள் கருக் கொண்டிருந்தன. வேதத்தின் சுருக்கமாய் அமைந்த சிவனது நெற்றியில் விழுந்தது சுருக்கம். அது சிந்தனையின் அறிகுறி. நெற்றிக்கண் இமைகள் துடிக்கத் தொடங்கின. மகேஸ்வரன் பெருமூச்சோடு கூடிய மௌனத்தோடு விநாயகப் பெருமானைப் பார்த்தார். விநாயகர் விழிகள் மூடிய நிலையில் வீற்றிருந்தார். தன் தம்பிக்குரிய பங்கையும் தானே அனுபவிப்பதாய் அவருக்குப்பட்டது. பூலோகத்தில் அறிவை மூலதனமாய்க் கொண்ட மேலாதிக்கவர்க்கம் உழைத்துக் களைக்கின்ற தொழிலாளர்களின் ஊதியத்தை ஏப்பமிடுதல் போல தன் செய்கையும் அமைந்து விட்டதோ..? என்று எண்ணத் தொடங்கினார். "நீயே ஞானப் பழம்... உனக்கெதற்கு மாம்பழம்...?" என்று சில சமாதான வார்த்தைகளை வேண்டுமானால் கூறிக்கொள்ளலாம். அவரின் ஞானக் கண்ணுக்குள் மாங்கனியின் முழுப் பரிமாணமும் தெரிந்தது. அக்கனியின் வித்துக்குள் புழு ஒன்று வீற்றிருந்து மெல்ல நெளிவது போல ஓர் உணர்வு ஏற்பட்டது. அவ்வளவுதான், விநாயரின் விரல்களில் இருந்த மாங்கனி நழுவிப் பூலோகம் நோக்கி விழத் தொடங்கியது. பிரச்சினைக்குரிய மூலம் அவர்களை விட்டுப் பிரிந்து விட்டது.

* * *

திடுக்குற்று விழித்தேன். அது கைலாயம் இல்லை! என் வீட்டுக் கட்டில். படுக்கையறைச் சுவரில் முருகனும் பிள்ளையாரும் காட்சியளித்தார்கள். 'யாமிருக்கப் பயமேன்?' என்ற வாசகம் வரையப்பட்டிருந்தது. அதன் கீழே விநாயகர் தன் கையில் உள்ள மாங்கனியை முருகனை நோக்கி நீட்டிய வண்ணம் நின்றிருந்தார். படத்திற்கு போடப்பட்டிருந்த தங்கப் 'பிரேம்' படத்தை இன்னும் மெருகூட்டியது. கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தேன். என் கை தட்டுப்பட கட்டிலில் இருந்த எனது சமூகக் கல்விப் புத்தகம் கீழே விழுந்தது. விழுந்த வேகத்தில் பக்கங்கள் காற்றில் படபடத்தன. தேசப்படத்தில் 'இலங்கை' கண்ணில் பட்டு மறைந்தது.

**உச்சிக்கிழான்**

'அடடா...! இலங்கையும் மாம்பழ வடிவந்தானே...? பூலோகத்தில் இருந்து விழுந்த கனி..ஒரு வேளை இந்து சமுத்திரத்தில் விழுந்து ஒரு தீவாக உருவாகியதோ...? என்ற சிந்தனை எழுந்த அதேநேரம், எதிர் சுவரில் பார்வதி, பரமசிவன் சிரித்த வண்ணம் தொங்கிக் கொண்டிருந்தனர்.

ஒருவரே அனுபவித்தல் என்பது - மற்றவர் உரிமையைப் பறிப்பது என்பது - ஒற்றுமையின்மைதானே..? பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று ஏன் பரம்பொருள் நினைக்கவில்லை..? அதுதானா இன்றைய பிரச்சினைகளுக்கு வித்து? என்மனம் புரியாமல் தவித்தது.

(யாவும் கற்பனை)

## சங்க மண்ணுக் கேன்வந்த திழுக்கு?

ஊரிழந்துநம் உறவுகள் கலைந்ததும்
வேரிழந்துநாம் விருட்சமாய்.... வீழ்ந்ததும்
காரிருள் எங்களை வந்து சூழ்ந்ததும்
சீரிழந் தின்னலில்..... இங்குநாம் வாழ்வதும்
எப்படி வந்தது? தப்புயார் செய்தது?
எப்பவும் எங்களை எதிரியாய் எண்ணிடும்
ஆட்சியா லழிகிறோம்; அநாதர வாகினோம்!
சாட்சியின்றி நாம் சமாதியாய் ஆகினோம்!

ஏங்கித் தவித்தென்றும் இங்கிருக்க
தாங்கிடுமோ நெஞ்சம், தரணியிலே.....
வாங்கித் தந்ததாய்ச் சுதந்திரத்தை
எங்கும் தமிழ்மண்ணில்..... பேச்சொன்றிருக்கிறது
மாங்கனியை யொத்ததாய் சுவைநல்கும்
சங்க மண்ணுக் கேன்வந்த திழுக்கு
திங்கின்றித் தித்திப்பில் நாமிருக்கும்
பாங்கொன்று வந்திடுமோ பாரில்..?

- பொலிகண்டியூர் சு.க.சிந்துதாசன -

# “நெடியோய் யாம் ஏத்துகம்”

கடந்த பல வாரங்களாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் பகரும் விழுமிய பண்புகள் பற்றிச் சிந்தித்து வருகின்றோம், இன்று, புறநானூறு புகலும் ஒரு செய்தியை நோக்குவோம்.

பழந்தமிழ் இலக்கியங்கள் பாட்டும் தொகையும் எனப் பகுக்கப்பட்டிருத்தலையும் அறிவோம். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களும் பழைமை வாய்ந்தனவே!

தொகை நூல்களுள் புறநானூறு, இறுதிக்கண் இடம் பெற்றுள்ளது. தண்டமிழ்ச் சான்றோர் சங்கநூல்களின் முடிமணி என்று இதனைப் போற்றுவர்.

தேன்கூடு

இது, செந்தமிழ் மாந்தரின், தொன்மைக்காலத்து நாகரிகம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம், சமயம் என்னாப் பலதுறைகளிலும் அரிய, பெரிய செய்திகளைக் கூறாமற் கூறுகின்றது.

தமிழ் மாந்தர் அகம், புறம் என்னும் இரு வாழ்வியல் நெறிகளைக் கைக்கொண்டொழுகியமை உலகப் பிரசித்தமானது. புறத்திணையில் அறமும் பொருளும் புகலப் படுகின்றது.

ஆசிரியர் தொல்காப்பியர், புறத்திணையை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் முதலியவாகப் பகுப்பர்.

பின்வந்த சான்றோர் 'வெட்சி நிரை கவர்தல்; மீட்டல் கரந்தையாம்; வட்கார் மேல் செல்வது வஞ்சியாம்; உட்காது எதிரூன்றல் காஞ்சி; எயில் காத்தல் நொச்சி; அது வளைத்தலாகும் உழிஞை; அதிரப் பொருவது தும்பையாம்; போர்க்களத்து மிக்கோர் செருவென்றது வாகையாம் – என்பவற்றுடன் கைக்கிளை, பெருந்திணையையும் இணைத்து பன்னிரு பாற்றதாகப் பகர்வர்.

(நிரை – பசுக்கூட்டம்; வட்கார் – பகைவர்; எயில் – மதில்; அதிர்தல் – அஞ்சுதல்; செரு – யுத்தம்)

புத்தாயிரமாம் ஆண்டில் உலகடங்களிலும் சாந்தி, சமாதானம் சகவாழ்வு வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்படுகிறது! முடி மன்னர் ஆட்சி மறைந்து சனநாயக ஆட்சி உதித்துவிட்டது. 'வாழு; வாழ விடு' என்னும் மகாமந்திரம் மட்டும் கேட்கின்றது. அனைத்தும், ஆள்பவரிடத்தேதான் தங்கி இருக்கிறது.

இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்கு முன்னே பழந்தமிழகம் முடிமன்னர் ஆட்சியில் நிலைபெற்றிருந்தது. மன்னவர் உலகுக்கு, நெல்லும்(உணவு வளம்) உயிர் அன்று; நீரும்(நீர்வளமும்) உயிர் அன்று; 'மன்னவனே' உயிர் என்ற கோட்பாட்டினை உடையராய் இருந்தனர். அது மட்டுமல்ல,

குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊரும் மன்னவர்க்கும் நடு நாள் யாமத்தும் பகலும் துயிலாது காவல் புரிவோனுக்கும் உண்பதும் உடுப்பதும் மட்டும் வேறுபடும்; ஏனைய எல்லாம் ஒன்றே! என்றும் துணிந்திருந்தனர்.

ஆட்சி என்னும் வண்டியைச் செலுத்தும் மன்னவன் மாட்சிமை உடையனாய் இருப்பின் யாதொரு தீதும் இன்றி அந்த வண்டி இனிது இயலும் என்றும் கண்டிருந்தனர். 'முறை செய்து காப்பாற்றி, இறையாம் – கடவுளாம் – தன்மை எய்தினர்'

இனி, புறநானூற்றுப் பாடலுக்கு வருவோம். ஊன் பொதி பசுங்குடையார். ஒரு பழம் பெரும் புலவர் அவர். சோழன், நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்னும் வேந்தனைக் காண்கின்றார். அவனிடம் உள்ள தனித்தன்மைகளைப் பார்க்கின்றார். தன்னை வழிபடுவோரை, தழுவிக் கொள்ளுகின்றான். பிறரிடம் குற்றம் கண்டு பழிகூறுவார் சொல்லை ஏற்றுக் கொள்ளுகின்றான் இல்லை. எதனையும் மெய்யா, பொய்யா என ஆராய்கின்றான். பின்னர் நீதி நூலுக்குப் பொருந்தத் தண்டம் வழங்குகின்றான். எதிரி தன்னை வந்து கண்டு அடியில் வீழ்ந்து நின்றால் தண்டனையையும் குறைத்துக் கொள்ளுகின்றான். வந்தோர்க்கு வரையாது கொடுக்கின்றான். ஒன்றைச் செய்யும் முன்பு நன்றாக ஆராய்கின்றான். நடந்த ஒன்றுக்காகப் பிழை செய்தோமே என்று பின்பு வருந்தும் தன்மை அவனிடம் இல்லை. மனை வாழ்க்கையில் இன்பம் காணுகின்றான். மண்ணின் மேல் வான் புகழ் நட்டு வாழ்கின்றான். புலவர் இறுதியில் 'நெடியோய், யாம் நின்னை அணுக வந்தமை நின் பல்குணங்களையும் புகழ்கின்றோம்' என்கிறார். இனி, பாடலைக் காண்போம்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர் பழி கூறுவோர் மொழிதே றலையே
நீ மெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்த(வு) ஒறுத்தி;
வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்,
தண்டமும் தணிதி நீ பண்டையிற் பெரிதே
அமிழ்(து) அட்டானாக் கமழ்குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்தல் அல்லது மன்னர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப
செய்திரங்கா வினைச் சேண் விளங்கு புகழ்
நெய்தலங்கான் நெடியோய்
எய்த வந்தனம் யாம் ஏத்துகம் பலவே.

புறம் 10

'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்கிறார்களே! ஆட்சியாளர் அறத்திறம் காத்து ஒழுகினால் அல்லல் ஒன்று இல்லை; இல்லை. திருத்துவதிலும் திருந்த நடக்க முயலுவோமாக!

தொடரும்

- சிதண்டியார்.

# 'பென்ஷன்' எடுத்ததும் மதிப்புக் குறைவதேன்?

**நீராவியடி. தி.துஷி.**
வித்தூ! நீ சினிமா நடிகைகளுடன் 'டூயட்' பாட ஆசைப்பட்டதுண்டா?




☺**ஹீ.....ஹீ..... கனவில் மட்டும் (வித்துவாட்டிக்குத் தெரியாமல்.....!)**

❀ ❀ ❀

**நெல்லியடி. மதீசன்.**
என் மனைவி புடைவைக் கடையில் ஐந்து நிமிடத்துக்குள் புடைவை தேர்ந்தெடுத்து சாதனை புரிந்திருக்கின்றாளே...?
☺**அது உங்கள் அம்மாவுக்காக எடுத்த புடைவையாக இருக்கும்!**

❀ ❀ ❀

**இணுவில். மருது.**
காதலைத் தங்க ஆபரணங்களுடன் ஒப்பிடலாமா?
☺**சில காதல்கள் 'கவரிங்' நகையாக இருக்கின்றனவே?**

❀ ❀ ❀

**இளவாலை. ஜூலியட்.**
திருமண வாழ்க்கை எப்படி இருக்கும்? தென்றலாக அமையுமா?
☺**முதல் மூன்று மாதம் மந்தமாருதம்; பிறகு சண(டை)டமாருதம்!**

❀ ❀ ❀

**நல்லூர். அசோக்.**
காதலர்கள் இன்பத்தின் எல்லை வரைச் செல்லலாமா?
☺**எல்லை வரைச் சென்றால் தொல்லையும் கூட வந்து சேருமே?**

❀ ❀ ❀

**கரவெட்டி. மகிந்தன்.**
அழகான காதலி என்னை ஏமாற்றி விட்டாள். இப்போது அழகில்லாத பெண்ணை என்

## வித்துவான் பதில்கள்

தலை மீது கட்டிவிட்டார்களே. என்ன செய்ய?
☺**அவலை நினைத்து உரலை இடிக்க வேண்டியதுதான்!**

❀ ❀ ❀

**பாஷையூர். நிமலன்.**
மொட்டைத் தலை(வர்)கள் பாரதப் புகழ் பாடுகின்றனரே?



☺**'சீச்சீ' என்றதும் இந்த வாய்தான். இப்போது 'சிவசிவ' என்பதும் இந்த வாய் தான்.**

❀ ❀ ❀

**அராலி. முருகேசு.**
'பென்ஷன்' எடுத்த பின் என்னை மனைவி மதிப்பது குறைந்து விட்டதே?
☺**'பென்ஷன்' சம்பளத்தை விடக் குறைவாக இருக்கும்போது மதிப்புக் குறைவது இயல்புதானே?**

❀ ❀ ❀

**வளலாய். ஜெரி.**
நகர வாழ்க்கை நல்லதா?
☺**அது நரக வாழ்க்கை பாருங்கோ!**

❀ ❀ ❀

**ஊறணி. கிருஷ்.**
'கரண்டை' நம்பி 'ரியூஷன்' மாஸ்டரை வீட்டுக்குக் கூப்பிடலாமா?
☺**'கரண்ட்' திடீர் திடீரென நின்று விடுகின்றதே! 'ரியூஷன்' மாஸ்டர் 'சிலபஸில்' இல்லாத பாடத்தைத் தொடங்கி விடுவாரே!**

❀ ❀ ❀

**கொட்டடி. ராஜேஸ்.**
வேலைக்காரி மீது நம்பிக்கை வைக்கலாமா?
☺**'வேலை'காரி என்றால் வைக்கலாம்!**

❀ ❀ ❀

**வட்டூர். றிக்கேஷ்.**
உங்கள் காலத்தில் 'பாவாடைத் தாவணியில் பார்த்த உருவமா இது?' என்று பாடினீர்கள். இப்போது நாங்கள் எப்படிப் பாடுவது?
☺**'ஜம்பர் உடுப்போடு ஜம்பம் அடித்த ஜந்தா இது?' என்றுதான் பாட வேண்டும்.**

❀ ❀ ❀

**நீர்வேலி. பிரியா.**
எனது அலுவலக வேலைகளை கணனியைக் கையாளும் இளைஞர் ஒருவரைக் கொண்டு செய்து வருகின்றேன். அதைத் தவறாகப் பேசுகின்றார்களே?
☺**அவர் கணனியைக் கையாள்பவரா? கன்னியைக் கையாள்பவரா?**

❀ ❀ ❀

**வதிரி. இராகுலன்.**
அலுவலகத்தில் அரட்டை அடிப்பவர்கள் குறித்து.........?



☺**அலுவலகத்தில் குறட்டை விடுபவர்களோடு ஒப்பிடும் போது அரட்டை அடிப்பவர்கள் எவ்வளவோ மேல்!**

❀ ❀ ❀

**கட்டுடை. மகான்.**
ஆண்கள் அவசரக்காரர்களா?
☺**'அவசரக்காரனுக்கு புத்தி மட்டு.' பலர் அவசரப்பட்டு கட்டியபின் முழிப்பதைப் பார்க்கும் போது நீங்கள் கூறுவது சரிதான் எனத் தோன்றுகின்றது!**

❀ ❀ ❀

**சங்கானை. ராஜு.**
நித்திரை மருந்தை உபயோகித்ததும் கனவில் ஓர் அழகி வருகின்றாளே.....?
☺**திருமணமாகும் வரை இந்த மருந்தையே உபயோகியும்.**

❀ ❀ ❀

**உடுவில். மதன்.**
சத்திரசிகிச்சை செய்யும் டாக்டருக்குப் பயம் இருக்காதா?
☺**பயப்பட வேண்டியது நோயாளி அல்லவா?**

❀ ❀ ❀

**மானிப்பாய். மாறன்.**
வயோதிபத்தைப் போக்க வழி என்ன?
☺**வயோதிபம் நீக்க வயாக்கராவே வழி!**

❀ ❀ ❀

**வட்டுக்கோட்டை. சிவா.**
காதலுற்று அவஸ்தைப்படும் நண்பனின் தொல்லையால் இரவில் நித்திரை செய்ய முடியவில்லை. என்ன செய்யலாம்?
☺**'தீ' பற்ற முன்னர் இடத்தை மாற்றும்!**

❀ ❀ ❀

**சுன்னாகம். மிராஜ்.**
காதலைக் கண்ணாமூச்சி ஆட்டமாகக் கொள்ளும் என் காதலி குறித்து உமது அபிப்பிராயம்...?

## தங்க ஆபரணங்களுடன் காதலை ஒப்பிடலாமா?

☺**எங்கேயோ வழுக்கி விழப் போவது நிச்சயம்!**

❀ ❀ ❀

**கோவளம். பாலன்.**
சிற்பி செதுக்காத சிலை ஒன்று என்னை விரும்புகின்றதே?



☺**சிற்பியின் வேலையைத் தொடர நீர் விரும்புகின்றீரா?**

❀ ❀ ❀

**மிருசுவில். மாயா.**
சீருடையினரின் இன்றைய நிலை என்ன?
☺**பிச்சை வேண்டாம்; நாயைப் பிடி!**

❀ ❀ ❀

**கல்வயல். ஈஸ்வரன்.**
குடியில் மூழ்கியிருக்கும் எனது நண்பன் 'குடிக்காதே!' என்றாலும் கேட்கிறான் இல்லையே!
☺**'கெடுகுடி சொற் கேளாது!'**

❀ ❀ ❀

**சங்குவேலி. ரமேஷ்.**
மனைவியைத் தள்ளி வைக்கலாமா?
☺**கையாளாத ஆயுதம் கறள் பிடித்துப் போகும்!**

❀ ❀ ❀

**வேலணை. ரஞ்சித்.**
இங்குள்ள அரசியல் கட்சிகளின் இன்றைய நிலை என்ன?
☺**கொண்டாட்டம், போய் திண்டாட்டம் வந்த நிலைதான்!**

❀ ❀ ❀

**மயிலணி. குணம்.**
'வெற்றி உறுதி' முழக்கம் இப்போது என்னவாயிற்று?
☺**'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!' என்ற கதையாகி விட்டது!**

❀ ❀ ❀

## ஜல்லிக் கட்டு என்றால் என்ன?

**நவாலி. தீப்.**
நடிகைகள் முற்றும் துறந்தவர்களா?
☺**அச்சம், மடம், பயிர்ப்பு, நாணம் உட்பட முற்றும்.....!**

❀ ❀ ❀

**கொழும்புத்துறை. ஜோ.ஜெ.**
அர்ச்சனை - வரதட்சணை. ஒப்பிடுக.
☺**வரதட்சணையுடன் வந்த அம்மணியிடம் தினசரி வாங்கிக் கட்டுவது அர்ச்சனை!**

❀ ❀ ❀

**சங்கரத்தை. காளிமுத்து.**
மனைவியின் தொல்லை தாங்க முடியவில்லை. சந்நியாசம் கொள்ள விரும்புகிறேன். நல்ல நாள் குறித்துத் தாருங்களேன்.
☺**ஞானிக்கு இல்லை ஞாயிறும் திங்களும். எனவே நன்றே செய்; அதை இன்றே செய்!**

❀ ❀ ❀

**நல்லூர். துஷி.**
மயங்கி விழும் மாதுகள் குறித்து வித்துவின் கருத்து என்ன?
☺**முன்னர் மயங்கியதால் வந்த மயக்கம் என்றால் சிக்கல்தான்!**

❀ ❀ ❀

**கொக்குவில். பிரசன்னா.**
நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்பது உண்மையா?
☺**ஐயோ! அங்கேயும் 'ராகிங்' நாய்கள் இருக்குமா?**

❀ ❀ ❀

**கோண்டாவில். சரிகா.**
கணவன் ஊர் சுற்றியாக இருந்தால்.....!
☺**வீட்டில் அடுப்பு எரியாது!**

❀ ❀ ❀

**சாவகச்சேரி. ப.நக்கீரன்.**
ஆடு, அரசியல்வாதி, வண்டு, குரங்கு - எல்லாம் எதற்கு உதாரணங்கள் என்று கூறும் பார்ப்போம் வித்தகரே?
☺**அடுத்த வீட்டில் மேயும் ஆடு, கட்சி மாறும் அரசியல்வாதி, பூவுக்குப் பூ விருந்துண்டு மயங்கும் வண்டு, கிளைக்குக் கிளை தாவும் குரங்கு எல்லாம் சின்ன வீடுகளை நாடும் நாயகர்களுக்கு நல்ல உவமானங்கள். சரிதானே நக்கீரரே!**

❀ ❀ ❀

**தட்டாதெரு. மகேந்து.**
தந்தி வேகத்தில் வதந்திகள் பரவுகின்றனவே....?
☺**கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்! கவனம்!!**

❀ ❀ ❀

**நீராவியடி. முத்து.**
மினி சினிமா, தொலைபேசி, கரண்ட் எல்லாம் ஓயாத அலையுடன் ஓய்ந்து போகுமா?
☺**இந்த வரிசையில் வித்துவானும் சேர்த்தி என்கின்றாரே ஒரு நண்பர்!**

❀ ❀ ❀

**சரசாலை. குமார்.**
காதலனிடம் காதலி முதலில் எதிர்பார்ப்பது எதை? பூவையா? மொட்டையா? மாலையையா?
☺**பெரும்பாலும் வித்தை!**

❀ ❀ ❀

**மாவடி. தாசன்.**
ஜல்லிக் கட்டு என்றால் என்ன?



☺**காளையை அடக்குதல். ஆனால் ஜல்லிக் கட்டில் வென்ற காளை தாலிக் கட்டில் அடங்கிப் போகும்!**

❀ ❀ ❀

**அளவெட்டி. சர்மிளா.**
வித்துவான் ஸார்! உங்களுக்கு வெட்கமே இல்லையா?
☺**ரோஷம், மானம் கூட இல்லை என்று கூறித்தானே வித்துவாட்டி அவ்வப்போது திட்டுகின்றாள்!**

❀ ❀ ❀

**உடுவில். சதீஸ்.**
பரதநாட்டியக்காரியைக் காதலிக்கலாமா?
☺**அவளது நாட்டியத்துக்கு நீர் நட்டுவாங்கம் போட வேண்டி இருக்குமே!**

❀ ❀ ❀

**வண்ணை. செ.தமிழ்.**
தலை நரைத்தாலும் பலருக்கு ஆசை நரைப்பதில்லையே! ஏன்?
☺**நரைத்தவன் எல்லாம் கிழவனா?**

❀ ❀ ❀

**கண்டுக்குழி. ஜெ.அ.**
காதல் இனிப்பானதா வித்து?
☺**முதலில் இனிக்கும். பிறகு குமட்டும்.**

❀ ❀ ❀

### இவ்வார ஜோக்!

மூன்று நாட்டு வாள் வீச்சு வீரர்களுக்கு இடையே யார் திறமைசாலி என்பதை அறிய ஒரு போட்டி நடந்தது. முதலில் இந்தியன் களத்தக்கு வந்தான்.

ஒரு குடுவைக்குள் இருந்த கொசுக்களில் ஒன்று முதலில் திறந்து விடப்பட்டது. இந்திய வீரன் வேகமாகப் பாய்ந்து வாளைச் சுழற்றினான். என்ன ஆச்சரியம்! கொசு இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு வீழ்ந்தது.

அடுத்தது அமெரிக்க வீரனின் முறை. மற்றொரு கொசு திறந்து விடப்பட்டது. அவனும் வாளைச் சுழற்றினான். கொசு நான்கு துண்டுகளாக விழுந்தது.

அடுத்தது தமிழனின் முறை. மற்றொரு கொசு திறந்து விடப்பட்டது. தமிழ் வீரன் வாளை ஒரு வீச்சு வீசினான். அதன் பின்னும் அந்தக் கொசு சாதாரணமாகப் பறந்து கொண்டிருந்தது. எல்லோரும் ஏளனத்துடன் தமிழ் வீரனைப் பார்த்தார்கள். அவன் சிரித்துக் கொண்டே சாவதானமாகச் சொன்னான்:-

"அந்தக் கொசுவைக் கொல்வதற்காக நான் வாள் வீசவில்லை. இனி அதற்கு செக்ஸ் வாழ்க்கையே கிடையாது" - என்றான்.

# குறள் வெள்ளம்

தமக்கு அறத்தால் ஆக்கம் வேண்டுபவர் பிறன் ஆக்கம் கண்டு கலங்கார்; பொறாமை காரணமாக *அழுக்காற்றின்* மற்றவனைக் கெடுக்க எண்ணி அவன் வீட்டில் கொள்ளி வைக்கமாட்டார்; அவன் முதுகில் குத்த நினையார்; *அல்லவை செய்யார்.*

தன்வினை தன்னைச் சுடும் எனத் தெரிந்தவர்கள் இவர்கள். தாம் அடுத்தவர் மீது ஏவிய கொடுமைகள் தரும் துன்பம் - *இழுக்காற்றின் ஏதம்* - படுத்தும் பாடு - *படுபாக்கு* - அறிந்தவர்கள்.

பழிக்குப் பழியும் சங்கிலித் தொடராகத் தொடரும் பகைமையும் பரம்பரை பரம்பரையாகத் தொடரத்தான் வேண்டுமா? என்றால் இன்றே பொறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தான் வேண்டும்.

**அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்**
**எதம் படுபாக்கறிந்து. 0164**

- *அம்பிகைபாகன்*

## 'சிறுவர் சுடர்'விடைகள்

XVIஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமான பல்வேறு புதிர்களுக்குரிய விடைகள் ஒழுங்கு முறையில் வருமாறு:-

### புதிர்க் கணக்கு

01) நான்கு பேர் (தாய், தந்தை, மகன், மகள்)
02) 55
03) 05பேர்
04) 12 தடவை
05) அகிலன்
06) நான்கு சதம்
07) 5 நாள்கள்
08) முப்பத்தி மூன்று
09) ஆறு நிமிடங்கள்
10) 16 அங்குலம்


### எது தெரியுமா?

1) C
2) B


### விடுகதைகள்

01) உறையிட்டு
02) கடிப்பதால்
03) கட்ட ஆளில்லாமல்
04) எடுப்பாரின்றி
05) மதுவால்
06) கொடியைக் காக்க
07) பெருங்காயத்தால்
08) குந்தியிருந்து
09) கொள்ளையிட்டு
10) கொட்டுவதனால்
11) தூங்குவதனால்
12) கன்னம் வைத்து
13) பட்டம்
14) நூல் கொண்டு

### உங்களால் முடியுமா?



படம் I



படம் II

படம்I இல் உள்ள மரப் பலகையை படத்தில் காட்டியபடி A,B ஆக வெட்டி அதைப் படம் II இல் காட்டியபடி பொருத்தினால் மூடி தயாராகி விடும்.

### ரவீந்திரநாத்.....

(XVI ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவைகளுக்கு வாசகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருந்ததால், அதைவிட்டுவிட்டு மீண்டும் லண்டன் செல்ல மறுத்துவிட்டார்.

தான் ரசித்த இயற்கைகளையெல்லாம் கவிதைகளாக்கி 'மாலைப் பாடல்கள்' என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டார். இதுவே அவரது முதல் கவிதைப் புத்தகம்.

மிகுந்த செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்த தாகூர் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டவர். 1883இல் மிருளாணிதேவி என்ற மங்கையைத் திருமணம் செய்துகொண்டார். செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த அவ்வம்மையாரும் தன் கணவரைப் போலவே எளிமையாக வாழ்ந்தார். விவசாயத்தை கவனிக்க கிராமத்துக்குச் சென்ற தாகூர், அங்கேயே தங்கிவிட்டார். அதன் விளைவாகப் பிறந்த கவிதை நூல்தான் 'நைவேத்தியம்' என்ற தலைப்பில் தாகூரின் தந்தையாரால் வெளியிடப்பட்டது.

(தொடரும்)

## உய்ய வழியிருக்க உதவிக்கு அயலவாரா?

எய்த வினையிருக்க
எதிர்வீட்டை அழைப்பதென்ன?
ஐயகோ! அநியாயம்!
அவர்களென்ன கூலிகளா?
உய்ய வழியிருக்க
உதவிக்கு அயலவரா?
செய்த பழிஇருக்கத்
திரும்புவரா? செய்ததெல்லாம்
வையமிதே அறிந்தபின்பும்
வருவதற்குத் திராணியுண்டா?
கையதனில் வெண்ணைவைத்தும்
கசிநெய்க்கு அலைவதென்ன?
தருமம் சூதுகவ்வத்
தவித்திட்ட தமிழரெமைத்
தருமம் மறுபடியும்
தாங்கிவெல்லும் நாள்வந்து
பெருமை தரநிற்க!
பிறர்வந்து என்னபயன்?
ஒருமை உணர்வோடு
உரம்விட்டுப் போவதுவே
அருமை யோசனையாம்.
அதிலின்னும் தயங்கிட்டால்
கருமம் எமக்குத்தான்
கட்டாயம் கைகூடிடுமாம்.
அன்று இத்தனையும்
அறிந்திருந்தால் இன்றைக்கு
நின்று இந்நாடு!
நித்திலமாய்(த்) திகழ்ந்திருக்கும்!
சென்று போகட்டும்!
செய்வதினிச் சிறக்கட்டும்!
வென்றார் என்றதொரு
வேதனையை விட்டுவிட்டு
நன்று விலகிப்போம்!
'நாம்யார்க்கும் குடியல்லோம்!
என்றது ஒன்றைமட்டும்
இப்போது உணர்ந்திருப்பீர்!
வாழும்! வாழவிடும்!
வளங்களெலாம் செழித்துயரும்!
ஆழும் பகை உணர்வைத்
துரத்திவிடும் வாழ்வுயரும்!

- தீவகன் -

## எது...?

*நமக்குள் நாமே*
*அமைத்துக்கொண்ட பாதை*
*நமக்காக நாமே*
*நடக்கின்ற பயணம்....*
*எதற்காக இதுவெல்லாம்?*
*வாழ்வைத் தெளிய வைப்பது*
*பயண முடிவின் இலக்கா*
*அல்லது*
*பயணம் செல்லும் பாதையா?*

- எழிற்பித்தன் -

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.153

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | ■ | |
| 10 | | ■ | 11 | | | 12 | |
| | ■ | 13 | | ■ | 14 | | ■ |
| 15 | 16 | | ■ | 17 | | ■ | 18 |
| 19 | | | 20 | | ■ | 21 | |
| ■ | | ■ | 22 | | 23 | ■ | |
| 24 | | | | ■ | 25 | | |

### சொற்சிலம்பம் இல. 153

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

..............................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி:- 12 - 05 - 2000

### இடமிருந்து வலம்

1. அர்ச்சுனன் மகன். 5. இனம். 7. முதலீட்டுக்குக் கிடைப்பது. 8.பிரி. 10. பள்ளமான பகுதி. 11. மதிப்புக் கொடுத்தல். 13.ஏற உதவும் 14.தூங்கி நிற்பது 15. இரத்தல். 17. வாழ். 19.மனத்திடம் மிக்கவன். 21. உயிர்ப்பின் ஆரம்பம். 22. சிலை. 24. நிழல். 25. இளம் பெண்ணின் உடை.

### மேலிருந்து கீழ்

1. மரியாதையினம். 2. ஓர் உணவு வகை. 3. தாய் தலாட்டுப்பாடி குழந்தையை தூங்கவைக்கும் தன் உடற்பகுதி. 4. இளம் பெண். 6. மைதானம். 9.வேலி அடைக்கவும் சாக்குத் தைக்கவும் உதவம் கருவி. 11. அடித்தால் ஒலிக்கும். 12. குளிர்மையைக் குறிப்பது. 13. மற்றைய/பிற/எஞ்சிய. 16. வரலாறு. 17. பலம் பொருந்திய தன்மை. 18. கை மற்றும் நகங்களுக்குப் பூசுவது. 20. சபித்துக் கொடுப்பது. 23. ஒரு மாவு வகை.

### சொற்சிலம்பம் 151 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. இகபரம். 5. மதி. 7. சபலம். 8. கதிரை. 9. குடி. 10. மிகுதல். 12. பயணம். 14. சபதம். 16. பகுதி. 18. குலவு. 19. அம்மல். 20. கரைதல். 22. கேணி 23. விலாவென்பு.

### மேலிருந்து கீழ்

1. இசகுபிசகு. 2. கபடி. 3. பல. 4. ரம்மியம். 5. மதில். 6. திரை. 8. கதம்பம். 11. குண. 12. புதவுரை. 13.பதில் 15.பலகணி 17. குமரன். 19. அல்லா. 21.தவி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** ப.ரஜீவன்,
புனித சம்பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு:-** சி.சிவனேஸ்வரி,
மே/பா - செல்வராசா.
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.

**மூன்றாம் பரிசு:-** வ.ஆறுமுகம்,
சிவன் வீதி,
ஆவரங்கால்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 152 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

# எங்கும் எய்ட்ஸ்....

(VII ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வியே இத்தகைய சிக்கல்களுக்கு விடைபகர முடியும்.

இவ்வொழுங்கு எதிர்பார்ப்புக்களை பகிரங்கமாகவோ இரகசியமாகவோ மீறுபவர்கள் கட்டாயம் கைக்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உதாசீனம் செய்யப்படுவது சமுதாயத்திற்குச் செய்யும் மன்னிக்க முடியாத துரோகம் ஆகின்றது.

தனிமனிதன் திருந்தாமல் சமுதாயம் திருந்தமுடியாது. ஒவ்வொருவரும் உறுதியாக இருக்க வேண்டிய விடயமாகப் பாலியல் இன்று மாறிவிட்டது. சுதந்திரம் இந்த விடயத்தில் விடைபெற்றுத்தான் விட்டது. மேலும் நோய்ப் பரம்பலை ஊக்குவிப்பவர்கள், அதற்கு அடிகோலும் பழக்க வழக்கங்களை உடையவர்கள் மனித இனத்தை வேரறுக்கும் துரோகிகளே.

அதேவேளை நோய் கண்டவர்களோ மரணம் நிச்சயிக்கப்பட்டவர்கள். தவறும்போதோ தவறாத போதோ அவர் நோயைப் பெற அனுமதித்த சமூகம் இனிமேலும் வசைபாடக்கூடாது என்றே உளவியல் மற்றும் மருத்துவ உலகம் வலியுறுத்தி நிற்கிறது. தாங்கமுடியாத நோய் அவஸ்தைக்கும், மரண பயத்திற்கும், உட்பட்ட நோயாளிகளுக்கு இயன்றவரை தெம்பூட்டுவதே சமூகம் செலுத்தும் இறுதி அஞ்சலி ஆகின்றது.

நோயாளிகள் பலர் மனம் திறந்து பேசுகிறார்கள். அப்பட்டமாக உண்மைகளைக் கொட்டி வருகிறார்கள். அவர்களின் கதைகளும் படங்களும் சர்வதேசப் பத்திரிகைப் பக்கங்களை நாளாந்தம் நிறைக்கின்றன. அவை சொல்லும் பயனுள்ள செய்திகளை உருக்கமாக மக்கள் ஏற்றுக்கொண்டால் தமது நடவடிக்கைகளில் எச்சரிக்கையுடன் வாழப் பழகலாம். (முற்றும்)

### உள்நாட்டு.........

(VIII ஆம்பக்கத் தொடர்ச்சி)

STRIPED CARP; *P.MELANAMPYX; P.CUMINGI* - TWO BANDED CARPLET; *P.TICTO; P.VITTATUS; P.TITTEYA* - CRIMSON CARPLET. - முதலானவை. உணவாகப் பயன்படுபவை.

**9. ஜப்பான் மீன்**

TILAPIA எனப்படும் இச்சாதிக்குரிய பல இனங்கள் இலங்கையில் புகுத்தப்பட்டன. வேகமாக வளரும்; வேகமாகப் பெருக்கமடையும்; நீர்த்தளத்தில் வளை தோண்டி, முட்டைகளை இட்டு, முட்டைகளுக்குத் தொடர்ந்தும் பாதுகாப்புக் கொடுக்கும். சில இன ஆண்கள் வாயில் அடைகாக்கும் (MOUTH BREEDING) இயல்புடையவை. ஜப்பான் மீனை நமது பிராந்திய மக்கள் விரும்புவதில்லை. இது மாசிக்கருவாடு போடுவதற்கு ஏற்றது எனக் கருதப்படுகின்றது.

### எது கவிதை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலாக விழுமியப் பொருள் கவிதையில் ஊடுருவி நிற்றல் வேண்டும். இவற்றைப் பின் புலமாகக் கொண்டு நோக்கும்போது உணர்ச்சியைக் கிளறவல்ல ஓசை நயமுள்ள மொழியில் மனித உணர்வுகளை மெய்யான கலை நயத்தோடு கூறுவதே கவிதை என்பது புலனாகும். வின்செ.்சடர் என்னும் ஆங்கிலக் கவிஞன் கவிதையில் ஓசையின் பங்கு பற்றிக் குறிப்பிடும் போது, கவிஞனது எண்ணங்களும் இதயத் துடிப்பும் பக்குவமாக வெளிவர, பாடல்களிலுள்ள சந்தம் (ஒலிநயம்) ஒரு வழியாகவும், வடிகாலாகவும் அமைந்துள்ளது எனக் கூறுவதை இங்கு ஆழ்ந்து நோக்குக.

(தொடரும்)

# பாதுகாப்புச்...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் தீர்மானத்தை இந்தியா அமுல் செய்யாததால் அது நிரந்தர உறுப்பு நாடாவதற்கான தகுதியை இழந்து விட்டதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் அப்துல் சத்தார் தெரிவித்துள்ளார். பாதுகாப்புச் சபைக்கு நிரந்தர உறுப்பு நாடுகளைப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளும் போது கடந்த காலங்களில பாதுகாப்புச் சபையின் தீர்மானங் களை அந்த நாடுகள் எவ்வளவு தூரம் அமுல் செய்திருக்கின்றன என்பது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று 1948 ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தீர்மானம் தெரிவித்தது. ஆனால் இந்தியா அதனை இன்னும் அமுல் செய்யவில்லை.

பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவித்துவருகிறது. நிரந்தரமற்ற நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கே அது ஆதரவு வழங்கிவருகிறது.

எனினும் பாகிஸ்தான் காட்டி வரும் எதிர்ப்பு பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாவதைத் தடுத்துவிட முடியாது. சீனாவின் ஆதரவே அவசியமானது.

சீனா எதிர்க்கும் பட்சத்தில் இந்தியா தனது வாய்ப்பை இழந்துவிடும் சாத்தியம் இருந்து வருகிறது. சீனாவிடமிருந்து சாதகமான பதில் ஏதாவது வருமானால் அது ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனின் சீன விஜயத்தின் பின்னரே இடம் பெறலாம்.

# பழகிக் கொள்

அறிவில் நரியைப் போலிரு!
ஆடுவதில் மயிலைப் போலிரு!
உழைப்பில் எறும்பைப் போலிரு!
ஒற்றுமையில் காகத்தைப் போலிரு!
பலத்தில் யானையைப் போலிரு!
பணிவில் பசுவைப் போலிரு!
பாடுவதில் குயிலைப் போலிரு!
பேசுவதில் கிளியைப் போலிரு!
நன்றியில் நாயைப் போலிரு!
பண்பில் மனிதனைப் போலிரு!

- தர்ஷிகா சுரேந்திரன் -
(தரம்-6, வேம்படி மகளிர் கல்லூரி)

# நஷ்டம் வந்தால்!

## இவர்களுக்கு நஷ்டம் வந்தால்.....

| | |
|---|---|
| ஐஸ்வியாபாரி.... | உருகிப்போவார் |
| கண்ணாடி வியாபாரி.... | நொருங்கிப்போவார் |
| பூ வியாபாரி.... | வாடிப்போவார் |
| துணி வியாபாரி.... | நைந்து போவார் |
| மீன் வியாபாரி.... | நாறிப்போவார் |
| எண்ணெய் வியாபாரி.... | கொதித்துப்போவார் |
| மர வியாபாரி.... | சாய்ந்து போவார் |
| 'பல்பு' வியாபாரி.... | மங்கிப் போவார் |
| கப்பல் வியாபாரி.... | மூழ்கிப்போவார் |
| முட்டை வியாபாரி.... | உடைந்து போவார். |

- வ.றொபினா -
(மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை)

# கண்டுபிடியுங்கள்!



மேலுள்ள படங்களில் இரண்டு உருவங்கள் ஒரே மாதிரியானவை. அவை எவை?

# விடுகதைகள்

கீழே வரும் 14 சோடிக் கேள்விகளில் ஒவ்வொரு சோடிக்கும் ஒரே விடைதான் பதிலாக வரும். அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1) தலையணை அழகாவது எப்படி? பால் தயிராவது எப்படி?
2) நாயைக் கண்டு நடுங்குவதேன்? நடப்பவன் செருப்பைக் கழற்றுவதேன்?
3) மங்கை குமரியாய் இருப்பதேன்? மாடு பயிரை மேய்வதேன்?
4) குழந்தை அழுவதேன்? குப்பை தேங்குவதேன்?
5) குடி கெட்டுப் போவதேன்? பூவை வண்டு நாடுவதேன்?
6) திருப்பூங்குமரன் இறந்ததேன்? பாரி தேரைக் கொடுத்ததேன்?
7) இரத்தம் பெருகுவதேன்? இரசம் மணப்பதேன்?
8) பசுவில் பால் கறப்பதெப்படி? பாண்டவர் பிறந்ததெப்படி?
9) குதிரை வளர்வதெப்படி? செல்வம் அழிவதெப்படி?
10) முரசம் கேட்பதேன்? குளவிக்கு அஞ்சுவதேன்?
11) மாங்காய் கல்லெறி வாங்குவதேன்? தாங்காய் சோம்பேறியாவதேன்?
12) குழந்தையைக் கொஞ்சுவதெப்படி? கள்ளர் திருடுவதெப்படி?
13) பறக்க விடுவது எது? படித்துப் பெறுவது எது?
14) பட்டம் பறப்பது எதனாலே? பள்ளியில் படிப்பதும் எதனாலே?

(விடைகள் XV ஆம் பக்கத்தில்)




தொகுப்பு: நம்பி

# கொட்டைகளையும் சேர்த்துத் தின்றவர்

அக்பர் சக்கரவர்த்தியின் அரண்மனையில் ஒரு பெரிய விருந்து நடந்து கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கானவர்கள் அவ்விருந்தில் பங்கு கொண்டனர். மாமன்னர் அக்பரும் மதிநலமிக்க பீரபலும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.



விருந்தில் பலவகையான பலகாரங்கள் பரிமாறப்பட்டன. பல்வகையான பழங்களும் பரிமாறப்பட்டன.

சக்கரவர்த்தியும் பீரபலும் சுவாரசியமாகப் பேசிக்கொண்டு தமக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த பேரீச்சம் பழங்களைச் சுவைக்கத் தொடங்கினர்.

இருவரும் பேரீச்சம்பழக் கொட்டைகளை அவற்றைப் போடுவதற்கெனத் தங்கள் காலடியில் வைக்கப்பட்டிருந்த சிறிய கிண்ணங்களில் இட்ட வண்ணம் பழங்களைப் புசித்தனர்.

பீரபலைக் கிண்டல் செய்ய நினைத்த அக்பர், மெல்லத் தமது காலடியில் கிண்ணத்திலிருந்த பேரீச்சம்பழக் கொட்டைகளைப் பீரபலின் காலடியிலிருந்த கிண்ணத்தினுள் கொட்டிவிட்டார். அக்பரின் இந்தச் செயலை அறியாமலே பீரபல் பேரீச்சம்பழங்களின் சுவையில் திளைத்திருந்தார்.

சிறிது நேரம் கடந்தது. திடீரென்று அக்பர், 'பீரபல்! உமக்கு என்னதான் பேரீச்சம்பழத்தின்மீது ஆசையிருந்தாலும் இப்படியா அளவுக்கு மீறி உண்பது? உமது காலடியிலுள்ள கிண்ணத்தினுள் பேரீச்சம்பழக் கொட்டைகள் நிரம்பி வழிகின்றனவே. இப்படிச் சாப்பிட்டால் உடம்புக்கு ஆகுமா?' என்று பேச்சில் கேலி தொனிக்கக் கேட்டார்.

அப்பொழுதுதான் தனது காலடியில் இருந்த கிண்ணத்தைப் பார்த்தார் பீரபல். நொடியில் அக்பர்தான் இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டார். அக்பருக்குத் தக்கபதிலடி கொடுக்கத் தன்னைத் தயார்செய்து கொண்டு அக்பரைப் பார்த்து, 'மேன்மைதங்கிய பேரரசரே! என்னுடைய கிண்ணம் பேரீச்சம்பழக் கொட்டைகளால் நிரம்பி வழிவது உண்மைதான். ஆனால், உங்களுடைய கிண்ணத்தைப் பாருங்கள். அதில் ஒரு பேரீச்சம்பழக் கொட்டை கூட இல்லை. ஆனால் நீங்கள் பேரீச்சம்பழங்களை உண்டதை நானும் இங்குள்ள விருந்தினர்களும் கண்டிருக்கிறோம். நானாவது வெறும் பேரீச்சம்பழங்களைத்தான் உண்டிருக்கிறேன். ஆனால் தாங்களோ அவற்றைக் கொட்டைகளையும் சேர்த்தல்லவா உண்டிருக்கிறீர்கள்?' என்றார்.

தான் விரித்த வலையில் தன்னையே மாட்டிவிட்ட பீரபலின் திறமையை அக்பர் வியந்து பாராட்டினார்.

- கி. கஸ்தனி -
தரம்-7,மானிப்பாய் மகளிர் கல்லூரி.

# அறிஞர்களை அறியுங்கள்: ரவீந்திரநாத் தாகூர்



கல்கத்தாவில் 7-5-1861 ஆம் ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் பிறந்தார். இவருடைய தந்தையார் தேவேந்திரநாத் தாகூர் என்பவர். தாயார் சாரதா தேவி அம்மையார். தாகூரின் இயற்பெயர் ரவீந்திரநாத்.

பெரும் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தபடியால் வீட்டிலிருந்தபடியே கல்விகற்றார். இந்து மதத்தின் மீது தீவிர நம்பிக்கை கொண்டிருந்த தேவேந்திரநாத் தாகூர், தன் மகன் ரவீந்திரநாதனுக்கு தான் அறிந்தவற்றை கற்பித்தார். தந்தையிடம் சமஸ்கிருதம், ஆங்கிலம், இசை, ஓவியம் ஆகியவற்றை இல்லத்தில் இருந்தபடியே ஒன்பதாண்டுகள் படித்து, பத்தாம் வயதில் செயின்ட் சேவியர் பள்ளியில் சேர்ந்தார் ரவீந்திரர்.

இவருடைய அண்ணன்கள் வயதில் மூத்தவர்களாக இருந்ததால் பெரும்பாலும் அவர்களுடன் விளையாடாமல் தந்தையாருடன் சேர்ந்து விளையாடுவதுடன், தந்தையார் செல்லும் இடங்களுக்கும் செல்வார். இவரது தந்தையார் நிறுவியிருந்த சாந்தி நிகேதன் என்ற ஆசிரமத்திற்கு அடிக்கடி சென்று வருவார். அமைதியான சூழ்நிலையையும், இயற்கையுடன் ஒன்றிப் போகும் நிலையையும் அவர் கைவரப் பெற்றிருந்தார்.

தாகூரின் அண்ணன்கள் நன்கு படித்தவர்கள். அவர்களைப் போலவே தாகூருக்கும் உயர்கல்வியை அளிக்க விரும்பிய அவரது தந்தையார், ரவீந்திரரை லண்டனுக்கு அனுப்பினார். அங்கு ஆங்கில இலக்கியப்பட்ட வகுப்பில் சேர்ந்த ரவீந்திரர், அந்நிய நாட்டில் இருப்பது பிடிக்காமல், படிப்பைப் பாதியிலேயே விட்டுவிட்டு இந்தியா திரும்பினார்.

தான் காணும் காட்சிகளை அற்புதமாக கவிதையாக்கும் திறன் பெற்றிருந்த தாகூர், தன் தந்தையாருடன் இமயமலைக்குச் சென்றபோது கண்ட காட்சிகளையும் தனது குறிப்பேட்டில் எழுதிவைத்திருந்தார். இந்தியா திரும்பிய பிறகு, தனது லண்டன் அனுபவங்களைப்பற்றி "பாரதி" என்ற மாதப் பத்திரிகையில் எழுதிவந்தார். இந்தப் பத்திரிகையின் சொந்தக்காரர் தாகூரின் அண்ணன்.

எழுத்தார்வம் அதிகரித்ததால் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், காவியம் போன்ற அனைத்தையும் எழுத ஆரம்பித்தார்.

(XV ஆம் பக்கம் பார்க்க)





ராஜுவின் வீட்டில் உள்ள ஒரு பெரிய பெட்டியை மரப்பலகையால் மூட வேண்டியிருந்தது. பெட்டியின் நீளம் 12அடி. அகலம் இரண்டு அடி. வேலையாள் முத்துவை அழைத்து 8அடி நீளமும் மூன்று அடி நீளமும் கொண்ட பெரிய பலகையைக் கொடுத்து 'இந்தப் பலகையை இரண்டு துண்டுகளாக்கி இந்தப் பெட்டிக்கு அளவாக மூடி தயாரித்து வா' என்று கூறினான் ராஜு . புத்திசாலி வேலையாளான முத்துவும் அப்படியே செய்தான். அவன் பலகையை எப்படித் துண்டுபோட்டிருப்பான்? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# எது தெரியுமா?

கீழேயுள்ள படத் தொகுதிகளில் முதல் வரிசையில் மூன்று வடிவங்கள் உள்ளன. அந்த வரிசையில் நான்காவதாக வரவேண்டிய படம் அடுத்த வரிசையில் A,B,C,D,E என்ற ஐந்தில் எது என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.




# புதிர்க்கணக்கு

1. ஒரு குடும்பத்தில் தந்தை, மகள் உண்டு. தாய், மகன் உண்டு. கணவன், மனைவி உண்டு. அண்ணன், தங்கை உண்டு. இக்குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களின் அதிகுறைந்த எண்ணிக்கை என்ன?

2. ஒன்றுமுதல் பத்து வரையுள்ள எண்களின் கூட்டுத்தொகை என்ன?

3. குமாருக்கு 4 மகன்மார் உள்ளனர். ஒவ்வொரு மகனுக்கும் ஒரு தங்கை உண்டு. குமாருக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?

4. ஒன்றில் இருந்து இருபதுக்குள் 'ஒன்று' என்ற இலக்கம் எத்தனை தடவைகள் வரும்?

5. கமலன் நிமலனைவிட வயதில் மூத்தவன். நிமலன் அகிலனைவிட வயதில் மூத்தவன். அமலன் நிமலனைவிட வயதில் மூத்தவன். எனின் கமலனைவிட வயதில் மிக இளையவன் யார்?

6. நிருஷனிடம் 10 சதம் உள்ளது. அவனிடம் 3 சதம் குறைவாக இருந்தால் நிரோஷனா வைத்திருப்பதில் அரைப்பங்கு அவனிடம் இருக்கும். நிரோஷனா நிருஷனைவிட மேலதிகமாக வைத்திருக்கும் பணம் எவ்வளவு?

7. ஐந்து ஆடுகள், ஐந்து சாக்குப் புல்லை, ஐந்து நாள்களில் சாப்பிடுமாயின். ஓர் ஆடு, ஒரு சாக்குப் புல்லை எத்தனை நாள்களில் சாப்பிடும்?

8. பத்து ரூபாவுக்கு 3 மாம்பழங்கள் வாங்க முடியுமாயின் 110 ரூபாவுக்கு எத்தனை மாம்பழங்கள் வாங்கலாம்?

9. இரண்டாயிரம் அடி நீளமான புகையிரதம் ஒரு நிமிடத்துக்கு 2000 அடி என்ற வேகத்தில் 10,000 அடி நீளமுள்ள சுரங்கப்பாதையைக் கடக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?

10. அஸ்வினா 21 அங்குல நீளமுள்ள ஒரு தடியை வைத்திருக்கின்றாள். அதை அவள் இரண்டு துண்டுகளாக முறிக்கிறாள். ஒரு துண்டு மற்றைய துண்டிலும் பார்க்க இரு மடங்கு நீளமானதாயின் நீளம் கூடிய துண்டின் நீளம் யாது?

- நாகமணி மகேந்திரலிங்கம் -

(விடை XV ஆம் பக்கத்தில்)